515

515

1 MAY 1933

Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 4

இதழ் 4

செந்தமிழ் மாதசஞ்சிகை

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1351 துல்ஹஜ்ஜு ௴ 1933 ஏப்ரல் ௴

உள்ளடக்கம்.

1. ஸூரத்துல் முதவ்விபீன் ... 122
2. நாயக வாக்கியம் ... 127
3. ஹஜ்ஜின் பயன் ... 129
4. ஈதுல் அல்ஹா ... 130
5. குர்பானீ ... 131
6. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகம் 133
7. கஃபத்துல்லாஹ் ஷரீப் ... 138
8. ஓர் ஆச்சரிய நிகட்சி ... 143
9. ஞான தூதனின் விஷமத்துக்கு கசையடி 145
10. காசநோயைத் தடுப்பதெவ்விதம்? ... 151
11. அறிவிழந்த ஐரோப்பாவே! இஸ்லாமிடத்தி
லிருந்து படிப்பினை கற்றுக்கொள்வாயாக 153
12. நஞ்சிறார்கட்கு ... 155
13. மேனாட்டு நாகரீகத்தின் உண்மை ... 157
14. 15. செய்தித் திரள், ஆசிரியர்குறிப்பு 159—160

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K.R.SARMA

சந்தா நேயர்கட்கு.

மாண்புமிக்க நண்பீர் !

உங்களிலனேகருடைய சந்தா, சென்ற டிஸப்பர் மாதத்தோடு முடிவடைந்திருந்தும் நடைபெறும் 1933-ம் வருஷத்திற்குள்ள சந்தா ரூபாயை இதுவரை அனுப்பாதிருக்கின்றீர்கள். நமது அரும் மாசிகைக்கேற்பட்டுள்ள சந்தாத்தொகை மிகவும் சொற்பமாதலின் நண்பர்கள் அதனை முன் பணமாக அனுப்பி வைத்தாலன்றி தக்கமுறையில் காரியாதிகளைக் கவனித்துச் செல்ல முடியாதாகையால் அன்பர்கள் தயவு கூர்ந்து தங்கள் சந்தாக்களைத் தாமிதமின்று அனுப்பி வைப்பார்களென்று மிகவும் எதிர்பார்க்கிறோம்.

அறிவிப்பு.

அன்பர்காள் !

நமது பத்திரிகாலயமும், ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்க ஆபீசும் சென்னை போஸ்டாபீஸ் தெருவு நெ. 43. A-க்கு மாற்றப்பட்டிருப்பதால், இனி கீழ்கண்ட விலாசத்திற்கே அட்ரஸ் செய்யும்படி கோருகிறோம்.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெருவு,

G. T. மதருஸ்.

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 4	ஹிஜ்ரி 1351 துல்ஹஜ்ஜு மீ 1933 ஹு எப்ரல் மீ	இதழ் 4

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 MAY 1933
MADRAS

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின்
திருநாமத்தைக்கொண்டு (இதனை ஆரம்பிக்கிறேம்.)

ஸூரத்துல் முதவ்விபீன்.

1. அளவை நிறுவையில் குறைவு செய்வோருக்கு கேடுண்டு,

2. அவர்கள் மனிதர்களிடமிருந்து அளந்தெடுக்கும்போது நிறைய எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

3. மேலும் அவர்கள் அளந்தோ அல்லது நிறுத்தோ கொடுக்கும்போது குறைவு செய்துவிடுகிறார்கள்.

4. நிச்சயமாக அவர்கள் எழுப்பப்படுவோர்களென்று எண்ணவில்லையா?

5. வலுப்பமான ஒரு (மறுமை) நாளைக்காக,

6. மனிதர்கள், சர்வலோகங்களின் நாயனின் சன்னிதானத்தில் நிற்கக்கூடிய நாள்,

7. (காரியம்) அவ்வாறில்லை, நிச்சயமாக தீயவர்களின் (கருமங்கள் எழுதிவைக்கப்பட்டிருக்கும்) பட்டோலையானது, ஸிஜ்ஜீன் என்னும் நரகத்திலாயிருக்கும்,

8. மேலும் (அந்த) நரகம் எப்படிப்பட்டதென்பது உமக்குத் தெரியுமா?

9. (அஃதோர்) எழுதப்பட்ட புத்தக (மிருக்கு மிட) மாகும்.

10. பொய்யாக்கி வைத்தோருக்கு, அந்நாளில் கேடுதானுண்டு.

11. நியாயத் தீர்ப்புநாளைப் பொய்யாக்கி வைத்தோருக்கு,

12. மேலும் வரம்பைக்கடந்து சென்ற பாவி தவிர (வேறெவனும்) பொய்யாக்கமாட்டான்.

13. அவன்மீது நம்முடைய ஆயத்துக்கள் ஓதிக்காண்பிக்கப் படுமாகில், (இதுவோ) முன்னோர்களின் கட்டுக்கதை என்று சொல்வான்.

14. (காரியம்) அவ்வாறன்று. ஆனல் அவர்கள்(உலகின்கண்) சம்பாதித்துக்கொண்

டதானது அவர்களது ஹிருதயங்களின் மீது துருப்பிடித்துக்கொண்டிருக்கிறது.

15. நிச்சயமாக அவர்கள், அந்நாளில் தங்களுடைய நாயனை விட்டுத் தடுக்கப்பட்டவர்களாகயிருப்பார்கள்.

16. பிறகு அவர்கள் நரகத்திற்குள் போடப்படுவோர்கள்.

17. பிறகு நீங்கள் எதை (எந்தநாளை) பொய்யாக்கிவைத்தீர்களோ அஃது இதுவாகத்தானிருக்குமென்று சொல்லப்படும்.

18. நிச்சயமாக நல்லவர்களின் (கருமங்கள் எழுதிவைக்கப்பட்ட) பட்டோலையானது இல்லிய்யீன் என்னும் உயர்ந்த இடங்களிலாயிருக்கும்,

19. மேலும் இல்லிய்யீன் என்பது இன்னதென உமக்குத் தெரியுமா?

20. (அஃதோர்) எழுதப்பட்ட புத்தக (மிருக்குமிட) மாகும்.

21. அதனை அல்லாஹ்விற்கு முடுகுதலாக்கப்பட்ட அடியார்கள் நிதர்சனமாய்க் காண்பார்கள்.

22. நிச்சயமாக நல்லோர்கள் சுவண்டியிலிருப்பார்கள்.

23. (நல்லோர்) ஆசனங்கள் மீதிருந்து பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

24. அவர்களின் வதனங்களில் அருட்கொடையின் செழிப்பைத் தெரிந்து கொள்வாய்

25. அவர்கள் முத்திரையிடப்பெற்ற பரிசுத்தமான பானத்தினின்றும் குடிப்பாட்டப்படுவோர்கள்.

26. அது கஸ்தூரியினால் முத்திரையிடப்பட்டிருக்கும். மேலும் அதில் (அக்குடிப்பில்) அபிலாஷையுள்ளவர்கள் அபிலாஷை கொள்ளட்டும்.

27. அதனுடைய கலப்பாகிறது உயர்ந்த மேலான தண்ணீரில் நின்றுமாயிருக்கும்.

28. அல்லாஹ்வுக்கு முடுகுதலாக்கப்பட்ட அடியார்கள் அருந்தும் ஊற்றாயிருக்கும்.

29. நிச்சயமாக (உலகின்கண்) குற்றஞ்செய்தவர்கள், நன்னம்பிக்கை (ஈமான்) கொண்டவர்கள் மீது சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

30. மேலும் அவர்கள், (முஃமின்கள்) அவர்கள் (குப்பார்கள்) ஓரமாய்ச் செல்வார்களாயின், அவர்கள் கண்ஜாடை காட்டிக்கொண்டிருப்பார்கள்.

31. மேலும் அவர்கள் (குப்பார்கள்) தங்கள் குடும்பத்தார்களிடம் திரும்பிச்செல்லும்போது (முஃமின்களை) இழிவு செய்தவர்களாகத் திரும்புவார்கள்.

32. மேலும் அவர்களை (முஃமின்களைக்) கண்டால் நிச்சயமாக இவர்கள் வழிகெட்டவர்களென்று சொல்வார்கள்.

33. மேலும் அவர்கள், (காபிர்கள்) அவர்கள் (முஃமின்கள்) மீது காவலாளியாக அனுப்பப்படவில்லை.

34. ஆதலின் நன்னம்பிக்கை (ஈமான்) கொண்டவர்கள் இன்று (மறுமை நாளில்) நிராகரித்தவர்கள் (குப்பார்கள்) மீது சிரிக்கின்றார்கள்.

35. உயர்ந்த ஆசனங்கள் மீதிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

36. குப்பார்கள் (நிராகரித்தவர்கள்) தாங்கள் செய்த காரியத்திற்குள்ள பிரதிப் பலனைப் பெற்றுக்கொண்டார்கள்.

[அதாவது அளவையிலும் நிறுவையிலும் இதரர்களின் பாத்தியதைகளை மோசஞ்செய்பவர்களுக்கு பெருங்கெடுதி ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் இதரர்களின் சாமான்களைத் தங்களுக்காக அளந்தெடுக்கும்போது நிறை பூர்ணமாக எடுத்துக்கொள்ளும் பாவனை காட்டி சற்று அதிகமாகவே எடுத்துக்கொள்கிறார்கள்; தங்களுடைய சாமான்களை இதரர்கட்கு அளந்தோ அல்லது நிறுத்தோ கொடுக்குங்கால் குறைவுசெய்து அவர்களுக்கு நஷ்டத்தை விளைவித்து விடுகின்றார்கள். சகல மனிதர்களும் கப்ரைவிட்டெழும்பி ஆண்டவனது சன்னிதானத்தில் நிற்கும் பயங்கரமுடைய ஒருமகத்தான தினத்தில் இவ்வாறு சதிசெய்தோரும் எழும்பி நிற்கும்படி ஏற்படுமென்பதை அன்னோர் நினைக்கவில்லையா? அளவை நிறுவையில் குறைவுசெய்வோர் இவ்வாறு மறுமை நாளை மறந்திருக்கலாகாது. தீயர்கள் இவ்வுலகின்கண் புரிந்துவந்த செயல்களடங்கலும் எழுதிவைக்கப்பட்ட பட்டோலையானது நிச்சயமாக ஸிஜ்ஜீன் என்னும் நரகத்திலிருக்கிறது; அதில் பாவிகளின் பெயர்

அடையாளம், அவர்கள் புரிந்த காரியங்கள் யாவற்றும் எழுதப்பட்டிருக்கிறது. மறுமை நாளைப்பொய்யாக்கிவைத்தோர் அந்நாளையில் பெரும்வேதனை அடைவார்கள். அன்னோர் இவ்வுலகினிலிருக்குங்கால், நன்மைதீமைகளுக்குக் கூலிகொடுக்கப்படு மென்பதை ஒப்புக்கொள்ளாது அதனைமறுத்து வந்ததின் பயனாய், முழுமனதோடு பஹிரங்கமாகப் பாவகாரியங்களி லீடுபட்டு அதனைப்புரிந்து வந்தார்கள். இந்நிலைமையில் அவர்கள்மீது ஆண்டவனது திருஷ்டாந்தங்கள் எடுத்துக் காட்டப்பட்டு மறுமைநாளின் விபரங்கள் கூறப்படுமாகில், ஈதெல்லாம் ஆதிகாலந்தொட்டு மனிதர்களை பயங்காண்பிப்பதற்காக அனுஷ்டிக்கப்பட்டுவரும் பழங்கதைகளே யன்றி வேறில்லை என பரிகாசமாய்க் கூறுவார்கள். அவர்கள் இவ்வாறு கூறிவந்ததற்குக் காரணம், அவர்கள் புரிந்துவந்ததுற்செய்கைகளின்பயனாய் அவர்கள் ஹிருதங்களில் துருப்பிடித்துக் கொண்டதேயாகும். இதனால் மறுமைநாளில் அன்னோருக்கும் ஆண்டவனுக்கும் மத்தியில் திரை ஏற்பட்டுப் போவதால் ஆண்டவனது தெரிசனையைப் பெறாத பெயர்கெட்ட மூதேவிகளாய் நரகத்தில் எறியப்பட்டு உலகின்கண்ணிருங்காலை எந்த நாளை, எந்தவேதனையை மறுத்துக்கொண்டிருந்தீர்களோ அதனை திருஷ்டாந்தமாகக் கண்டு கொள்ளுங்களென அன்னோருக்குக் கூறப்படும். மேலும் மறுமையைப் மறுத்துக் கொண்டிருந்தோர்,நல்லோர் புரிந்துவரும் நற்காரியங்கள் யாவற்றும் வீணானதெனக் கருதியிருந்தார்கள். விஷயம் அவர்கள் கருதியிருந்ததுபோலில்லை; நிச்சயமாக உண்மை அடியார்களின் செய்கைகள் எழுதிவைக்கப்பட்ட பட்டோலையானது 'இல்லிய்யீன்' என்னுமிடத்திலிருப்பதால் அவர்கள் மரணமடைந்தபின் அதன் பலாபலன்களைப் பெற்று பலவாறான சுவண்டிகளை அனுபவித்தும், அவர்கள் மனம் விரும்பும் சகல வஸ்துக்களைப் பெற்றும் சுகஜீவியாக வாழ்ந்துகொண்டு அழகான ஆசனங்களில் வீற்று சுவர்க்கத்தின் பற்பல காட்சிகளையும், நரகவாதிகள் அடையும் சகியாவேதனைகளையும் பார்த்துக் கொண்டிருப்பார்கள். நரகத்தில் வேதனை அடைபவர்களைப் பார்ப்பது கொண்டு அவர்களுக்கு எவ்விதக் கவலையுமேற்படாது வதனத்தில் அருட்கொடையின் செழிப்பே தோன்றும். சுத்தமான ஊற்றிலிருந்து வடிந்து கஸ்தூரியால் முத்திரையிடப்பெற்றிருக்கும் பானத்தை அன்னோருக்கு அருந்தக் கொடுக்கப்படும். மேலும் பாவஞ்செய்த காபிர்கள் மறுமைநாளை மறந்து உலகின் ஆசாபாஸங்களில் மூழ்கி அதனையே சதமென்று நினைத்தார்கள்; தங்கள் சமீபத்தில் முஸ்லிம்கள் செல்லுங்கால் அவர்களைக் கண்டு ஒருவருக்கொருவர் கண்ஜாடைகாட்டிச் சிறித்துக் கொண்டும், தங்கள் குடும்பத்தார்களிடம் திரும்பும்போது முஃமின்களை இழிவு படுத்திக் கூறிக்கொண்டும், முஃமின்களை காணுந்தோரெல்லாம் இவர்கள்தான் வழிகேடர்களென்றும் மறுமையில் இவர்களுக்கு ஏதோ கிடைக்கப்போகிறதாக வீண்கனவு கண்டு தற்சமயம் முகரூபில் கிடைக்கும் இன்பசுகங்களை மறந்துகெட்டவர்களென்றும் கூறிக்கொண்டிருந்தார்கள். முஃமின்களுக்கு நேர்வழி காண்பிப்பதற்காகவும்,ஒவ்வொரு இடத்திற்கும் அவர்களைப் பின்தொடர்ந்து குறைசொல்லிக்கொண்டு திரிவதற்காகவும், சிரித்துப்பரிகாசஞ்செய்வதற்காகவும், கண்ஜாடை காட்டவும் அல்லாஹ்தஆலா அந்த காபிர்களை இவ்வுலகின்கண் அனுப்பிவைக்கவில்லை. ஆகவே உலகின்கண்புரியப்பட்டுள்ள நன்மைதீமைகளுக்குக் கூலிபெறும் அந்நாளில், காபிர்களுக்கு ஏற்படும் நிகழ்ச்சிகளை முஃமின்கள் பார்த்துச் சிரிப்பார்கள்; உயர்ந்த ஆசனங்களின்மீது வீற்றிருந்து இந்த காபிர்கள் உலகின் கண்ணிருந்துகொண்டு கேலிபரிகாசஞ்செய்துகொண்டும் ஒருவருக்கொருவர் கண்களை சிமிட்டிக்கொண்டும் முஃமின்களை வழிகேடர்களென்று கூறிக்கொண்டு மிருந்ததற்குள்ள தெண்டனையை அனுபவிக்கிறார்களென தங்களுக்குள்பேசிக் கொண்டிருப்பார்கள் என்பதே]

இவ்வத்தியாயம் மக்கீ என்றும், மக்காவில் இறங்கிய ஸூராக்களில் கடைசியானதென்றும் இப்னுமஸ்ஊத், லஹ்ஹாக், முகாத்தில் இப்னு அப்பாஸ், இப்னுஜுபைர் (ரலி,ம்) முதலானோர் கூறுகின்றார்கள். மதீனாவில் இறங்கியதென்றும், எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் மதீனமாநகருக்கு வந்தவுடன் இறக்கியதென்றும் ஹஸ்ரத் ஹஸன், இக்ரிமா (ரலி,ம்) இவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் முந்திய சொல்தான் பிரபல்யமானதாகும். இவ்வாறு அபிப்பிராய

பேதமேற்பட்டதற்குக் காரணம், உலக தயாளர் (ஸல்.) அவர்கள் மக்காவை வெறுத்து மதீனமாநகருக்குச் சென்ற காலை அங்குள்ளோர் லேவாதேவி செய்வதிலும் அளவை நிறுவையிலும் கம்மி ஜாஸ்தி செய்துகொண்டிருப்பதைப் பார்த்து அவர்களுக்கு ஆரம்பமாக ஒரு இடத்தில் இந்த ஸூரத்தைத்தான் ஓதிக்காண்பித்து, அளவை நிறுவையில் வித்தியாசஞ் செய்வதனாலேற்படும் கெடுதிகளைத் தெரிவித்தார்கள். அதனால் இந்த ஸூரத் மதீனாவில் இறங்கியதென அநேகர் அபிப்பிராயப்பட்டனர். ஆகவே மதீனாவாசிகள் அன்றுமுதல் அளவை, நிறுவையில் குறைவு செய்வதை விட்டுவிட்டார்கள். இற்றைக்குங் கூட மதீனமாநகர் அவ்விஷயத்தில் சிறந்து விளங்குவது போல் வேறு எந்த தேசமும் காணமுடியாதென்பது திண்ணம்.

இதன் ஆரம்பத்தில் ‘முதவ்விபீன்’ அளவை நிறுவையில் குறைவுபடுத்துவோர் விஷயமாய்க் கூறப்பட்டிருப்பதால் இஃது “ஸூரத் துல்முதவ்விபீன்” என்னும் திருப்பெயருடன் விளங்கி வருகிறது. இதில் மானிடர்களுக்குள்ள பாத்தியதையை அபகரித்து விடுவதுகொண்டு குற்றவாளியாய் விடுகிறான் எனக் கூறப்பட்டிருப்பதால், அவன் தன் நாயன்மீது ஈமான் கொள்வதுடன் அவனது வேதங்கள் ரசூல்மார்களை உண்மை கொள்வதுபோன்ற அரும் பெரும் காரியங்களை விட்டிருப்பது கொண்டு எவ்வளவுதூரம் வேதனைக்காளாகிறான் என்பது நன்கு புலனாகும்.

இதன் முதலாவது வாக்கியத்தில், அளவை நிறுவையில் குறைவு செய்வோருக்கு கேடுண்டெனக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, அளவை நிறுவையில் வித்தியாசஞ் செய்வோன் இம்மை மறுமை இருபதியிலும் பலவாறான கஷ்ட சங்கடங்களுக்காளாக வேண்டியிருக்கும். எனவே, அவ்வாறு செய்வோனை இதரர்கள் இலேசாக மதிக்கின்றனர்; அவனது காரியங்கள் முழுதும் கைகூடி வருவதில்லை; பற்பல வியாதிக்கும் உலகின் பலவாறான கஷ்டசங்கடங்களுக்கும் ஆளாகவேண்டியிருக்கிறது. மறுமையிலோவெனில், நரகவேதனை அடைந்து கஷ்டப்பட்டு வாணாள் முழுதும் அழுதுகொண்டிருக்க வேண்டியதேற்படும். அவனுக்கு உலகிலேற்படும் கஷ்டங்கள் விஷயமாய் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கீழ்வருமாறு கூறியிருக்கின்றார்கள்: அதாவது, ஐந்து காரியங்களுக்காக ஐந்து தண்டனை கொடுக்கப்படுகிறது. (1) எக்கூட்டத்தினர் வார்த்தைப் பாட்டிற்கு மாற்றஞ் செய்கின்றார்களோ அவர்கள்மீது பகைவர்கள் ஆதிக்கங்கொள்கின்றார்கள். (2) எவர்கள் தங்களுக்கேற்பட்டுள்ள மன இச்சையின் மேலீட்டால் ஆண்டவனது கட்டளையை அலக்ஷியஞ் செய்கின்றார்களோ அவர்கள் மிடுமைத்தனமென்னும் வியாதியிலகப்பட்டு விழிப்பார்கள். (3) எவர்களில் பரஸ்திரீயுடன் நுகர்ச்சி செய்வதென்னும் துர்நடத்தையிருக்கின்றதோ அன்னோர் வாந்தி பேதி முதலிய வியாதியால் மாண்டு போவார்கள். (4) எவர்கள் அளவை நிறுவையில் கூடுதல் குறைவு செய்து சதி புரிகின்றார்களோ அன்னோர் பஞ்சத்தைக் கொண்டு சோதிக்கப்படுவார்கள்; அவர்களின் வெள்ளாமை உற்பத்தியில் குறைவேற்பட்டுவிடும். (5) எவர்கள் ஜகாத், தானதருமங்கள் புரிந்து ஏழைகளின் பாத்தியதைகளைச் சரிவர நிறைவேற்றாதிருக்கின்றார்களோ, அவர்களுக்கு மழை தடைபட்டுப் போம் என்பதே. ஆனால் அல்லாஹ்தஆலா ஒருவகுப்பார் புரிந்துவரும் அதிக்கிரமங்களைக்கண்டு அவர்கள்மீது உடனே கஷ்டங்களை அனுப்பிவிடாமல் மேலும் மேலும் அன்னோர் அவ்வேலையில் தைரியமாக ஈடுபட்டு கடைசியில் ஒரேஅடியாய் அழிந்து நாசமாய்ப் போவதற்காக விட்டுவைக்கிறான். தவிர மானிடன்தான் உலகின்கண் புரிந்துள்ள நன்மை தீமைகளுக்கு மறுமைநாளில் ஆண்டவனது சன்னிதானத்தில் கூலியோ தண்டனையோ அடைவான் என்பது நிக்ஷயமாதலின் மானிடன் மரணமடைந்தபின் மண்ணோடு மண்ணாய்விடுவான்; இம்மையில் நன்மைபுரிந்தோனுக்கு நற்கூலியோ தீயோனுக்கு தண்டனையோ கொடுப்பதென்பது கிடையாது; அவன் தனது மன இஷ்டப்படி நாடியவைகளைச் செய்துகொண்டிருக்கலாம்; கேழ்ப்பார் யாருமில்லை என்று நினைத்துக்கொண்டிருப்பது சரியல்லவெனக் கூறி, இவ்வுலகின்கண் கெடுதிபுரிந்தோர்கள் செய்துள்ள தினசரி காரியாதிகள் யாவும் எழுதிவைக்கப்பட்டுள்ள பட்டோலை ஸிஜ்ஜீன் என்னுமிடத்திலிருக்கிறது என்று இதன்

ஒன்பதாவது வாக்கியத்தின்மூலம் தெரிவிக்கின்ருன்.

இதன் பத்தாவது வாக்கியத்தில் பொய்யாக்கிவைத்தோருக்கு அந்நாளில் கேடுதானுண்டு எனக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது கெட்டவர்களும், மறுமைநாளுண்டென்பதை மறுப்பவர்களும் நரகத்திற்குப் போகும்நாள் வெகுதூரத்திலிருக்கிறதெனக் கருதிவிடவேண்டாம் அது சமீபத்தில்தானிருக்கிறது ஆகவே மறுமையைப்பொய்யாக்கிவைத்தோருக்கு அந்நாளில் பெருங்கெடுதி நேரிடும் எனத் தெரிவிக்கின்ருன். துர் அதிர்ஷ்டவசமாய் தெய்வ வாக்கைப் பொய்யாக்கிவைக்கும் சந்தர்ப்பமும் இக்காலை ஏற்பட்டுப்போயிருக்கிறது. எனவே சிலர்களோவெனில், அல்லாஹ்தஆலா உண்டென்பதையே மறுத்து ஆண்டவன் கிடையாதென்றும், வஸ்துக்கள் தானே உற்பத்தியாகி தானே அழிந்துபோகிறதென்றும், ஆண்டவன் உண்டென்று கூறுவது ஓர் எண்ணமே யாகுமென்றும், அது வெகுநாட்களுக்கு முன்னிருந்தே நமது செவிகளில் விழும் ஒரு வார்த்தையேயன்றி வேறில்லை என்றும் கூறுகின்றனர். இந்நாஸ்தீகக்குழாத்தினர்கள் இக்காலை பிரான்ஸ், ரஷ்யா முதலிய தேசங்களில் மிகுதமாய்க் காணப்படுகின்றனர். சில புதிய ஆராய்ச்சிகளின் தோற்றங்களானது அன்னோரை நாஸ்தீகமென்னும் இருள்சூழ்ந்த படுகுழியில் ஆழ்த்திக்கொண்டேசெல்கின்றது. இன்னோரிற் சிலர் இயர்க்கைவாதிகளாகவு மிருக்கின்றனர். சிலரோவெனில் உலகின்கண்காணப்படும்தோற்றங்களெல்லாம் எண்ணங்களேயாகுமென்று கூறுகின்றனர். தவிர, அவர்களிற் சிலர் ஆண்டவன் உண்டென்பதை மறுக்காவிடினும் அவன் தனித்தவனுகயிருப்பதையும், அவன் தூய்மை வாய்ந்த தன்மையுடையவனுக இருப்பதையும், அவன் அபார சக்தியினையுடையவனுக இருப்பதையும் மறுக்கின்றனர். வேறு சிலர் ஆண்டவனல் படைக்கப்பட்ட வஸ்துக்களை ஆண்டவனுக்கு இணையாகப்பாவிக்கின்றனர். மற்றுஞ் சிலர், சூபியாக்கள் பேரின்ப இச்சையில் முழுகியோர் முதலானவர்களின் நடைமுறையை நன்கு தெரிந்துகொள்ளாது பொதுஜனங்களை ஏமாற்றுவதற்காக அம்மகான்களின் சில வாக்கியங்களையும் கவிகளையும் எடுத்தாண்டு முஷ்ரிக்களாய்விடுகின்றனர். வேறு சிலர் தோற்றங்களெல்லாம் பூராயமானதென்றும் அதனை ஆக்கவோ அழிக்கவோ ஆண்டவனுக்கு சக்தியில்லை என்றும் கூறுகின்றனர். இதுவெல்லாம் ஒருபக்கல்கிடக்க, சிலர்களோவெனில் நபிமார்களைப் பொய்யாக்கிவைத்து யாதொரு நபியையும் ஒப்புக்கொள்ளாமலிருப்பதுடன் நபிமார்கள் வரவேண்டிய அவசியமுங் கிடையாதென்று சொல்லித் திரிகின்றனர். மற்றுஞ் சிலர் ஏகதேசத்தில் நபிமார்களை ஒற்றுக்கொண்டபோதிலும் சிற்சில நபிமார்களை ஒப்புக்கொள்கிருர்களில்லை. உதாரணமாக எஹூதிகள், ஹஸ்ரத் ஈஸா (அலை.) முஹம்மது நபி (ஸல்.) இவர்களை ஒப்புக்கொள்கிறதில்லை. கிறிஸ்தவர்கள் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்களைப் பொய்யாக்கிவைக்கின்றுர்கள். ஆகவே இவர்களடங்கலும் பொய்யாக்கிவைத்தவர்களே யாகுமாதலின் மறுமைநாளில் இன்னோர்மீது கேடுண்டாயிருக்கிறதென்பது திண்ணம். மேலும் மறுமை நாளைப் பொய்யாக்கிவைத்தோர் வரம்பைக் கடந்து மனப்பூர்வமாய் கெட்ட வேலைகளில் பிரவேசிக்க முற்பட்டுவிட்டார்கள் ஆகவே அன்னோர்மீது ஆண்டவனது திருவாக்கியங்கள் எடுத்துக் காண்பிக்கப்படுமாகில் அதிலும் முக்கியமாய் மறுமைநாளில் கூலி கொடுக்கப்படும் செய்தியை விளக்கிக் கூறப்படுமாகில், அதனைக்கேட்டு பரிகாசஞ் செய்யுந்தோரணையில் ஈதெல்லாம் முற்காலத்தோர் இட்டுக் கட்டிய பழங்கதைகளே யாகுமென்றும், இவைகளை எல்லாம் யார் கண்ணல் கண்டதென்றும் கூறுகின்றனர். துர் அதிர்ஷ்டவசமாய் இக்காலை ஆங்கிலங் கற்றோர்களில் சிலரினுங்கூட இவ்வாடை வீசுகின்றது. ஆரம்பமுதல் இன்னோர் நாஸ்திகக் கொள்கையுடைய மேனுட்டாருடன் கலந்து பழகி வருவதன் காரணமாக அவர்களது துர்க்கொள்கைகள் இவர்களது ஹிருதயங்களில் பதிந்துபோய்விடுவதன் பயனுய் இன்னோரும் மறுமை உண்டென்பதை மறுக்க முன்வந்திருக்கின்றனர். ஆகவே, இன்னோரெல்லாம் மறுமையைப் பொய்யாக்கி வைத்த கூட்டத்தில் முதன்மையானவர்களாகும்.

இதன் 14-வது வாக்கியத்தில் அவர்கள் உலகின்கண் சம்பாதித்துக்கொண்டதானது அவர்களது ஹிருதயங்களின் மீது துருப்பிடித்துக் கொண்டிருக்கிறதெனக் கூறுகின்

றான். அதாவது மறுமையை மறுத்துக் கொண்டிருப்போரின் மறுப்பும், அவர்கள் மீது ஆண்டவனது ஆயத்துக்களை ஓதிக்காண்பிக்கப்படுங்கால் இவைகளெல்லாம் பழங் காலத்து கதைகளென்று அவர்கள் கூறிக் கொண்டிருந்ததும், அவர்களது துர்ச்செய்கைகளின் பயனாய் மனதில் துருப்பிடித்திருந்ததினாலேற்பட்டதே யாகும். இதற்காகத்தான் முஃமினான மனிதன் ஒரு பாவத்தைச் செய்வானாகில் அவனுடைய ஹிருதயத்தில் ஒரு கருப்புப் புள்ளி விழுந்துவிடுகிறது; பிறகு அவன் அதைவிட்டுத் தௌபாச்செய்து மீண்டு வருவானாகில் அப்புள்ளி போய்விடுகிறதென்றும், அவ்வாறின்றி மறுபடியும் அவன் பாவஞ் செய்துகொண்டே போவானாகில் அப்புள்ளி அதிகமாகிக்கொண்டேபோய் நன்கு பதிந்து அதில் துருப்பிடித்துப்போய் விடுகிறதென்றும் எம்பெருமானார் (ஸல்.) கூறியிருக்கின்றார்கள். இந்த இடத்தில் ஹிருதயத்தில் கருப்பு ஏற்படுவதென்று கூறப்படுவதன் கருத்தானது ஹிருதயமென்னும் இரைச்சித் துண்டின்மீது கருப்புப்புள்ளி விழுந்துவிடுகிறதென்பதல்ல. எனவே, கல்பு என்பதன் கருத்தானது மானிடனது திரேகத்தில் அமைந்துள்ள ஓர் ஆத்மசக்தியாகும் பாவங்களின் சம்மந்தம் அதனுடயே ஏற்படுகிறது ஆகவே மானிடன் பாவஞ்செய்வது கொண்டு அதில் இருள் ஏற்பட்டுவிடுகிறது. மேலும் மேலும் அவன் பாவஞ்செய்து கொண்டு போவதால் அந்த இருளும் அதிகமாய்க் கொண்டேபோய் அதில் ஒரு திரை ஏற்பட்டுப் போகிறது அதனால் அவன் மரணமானபின் ஆண்டவனது தஜல்லி என்னும் பிரகாசத்தைக் காண்பதற்குக் கூடாமலாய் விடுகிறது என்பதே. இதனால்தான் அவர்கள் அந்நாளில் தங்கள் நாயனைப் பார்ப்பதை விட்டு ஒரு திறை மறைத்துக்கொண்டிருக்குமென்றும், அவர்கள் தெரிசனையைவிட்டுப் பெயர் கெட்டவர்களாய் விடுவதன் காரணமாய் நரகத்தில் எறியப்படுவார்களென்றுங் கூறுகின்றான்.

இதன் 22-வது வாக்கியத்தில் நல்லோர் சுவண்டியிலிருப்பார்கள்எனக்கூறப்பட்டிருக்கிறது. அதாவது, சுவண்டி என்பது சுவர்க்கத்தில் காணப்படும் அழகிய மாளிகை, தீன் குடிப்பு உடுப்பு ஏர்வாகணம் கன்னிகை வேலையாள் முதலிய யாவற்றையும் குறிக்கும். எனவே நல்லடியார்கள் அளவற்ற சுவண்டிகளை அனுபவித்துக்கொண்டு உயர்ந்த நவரத்தினங்களாலும் மெல்லிய பட்டுகளினாலும் அழகுபடுத்தப்பெற்ற ஆசனங்களில் வீற்று சுவர்க்கத்தின்பலவாறான காட்சிகளையும்,நரகவாதிகள் படும் கஷ்டங்களையும் பார்த்துக் கொண்டு சந்தோஷமாக உட்கார்ந்திருப்பார்கள். நரகவாதிகள் கஷ்டப்படுவதைப் பார்த்து இன்னோருக்கு எவ்வாறான மனவருத்தமு மேற்படமாட்டாது ; சந்தோஷநிலைமையில் 14-ம் நாள் சந்திரனைப்போன்று அவர்களின் வதனங்கள் இலங்கிக்கொண்டிருக்கும்.

இதன் 29-வது வாக்கியத்தில் நிச்சயமாக உலகின்கண் குற்றஞ் செய்தவர்கள் ஈமான் கொண்டவர்கள்மீது சிரித்துக்கொண்டிருந்தார்களெனக் கூறுகின்றான். அதாவது, இதற்கு முன்னுள்ள வாக்கியங்களில் மானிடர்கள் மறுமையில் கிடைக்கும் காருண்யங்கள்மீது பிரீதிகொள்ளவேண்டும் ; அதுதான் விருப்பங்கொள்ளத்தக்கனவாகும் என அறிவித்திருப்பதால், இவ்வாக்கியத்தின்மூலம் மானிடர்கள் உலகின் ஆசாபாசங்களின்மீது பற்றுக்கொண்டு அதிலேயே மயங்கி மறுமையை மறந்துவிடுவதுமன்றி மறுமையின்மீது உறுதிகொண்டு அதற்காகப் புண்ணியஞ் செய்து வருவோரையும் கேலி பரிகாசஞ் செய்து அவர்களுக்கு நோவினை கொடுக்க ஆயுத்தமாய்விடுகின்றார்கள் என்றும், பிறகு மறுமைநாளில் இக்கெடுதிகளுக்கெல்லாம் அல்லாஹ்தஆலா நீதம் புரிய நீதி என்னும் தராசைக் கையில் பிடிக்குங்கால் தக்கதண்டனை அடைவார்களென்றும், அந்நாளில் முஃமின்கள் இன்னோரைப்பார்த்துச் சிரித்துக்கொண்டிருப்பார்களென்றும் தெரிவிக்கின்றான்.

இவ்வாக்கியத்தைக் கொண்டும் இதற்குப் பின்னுண்டான வாக்கியங்களைக் கொண்டும், உலகின்கண் ஆண்டவனுக்கு மாறு செய்த வகுப்பார்களிடம் காணப்பட்ட நான்கு குற்றங்களை விளக்கிக்காட்டி (1) அவர்கள் முஃமின்களைக்கண்டால் சிரித்துக் கொண்டிருப்பார்களென்று கூறுகின்றார். எனவே ஒருவரைப் பார்த்துச் சிரிப்பது அவருக்குப் பெரும் நோவினை கொடுப்பது போலாகும்; இது மானிடத்தன்மைக்கு வெகுதூரமான செயலுமாகும் ; இதரர்களைக்கண்டு நகையாடுபவன் தன்னை மேலாகவும் இதரர்களைக்

கேவலமாகவும் நினைக்கவேண்டிய சந்தர்ப்ப மேற்படுகிறது; இது மாபெரும் குற்றமாகும். ஒருவனைக்கண்டு சிரிப்பவன், சிறிக்கப் பட்டவனில் காணப்படும் குற்றங் குறைகள் தம்மிடம் கிடையாதென்னும் தைரியத்தோடு தான் சிரிக்க முற்படுகிறான். ஆனால் எல்லோருக்கும் எஜமான் ஒருவன் இருக்கின்றான்; அவன் தன்னைக் கேவலமாக்கிவிட்டுச் சிறிக்கப்பட்டவனை மேலாக்கி விடுவான் என்பது அவனுக்குத் தெரியாது போலும். இத்தகு செய்கையானது ஆண்டவனைக் கோபத்திலாக்கி வைத்துவிடும் செய்கையாகும். இதற்காகத்தான் "எவனொருவன் மற்றொருவன்மீது குறைசொல்வானே அவன் அதைக் கொண்டு சோதிக்கப்படுவானென" எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். தவிர, சிரித்தவன் சிரிக்கப்படுவான் என்பது முதுமொழியாகும்.

(2) மார்க்க பக்தர்கள் அவர்கள் வீற்றிருக்கும்வழி செல்வார்களாயின் அப்பக்தர்களைக் கேவலமாகக்கருதி கண்ஜாடை காட்டுவார்களென்று கூறுகின்றான். இஃதோர் அற்பகுணமாகும். சில அறியாத மாக்கள் இதரர்களைக் கேவலமாகமதித்து கண்ஜாடை காட்டுவது வழக்கமாயிருந்து வருகின்றது. எனவே அம்மதிகேடர்கள் ஆண்டவனுக்கு பயந்து மறுமையை உண்மைகொண்டு நடந்தோர்களுடன் இவ்வாறு நடந்துகொண்டார்கள். தவிர முஃமின்களின் வெளிரங்கமான ஏழ்மைத்தனத்தைக்கண்டு, இவர்கள்தான் சுவனலோகம் செல்வதற்குப் பாத்தியஸ்தர்களென்றும், இவர்கள்தான் ஹூருல்யீன்களாகிய கன்னிகைகளின் புருஷர்களென்றும், உலகத்தில் இன்னார் இவ்வளவு கேவல நிலைமையிலிருக்கும்போது மறுமையில் இவர்களுக்கு என்ன கிடைக்கப்போகிறதென்றும், தாங்கள் இவ்வுலகினில் பெரும் ஐசுவரியவான்களா யிருப்பதால் மறுமையிலும் கியாதிவாய்ந்தவர்களாக விளங்குவோமென்றும் கூறி பரிகாசஞ் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் மறுமையில் காரியாதிகள் மாற்றமாய்விடு மென்பது அந்த மடயர்கட்கு தெரியாதுபோனதேனோ?

(3) அப்பாவிகள் வெளியில் கேலி பரிகாசஞ் செய்து கொண்டிருந்த தோடில்லாமல் தங்கள் வீடுகளுக்குச் சென்றபின் தங்கள் குடும்பத்தார்களிடமும் முஃமின்களைப் பற்றிப் பரிகாசமாய்ப்பேசிச் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

(4) அப்பாவிகள் முஃமின்களைக் கண்டவுடன், இவர்கள் வழிசறுகி நடப்பவர்களாகும்; இன்னோர் உலகத்தின் ஆசாபாஸம் இன்ப சுகங்களை மறந்து பெருங்கேட்டில் சிக்குண்டு விழித்துக் கொண்டிருக்கிறார்களென்று கூறிக்கொண்டிருந்தார்கள் என அல்லாஹ்தஆலா அறிவித்து, முஃமின்களைப் பின்தொடர்ந்துசென்று அவர்களைக் காவல் புரிவதற்காக இவ்வழிகேடர்களை உலகின்கண் அனுப்பிவைக்கவில்லை எனக்கூறுகின்றான்.

மறுமைநாளில் முஃமின்கள் உயர்ந்த ஆசனங்களிலமர்ந்துபலவாறானகாருண்யங்களைக் கண்டு களித்து நரகவாசிகளைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருப்பதை மலக்குகள் பார்த்து, குப்பார்கள் உலகின்கண் செய்துள்ள காரியாதிகளின் பிரதிப்பலன்களை இப்பொழுது பெற்றுக்கொண்டார்கள்; அவர்கள் உலகின்கண் இதரர்களைக் கண்டு சிரித்துக் கொண்டிருந்தார்கள்; இன்று அவர்கள்மீது சிரிக்கப் படுகிறது எனக்கூறுவார்களென அல்லாஹ்தஆலா அறிவிக்கிறான்.

(வல்லாஹ் அஃலம்)

நாயக வாக்கியம்.

"மானிடனில்காணப்படும் இருகுணங்களை ஆண்டவன் மிகப்பிரியம் வைக்கிறான். முந்தியது பொறுமை இரண்டாவது சற்குணமாகும்" என எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஆகவே இவ்விரண்டு அபாரகுணங்களையும் மானிடன் அனுஷ்டித்து நடப்பதுகொண்டு இப்பூவுலகின்கண் சிறந்து விளங்குகின்றான். எனவே

இவ்வரும்பெரும் ;குணங்கள் நபிமார்களில் சிறந்திலங்கிக்கொண்டிருந்ததென்பது வெள்ளிடை.

"மஸ்ஜிதுக்கு வழமையாகச் சென்று வரும் ஒருவனை நீங்கள் காண்பீர்களாயின் அவன் ஈமானுடையவனென்று சாக்ஷிகூறுங்கள். ஏனெனில், எவன் அல்லாஹ்வின்மீதும், இறுதித் தீர்ப்புநாளின்மீதும் உறுதிகொண்டிருக்கிறானோ அவன்தான் பள்ளிவாசலைச் சிறப்புப்படுத்துவான்" என உலக ரெட்சகர் தயாளசீலர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். எனவே, பள்ளிவாசலைச் சிறப்புப் படுத்துவதென்பது அதனை பாழடையப் போடாமல் வணக்கம் புரிவதுகொண்டு அலங்காரப் படுத்துவதாகும். பள்ளிவாசலைப் பாழடையப் போடுவதனால் முஸ்லிம்களின் நிலைசீர்கெடுகிற தென்பது பிரத்தியக்ஷம்.

"ஒருவன் ஒரு கெடுதியானகருமம் புரிவதைக்கண்டால் அதனைஉடனே தடுக்கவேண்டும். அவ்வாறுசெய்ய இயலாது போயின் அக்குற்றத்தை எடுத்துக்கூறி அதைவிட்டுத் தவிழ்ந்து நடந்துகொள்ளுமாறு கூறவேண்டும். இதுவுமியலாவிட்டால் மனதிலாகிலும் வெறுப்புக் கொள்ளவேண்டும். இது ஈமானின் தாழ்ந்த நிலைமையிலுள்ள செயலாகும். எனவே உலகின்கண் ஆகாக்கருமங்கள் நடைபெறாது தடுப்பதற்குஉயிரைத் தியாகஞ் செய்யவேண்டியது முதற் கடைமை யாகும். இதற்கு மனதைரியமேற் படாதவர்கள் தங்களது மனவெறுப்பை வெளியாக்கி துர்ச்செய்கை புரிவோர்க்கு நேர்வழிகாட்டி உபதேசம் புரியவேண்டும். இல்லாவிடில் மனவெறுப்பாகிலுங் கொண்டு துற்செய்கைபுரிவோரைவிட்டு அகன்று விடவேண்டியது முக்கியமாகும்.

ஒருமனிதர் காத்தமுந் நபிய்யின் (ஸல்.) அவர்களிடஞ்சென்று அல்லாஹ்வின்ரசூலே! என்னில்நின்றும் பெரியதோர்பாவம் நிகழ்ந்துவிட்டது; அதைவிட்டு விடுதலைபெறுவதற்கு ஏதாகிலும் வழியுண்டா யிருக்கிறதா? என வினவினார். அதற்கு தயாளசீலர் (ஸல்.) அவர்கள் அம்மனிதரை நோக்கி, உமக்குத் தாயாரிருக்கின்றார்களாவென வினவினார்கள். அதற்கு அம்மனிதர், இல்லை என பதில் கூறவே, காலா (தாயாருடன் பிறந்தவள்) இருக்கிறாளாவெனக் கேட்டதற்கு ஆம், உண்டென்று கூறவே, அம்மாதுடன் தக்க முறையில் நடந்துகொள்ளும்படி ஏவினார்கள். இந்த சம்பவத்தால் மானிடன் எவ்வளவு தூரம், தாய்தந்தையர்களுக்குச் சங்கைசெய்யக் கடமைப்பட்டிருக்கின்றான் என்பதையும், தாய்தந்தைபோலொற்ற பெரியார்களுடன் தக்க முறையில் நடந்துகொள்வது பாவங்களுக்குப் பரிகாரமாய் விடுகிற தென்பதையும் நன்கு தெரிந்து கொள்கிறோம்.

ஹகிம்பின் முஆவியாவின் தந்தையார் நபிகள் திலகம் (ஸல்) அவர்களது திருச்சமுகஞ்சென்று ஒவ்வொருமனிதனும் தன் பெண்சாதிக்குச் செய்யவேண்டிய கடமைகள் ஏதாகிலு மிருக்கிறதா? வெனக்கேட்டார். அதற்கு எம்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்) அவர்கள் ஆம், உண்டு. நீங்கள் சாப்பிடு வீர்களாகில் அவர்கட்கும் உண்ணக் கொடுக்கமேண்டும்; நீங்கள் உடுத்திக் கொள்வீர்களாகில் அவர்களுக்கும் உடுத்தாட்டவேண்டும்; அவர்களை அடிக்காமலும் ஏசாமலும் வீட்டுக்கு வெளியில் தனியே செல்லும்படி விட்டுவிடாமலுமிருக்க வேண்டியது அத்தியா அவ்சியமாகும் எனக் கூறினார்கள். இக்காலத்திலோ வெனில், துர் அதிர்ஷ்டவசமாய் நம்மில் இருசாரார் தோன்றி யிருக்கின்றார்கள். ஒரு சாராரோ பெண்சாதிமார்களை வேலைக்காரிகளை விட கேவலமாகப் பாவிக்கின்றார்கள். மற்றொரு சாராரோ தங்கள் பெண்சாதிகளை சுயேச்சையுடன் தனியே வெளியில் அலைந்து திரியும் படிவிட்டு விடுகிறார்கள். இவ்விருசாரார்களும் மேலே கூறப்பெற்றுள்ள நாயக வாக்கியத்தில் கூறப்பட்டுள்ள கருத்தைக்கொண்டு பிரயோசன மடைவார்களாக.

"மனிதர்கள் தன்னைக் கண்டவுடன் எழுந்து சங்கை செய்யவேண்டுமென்று எவன் நாடுகிறானோ அவன் தனது இருப்பிடம் நரகத்திலிருக்கிறதென்று கருதிக் கொள்ளட்டும்" என சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இந்த ஹதீதினால் நமது ஏகத்துவத்தூதர் நபிய்ய கரீம் (ஸல்.) அவர்கள் தன்மதிப்புக் கொள்வதை எவ்வளவு தூரம் வெறுத்திருக்கின்றார்களென்பதை நன்கு தெரிந்து கொள்கிறோம்.



ஹஜ்ஜின் பயன்.

தூய்மை வாய்ந்த சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கமானது தன்னுள்ளமைந்துள்ள ஒவ்வொரு வணக்கத்திலும் குறிப்பிட்ட ஒரு லக்ஷியத்தை அமைத்துவைத்திருக்கிறது. இஃது இஸ்லாத்திலேற்பட்ட வணக்கத்திற்குள்ள தனிப்பட்டச் சிறப்பேயாகும். எனவே இஸ்லாமியக் கடமையாகிய தொழுகை விஷயமாய், 'தொழுகையாகிறது மானிடனை சகல கேடுதிகளிலும் பிரவேசிக்காது தடை செய்து விடுகின்றது' என்று திருக்குர்ஆன் அறிவிக்கின்றது. நோன்பு விஷயமாய், 'நோன்பின் மூலமாய் நீங்கள் துற்கிருத்தியங்களை விட்டுத் தவிழ்ந்து கொள்ளுகிறீர்களென குர்ஆன் ஷரீப் பஹிரங்கப்படுத்துகின்றது. ஜக்காத் விஷயமாய் 'அவர்களின் பண்டம் பொருள் ஆகியவைகளிலிருந்து ஒருபாகத்தை தருமத்திற்காக வாங்கிக் கொள்ளுங்கள். அதன் மூலமாய் நீங்கள் அவர்களை உலோபித்தனம், பேராசை ஆகிய இழிய குணங்களை விட்டு உத்தமர்களாக்க முடியும்', என்று குர்ஆன் ஷரீப் பறை சாற்றுகின்றது. இவைகளைப் போலவே அல்லாஹ்த ஆலா ஹஜ்ஜினலேற்படும் நன்மை பயன் ஆகியவைகளை எடுத்து விளக்கி 'ஹஜ்ஜின் முக்கிய லக்ஷியமானது ஜனங்கள் தங்களுக்குரியதை அடையவேண்டுமென்பதும் சிலகுறிப்பிட்ட தினங்களில் அல்லாஹ்த ஆலாவை தியானித்துக் கொள்ள வேண்டுமென்பதுமாகும்' எனக் கூறுகின்றான். ஆகவே ஹஜ்ஜின் பிரதான லக்ஷியமானது மானிடனுக்கு அளவற்ற பிரயோசனங்களை அளிக்கவல்ல சாதனமாய்த் திகழ்கின்றதென்பதை நன்கு தெரிந்து கொள்கிறோம்.

இகபரசாதனங்களை அளிக்கவல்ல மகா உன்னதக் கிருகையை இனிய முறையில் நிறைவேற்ற உலகின் நானா பாகங்களிலுமிருந்து பற்பல சந்ததிகள், பற்பல நிறத்தையுடையவர்கள், பற்பல பாஷை பேசுவோர் சமுத்திரங்களைக் கடந்து, மலைகளைத்தாண்டி, பலமாதப் பிரயாணஞ் செய்து மக்கமாநகரில் ஒன்று படக்கூடுகின்றனர். அன்னவர்களின் உள்ளங்களானது உலக இச்சை, உபயோகமற்ற எண்ணம் துர்க்கிருத்தியங்களின் அபிலாஷை முதலியவைகளை விட்டு பரிசுத்தமாகி அல்லாஹ்த ஆலாவின் நட்பைப் பெறுவதற்கு முயற்சித்து அதனாலேற்படும் பலவாறான கஷ்ட நிஷ்ரேங்களையும் அனுபவிக்கத் தயாராகயிருக்கின்றது.

ஆகவே அப்பெரும் மகத்தான நாட்கள் நமக்குக் கிட்டியதை அதிக சிரேஷ்டமான பாக்கிய மெனக் கருதவேண்டும். அங்கு நம் கண்களுக்குப் புலப்படும் மகத்தான கூட்டத்திற்கு அஸ்த்திவாரக்கல் நாட்டியது ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை) இஸ்மாயீல் (அலை) ஆகிய மகான்களின் பரிசுத்த விண்ணப்பமேயாகும். அம்மகான்களின் விண்ணப்பமானது அக்கூட்டத்தை வளர்த்துச் செழிக்கச் செய்திருக்கிறது. அம்மகான்களின் விண்ணப்பத்தின் மூலமாகவேதான் அக்கூட்டம் நியமனமாயிற்று. அவ்விண்ணப்பமே அக்கூட்டத்தை ஆரம்பமுதற் கொண்டு கடைசிவரை சீர்திருத்திற்று. அவ்விண்ணப்பத்தின் அழிவில்லாச் சக்தியைக் கொண்டே அக்கூட்டம் நிலைபெற்றிருக்கிறது. அந்த இடத்தில் லக்ஷக்கணக்கான மனிதர்களின் உள்ளங்களிலிருந்து இப்ருஹீம் (அலை) அவர்களின் முன்மாதிரியான காரியத்தைச் சார்ந்த ஆத்மார்த்தீகச் சிறப்பானது கிளம்பி தன்னை அறியாமல் அல்லாஹ்த ஆலாவைக் கூவியழைக்கும். அல்லாஹ்த ஆலாவின் சமுகத்தில் லக்ஷக்கணக்கான சிரஸுகள்பணிந்து கிடக்கும். லக்ஷக்கணக்கான ஹிருதயங்கள் அல்லாஹ்த ஆலாவின் உயரிய

ஜ்வலியைக்கண்டு களிக்கவேண்டுமேன்னும் பேரவாவில் மூழ்கியிருக்கும். லக்ஷக்கணக்கான நாக்கள் அல்லாஹ்த ஆலாவின் சமூகத்தில் விண்ணப்பித்துக் கோண்டிருக்கும். இத்தகையதோர் அரிய நேரத்தில் பக்தி பூண்டோழுகும் அடியார்களாகிய நாம், ஏக பரம்போருளாகிய அல்லாஹ்த ஆலாவின் சன்னிதானத்தில் நமது வேண்டுதலை இறைஞ்சிக் கேட்டு இகபரமிரண்டிலும் சீரும் சிறப்பும் பேற்றுத்திகழ்வோமாக.

ஈதுல் அல்ஹா.

துல்ஹஜ்ஜு மாதமாகிறது மாபெரும் கீர்த்திவாய்ந்ததோர் மாதமாகும். இம் மாதத்தில் நபில் தொழுகை, குர்ஆன் பாராயணம், தக்பீர் தஹ்லீல் முதலிய புண்ணியங் தரத்தக்க காரியாதிகளை மிகுதமாய்ச் செய்வதனால் அளவற்ற பிரயோஜனங் கிடைக்கின்றது. அதிலும் முக்கியமாய் முந்திய 10 தினங்களில் நலவான கருமங்கள் புரிவதுகொண்டு பெரும் புண்ணியம் கிட்டுமென்பது திண்ணம். எனவே இம்மாதத்தின் ஒன்பதாம் திகதியாகிய அரபாதினத்தன்று நோன்பு நோற்பதுகொண்டு மானிடன் மட்டில்லாப் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றான்.

10-ம் திகதியாகிய பெருநாளன்று பல் துலக்கி நன்னீராடி நல்லுடுப்பணிந்து வாசனைபூசி யாதொன்றும் புசியாது தக்பீர் ஓதியவனாக தொழுகை நிறைவேற்றப்படும் ஈதுகாஹ்க்கோ அல்லது பள்ளிவாசலுக்கோ சென்று தக்பீர் ஓதிக்கொண்டிருப்பது மேலாகும். சூரியன் கிளம்பிச் சற்று உயரத்திற்கு வந்தது (அதாவது சுமார் ஒரு மணிக்குப் பின்) முதல் அது நடுநிசிக்கு வரும்வரை ஈதுத் தொழுகையை நிறைவேற்றலாம். ஆனால் காலையில் யாதொன்றும் சாப்பிடாதிருப்பதால் சீக்கிரமாகவே தொழுகையை நிறைவேற்றிவிடுவது மேலாகும். அன்று பாங்கு காமத் இல்லாமல் இரண்டு ரக்கஅத்தொழுகை வாஜிபாகயிருக்கிறது. ஜும்ஆத் தொழுகை வாஜிபானவர்கள்மீது பெருநாள் தொழுகைவாஜிபு. ஆனால் குத்பா ஓதுவது வாஜிபல்ல எனினும் சுன்னத்தாகும். ஒரு ஊரில் பல இடங்களில் ஈதுத் தொழுகையை நிறைவேற்றலாம் ஆனால் ஒரே இடத்தில் தொழுவது நல்லது. இத்தொழுகை தவறி விடுமாகில் வேறு இடத்தில் அதை ஜமாஅத்தாகத்தொழலாம். இப்பெருநாள் தொழுகையை 10, 11, 12 ஆகிய மூன்று தேதிகளிலும்தொழலாம். ஆனால் காரணமின்றி மறுநாளைக்குப் பிற்படுத்துவது மக்றூஹ்.

"இந்த ஈதுல் அல்ஹாப் பெருநாள் தொழுகையை அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுகின்றேன்" என நிய்யத்து (தீர்மானம்) செய்து "அல்லாஹு அக்பர்" என தக்பீர் கட்டவேண்டும். பின்பு (தனா) சுப்ஹான கல்லாஹும்ம ஓதிவிட்டு கையை உயர்த்தித் தக்பீர் சொல்லி கையைத் தொங்கவிட வேண்டும். இவ்விதமாக இரண்டு முறை தொங்கவிட்டு மூன்றும் முறையில் முன்போல் தக்பீர் சொல்லிக் கையைக் கட்டிக் கொள்ள வேண்டும். இவ்வாறு தக்பீர் கட்டுவதில் தக்பீர் தஹ்ரீமா (முந்தியதக்பீர்) வையுஞ் சேர்த்து நான்கு முறை தக்பீர் சொல்லவேண்டியதிருக்கும். பின்பு வழக்கம்போல் எல்லாத் தொழுகையிலும் ஓதுவதுபோல் அஊது, பிஸ்மில்லா, ஸூரத்துல் பாத்திஹா, கிரஅத் ஆகியவைகளை ஓதி ருக்கூஉ, ஸுஜூது செய்து, இரண்டாவது ரக்கத்தை வழக்கம்போல் ஆரம்பித்துத்தொழவேண்டும். ஆனால் இதில் கிரஅத் ஓதி முடிந்தபின் முற்கூறிய பிரகாரம் மூன்றுமுறை தக்பீர் சொல்லிக் கையைத் தொங்கவிடவேண்டும். பின்பு நான்காம் முறை தக்பீர் சொல்லி ருக்கூஉ செய்ய வேண்டும். இவ்விதமாக இரண்டு ரக்கஅத்தையும் தொழுது ஸலாம் கொடுத்தபின் குத்பா ஓதவேண்டும்..

துல்ஹஜ்ஜு மாதம் 9-ம் தேதியிலிருந்து 13 வரையிலுள்ள 5 தினங்களுக்கும் "அய்யா முத்தஷ்ரீக்" என்று பெயர். இத்தினங்களில் முதல்நாள் அதாவது, 9-ம் தேதி காலை

பஜ்ர்தொழுகையிலிருந்து கடைசிநாள் அதாவது 13-ந்தேதி அசர் தொழுகை முடியவுள்ள 23 நேரத்து பர்லு தொழுகைக்குப் பின், தக்பீர் ஓதுவது இமாம் முக்ததீ ஆகிய இருவர்பேரிலும் வாஜிபு. சலாம் கொடுத்தவுடன் இமாம் முக்ததீ யாவரும் சேர்ந்து தக்பீர் ஓதவேண்டும். தனியேதொழுபவருக்கு வாஜிபில்லை. இமாம் மறதியாக தக்பீர் சொல்லாமலிருந்துவிட்டாலும் அவரைப் பின்பற்றித் தொழுபவர்கள் தக்பீர் சொல்லவேண்டும்.

(ஷாபிஈ மத்ஹப்பிரகாரம்)

இப்பெருநாள் தொழுகை சுன்னத்தமு அக்கதாவாகும். பெருநாள் இரவில் இறைவனுக்கு இபாதத்துச் செய்து நித்திரை ஒழித்திருத்தல், பெருநாள் இரவில் பாதி இரவுக்குப் பின் சிறியோர், பெரியோர், ஆண்பெண் யாவரும் நீராடி நல்ல உடைஉடுத்தி, மணம்பூசி காலையிலேயே தொழுமிடத்திற்கு வந்துசேருதல், தொழுகைக்குச் செல்லும்போது இயன்றவர்கள் நடந்து செல்லுதல், தொழுகை முடிந்துவரும்போது வேறுபாதையில் வருதல், தொழுகைக்குமுன் உணவருந்தாமலிருந்து தொழுதபின் உணவருந்துதல், அதிலும் உலுஹிய்யாப் பிராணியின் ஈரலைப் புசித்தல் சுன்னத்து.

இத்தொழுகையின் முதல் ரக்கஅத்தில் தக்பீர் தஹ்ரீமாவுக்குப்பின், வஜ்ஜஹ்த்து ஓதி, தக்பீர் தஹ்ரீமாவைப்போல் எழுமுறை தக்பீர் கட்டவேண்டும். பின்பு அஊது, கிராஅத் ஓதி ருக்கூஉ ஸுஜூது முதலியன செய்யவேண்டும். இரண்டாவது ரக்கஅத்தில் தக்பீர் சொல்லி எழும்பிய பின் ஐந்துமுறை தக்பீர் கட்டவேண்டும். இந்த தக்பீர்களுக்கிடையில் “ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்” என்பதை மெதுவாக ஓதவேண்டும். இந்த தக்பீர்களை இமாம் குறைத்துக் கொண்டால் அவரைப் பின்பற்றித் தொழுபவர்களும் குறைத்துக்கொள்வது சுன்னத்து. துல்ஹஜ்ஜு மீ 9-உ யாகிய அரபாவுடைய நாள் ஸுப்ஹிலிருந்து அய்யாமுத் தஷ்ரீக்கின் கடைசிநாளாகிய 13-உ அசர்முடியத் தொழும் தொழுகையாவற்றிலும் அதாவது பர்லு, நபில், அதா, கலா ஜனாஸாத் தொழுகை ஆகிய யாவற்றிற்குப் பின்னும் தக்பீர் சொல்வது சுன்னத்து.

குர்பானீ.

“எவன் தகுதியுடையவனாகயிருக்கும் நிலைமையில் குர்பானீ செய்யவில்லையோ அவன் நம்தொழுகையுடன் கலந்துகொள்ள வேண்டாம்” என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஒருநாளன்று சஹாபாக்கள், எம்பிரான் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களிடத்தில், “குர்பானீ” என்பது யாதாகுமெனக் கேட்டார்கள். அதற்கு தயாளசீலர் (ஸல்.) அவர்கள், அஃது உங்கள் பாட்டனாரான இப்றுஹீம் (அலை.) அவர்களின் சுன்னத்தாகயிருக்குமென கூறினார்கள். மறுபடியும் சஹாபாக்கள் குர்பானியினால் எங்களுக்கு யாது பிரயோசனமேற்படுகிறதென்று கேட்கவே, குர்பானிக்காக அறுக்கப்படும் உயிர்ப்பிராணியின் திரேகத்திலுள்ள ஒவ்வொரு உரோமங்களின் எண்ணிக்கைப்பிரகாரம் குர்பானீ செய்போருக்கு நன்மை எழுதப்படுகிறதென நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறினார்கள்.

குர்பானீ செய்யப்படும் உயிர்ப்பிராணியினின்று பூமியில்விழும் இரத்தத்துளியின் காரணத்தால் அடியான்செய்த பாவங்கள் மன்னிக்கப்படுகிறதென்றும், கியாமத்நாளில் அப்பிராணியின் தோலிமாமிசம் யாவற்றும் புண்ணியத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகிறதென்றும் தயாளசீலர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

மானிடன் (நஹ்ருடையநாளில்) துல்ஹஜ்ஜு மீ 10, 11, 12-ம் தேதிகளில் இரத்தத்தை ஓட்டுவதானது அளவற்ற பிரயோசனம் கொடுக்கக்கூடியதாக இருக்கிறதென்றும், அத்தினங்களில் அதைவிட மேலான யாதொரு அமலும் கிடையாதென்றும், நிச்சயமாக குர்பானிக்காக அறுக்கப்படும் உயிர்ப் பிராணியானது அவன் ‘சிராத்துல் முஸ்தகீம்’ என்னும் பாலத்தைக் கடந்து செல்லுவதற்கு ஏர்வாகனமாக இருக்குமென்றும், அதன் உதிரம் பூமியில் விழுவ

தற்குமுன்பே அத் தியாகம் அல்லாஹ்த ஆலாயிடத்தில் ஒப்புக்கொள்ளப் பட்டுப் போகிறதென்றும் சமத்துவத் தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

மேலே கூறப்பட்டுள்ள ஹதீதுகளால், குர்பானீ செய்வது மிகமிக மேலான வணக்கமென்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம்.

குர்பானீ கடமையாவதற்கு நான்கு ஷரத்துகளிருக்கின்றன, (1) ஒரு மனிதரிடம் தன் உயிரைக் காப்பாற்றிகொள்ளுவதற்குப் போதிய சாப்பாடும், மானத்தைக் காற்றிக் கொள்ளவதற்குப் போதிய உடுப்பும் நீங்கலாக $52\frac{1}{2}$ ரூபாயோ அன்றி அதற்குள்ள சாமான்களோ, பூமியோ இருப்பது, (2) முஸ்லிமாயிருப்பது, (3) அடிமையாக இல்லாதிருப்பது, (4) வழிப்போக்கனாக யில்லாது ஊரில் தரிப்பாடாயிருப்பது ஆகிய இவைகளாகும்.

ஈதுத்தொழுகை நடைபெறக்கூடிய ஊரினுள்ளோர் தொழுகைக்குப் பின் குர்பானீ செய்யவேண்டும். தொழுகை நடைபெறாத பட்டிக்காட்டில் வசிப்போர் தொழுகைக்கு முன் குர்பானீ செய்துவிடவேண்டும். ஈதுத் தொழுகை நிறைவேற்றப்படும் பட்டணங்களில் வசிப்போர் தொழுகைக்கு முன் குர்பானீ செய்வார்களாயின் குர்பானீ நிறைவேறாது. ஈதுத்தொழுகை முடிந்ததிலிருந்து 12-ம் நாள் மாலை சூரியன் அஸ்தமிப்பதற்கு சற்றுமுன்வரை குர்பானீசெய்யலாம். ஆனால் இராக்காலங்களில் குர்பானீ அறுப்பது மக்ரூஹ். தவிர்க்க முடியாத ஏதாகிலும் முக்கிய அசந்தர்ப்பத்தின் காரணமாக குறிப்பிட்ட காலணங்களில் குர்பானீ செய்யமுடியாது போமாயின், அதற்காகப் பிராணி வாங்கியிருந்தால் அதனை அப்படியே சதக்காச் செய்துவிடவேண்டும். இல்லாதுபோனால் பிராணியின் கிரயத்தை சதக்காவாகக் கொடுத்துவிடவேண்டும்.

வெள்ளாடு, செம்மறி, தும்பை ஆடு இவைகளில் ஆணாயினும் பெண்ணாயினும் ஒருவருக்கு குர்பானீ செய்யலாம். ஒட்டகம், பசு, எருது, எருமை, எருமைக்கிடா இவைகளில் ஏழுநபர்வரை கூட்டாகலாம். அவ்வேழுவர்களில் யாராகிலும் குர்பானீ செய்யவேண்டுமென்னும் நிய்யத்தில்லாது மாமிசத்தைப் பங்குபோட்டுக் கொள்ளவேண்டுமென்னும் நோக்கத்தோடு அதில் சேர்ந்துகொள்வார்களாயின் யாருடைய குர்பானியும் நிறைவேறாது.

வெள்ளாடு ஒரு வயதை யுடையதாகவும்; செம்மறி, தும்பை ஆறுமாதத்தை யுடையதாகவும்; எருமை, பசு இரண்டு வயதுடையதாகவும்; ஒட்டகம் ஐந்து பிராயமுடையதாகவும் இருக்கவேண்டும்.

கண்பார்வையில்லாததும், ரொம்ப இளைத்துப் போயிருக்கக் கூடியதும், அறுக்குமிடத்திற்குச் செல்லமுடியாமல் நொண்டியாயிருக்கக்கூடியதும், அரைபாகத்திற்குமேல் காது, வால் இவைகள் அறுபட்டிருக்கக்கூடியதும், கொம்பில் அரைபாகத்திற்குமேல் ஒடிந்திருக்கக் கூடியதும், முன்கால் பின்கால் இவைகளில் மூன்றிலொருபாகத்திற்குமேல் பழுதாயிருப்பதும் ஆகிய இவைகளை குர்பானீ செய்வது கூடாது. ஆனால் அறவே கொம்பு முளையாத மோளைக்கிடாய், உடை அடித்தது அல்லது வயது முதிர்ந்த பிராணி அல்லது பைத்தியம் பிடித்தது இவைகளைக் குர்பானீ செய்யலாம். தன்கையினாலேயே குர்பானீ செய்வதுமேலாகும். வேறொருவரை ஏவினால், குர்பானீ செய்யுமிடத்தில் அவன் கூடயிருக்க வேண்டும். பிராணியை அறுப்பதற்குமுன் அதன் கால்களை நல்லவிதமாய்ப் பிடித்துக் கொண்டு கிப்லாவின் பக்கல் முகத்தைத் திருப்பி கூர்மையான கத்தியைக் கொண்டு அறுக்கும்போது "இன்னீவஜ்ஜஹ்த்து வஜ்ஹியலில்லதீ பத்தரஸ்ஸமாவாத்தி வல்அர்லீ ஹனீபன் வமாஅன மினல் முஷ்ரிகீன். இன்னஸலாத்தீ வநுஸ்க்கீ வமஹ்யாய வமமாத்தீ லில்லாஹி ரப்பில்ஆலமீன்; லாஷரீக்க லஹூ வபிதாலிக உமிர்த்து வ அன அவ்வலுல் முஸ்லிமீன்." அதாவது, விண்ணையும், மண்ணையும் படைத்தவனுக்காகவே நிச்சயமாக நான் என்முகத்தைநேராகத் திருப்பிக் கொண்டேன்; இன்னும் நான் இணைவைப்போர்களில் சேர்ந்தவன் அல்ல; நிச்சயமாக என்னுடைய தொழுகை, கிரியை, ஜீவியம், மரணம் ஆகிய இவையாவும் சர்வ உலகத்தினரையும் காத்தளிக்கும் அல்லாஹ்வுக்கே தஞ்சமாகும்; அவனுக்கு யாரும் இணையில்லை; இன்னும் இவ்வாறு இணைவைக்கப்படாது என்பதைக் கொண்டுதான் நான் ஏவப்பட்டேன்; தவிரவும் நான் முஸ்லிம்களில் முதன்மையானவன் என்ற துஆவை ஓதவேண்டும்.

பின்பு "அல்லாஹும்ம லக்க வமின்க பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" அதாவது, ஆண்டவனே உனக்காகவே, உன்னில் நின்றுமே அறுக்கிறேன்; அல்லாஹ்வின் நாமத்தைக்கொண்டு அறுக்கிறேன் அல்லாஹ் அக்பர் என்று அறுக்கவேண்டும்.

பலர் கூட்டாகச் சேர்ந்து செய்த குர்பானியாக இருந்தால் அதன் மாமிசத்தை நிறுத்துப் பாகம் செய்துகொள்ளவேண்டும். உத்தேசமாய் பாகம் செய்துகொள்ளலாகாது. குர்பானீ மாமிசத்தை மூன்று சமபாகமாகப் பிரித்து ஒரு பாகத்தை ஏழைகட்கும் மிஸ்கீன்களுக்கும் கொடுக்கவேண்டும். பாக்கியுள்ள இரண்டுபாகத்தைத் தானும் தன் குடும்பத்தினரும், தன்பந்துமித்திரரும் உபயோகித்துக்கொள்ளலாம். ஞாபகக்குறைவாக பிஸ்மில்லாச் சொல்வதை மறந்துவிடுவாறைகில் அதனைத் தின்னலாம். ஆனால் வேண்டுமென்றே பிஸ்மில்லாச் சொல்வதை விட்டுவிடுவாறைகில் அதனைத் தின்னக்கூடாது. தோலுரித்துவேலைசெய்பவர்களுக்கு தோலையோ இறைச்சியையோ கூலிக்காகக் கொடுக்காது வேறு தனியாகக் கொடுக்கவேண்டும். குர்பானித் தோலிகளை ஏழை எளியோர்களுக்குக் கொடுத்துவிடவேண்டும். அதைப் பொதுப்பண்டில் சேர்க்கக்கூடாது. ஆனால் பாடஞ்செய்து தலையணை முதலிய செய்து தானே உபயோகித்துக்கொள்ளலாம்.

(ஷாபிஈ மத்ஹப்பிரகாரம்)

ஹஜ்ஜுப் பெருநாள்இரவுபகலில்தனக்கும்தன் பராமரிப்பிலுள்ளவர்களுக்கும் தேவைப்படும் செலவுகள்போக அதிகமாகவுள்ள முஸ்லிமான ஆக்கில் பாலிகானவர்கள் உல்ஹிய்யாக் கொடுப்பது சுன்னத்த முஅக்கதாவாகும். ஆடுமாடு, ஒட்டகம் ஆகிய இவைகளைத்தான் உலுஹிய்யாக் கொடுக்கவேண்டும். இவைகளில் ஒட்டகம் ஐந்து வயதிற்குக் குறையாததாகவும், மாடு வெள்ளாடு இவைகள் இரண்டுவயதிற்குக் குறையாததாகவும், செம்மறிஆடு ஒரு வயதிற்குக் குறையாததாகவும் இருப்பதும், இவைகளை அறுக்கும்போதோ அன்றி முன்போ உல்ஹிய்யா என்று நிய்யத்துச் செய்வதும்ஷர்த்து. இப்பிராணி சொறிபிடித்தனவாய், அதிகமாக நொண்டுபனவாய், மெலிவினால் மூளை வறண்டனவாய், பயித்தியம்பிடித்தனவாய், குருடாய், ஒற்றக்கண் பொட்டையாய், மாமிசத்தைக் கெடுத்துவிடக் கூடிய வியாதி உள்ளனவாய் இருத்தல் ஆகாது.

ஹஜ்ஜுப்பெருநாளில் சூரியோதயமாகி இரண்டு ரக்கஅத்துத் தொழுது இரண்டு குத்பா ஓதுவதற்கு எவ்வளவுநேரம் செல்லுமோ அவ்வளவு நேரம் சென்றதிலிருந்து அய்யாமுத்தஷ்ரீக்குகளின் கடைசிநாளில் சூரியாஸ்தமனமாகும்வரை உலுஹிய்யாக் கொடுக்கலாம். இந்த உலுஹிய்யாப் பிராணியின் மாமிசத்தில் கொஞ்சமேனும் குறைந்தது ஒரு பகீருக்குக் கொடுப்பது வாஜிபு. இந்த உயிர்ப் பிராணிகளின் ஈரலைக் கொடுத்தால் அது மாமிசத்தைக் கொடுத்ததாகாது. அந்த மாமிசத்தை சமைத்துப் பக்குவப்படுத்திக் கொடுப்பது கூடாது. உல்ஹிய்யாக் கொடுக்கப்பட்ட பிராணியிலுள்ள எதையும், தோலையும் விற்பனை செய்வதும், அதை அறுப்பவர்களுக்கு கூலியாகக் கொடுப்பதும் காபிர்களுக்குக் கொடுப்பதும் ஜாயிஸில்லை.

ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களின் தியாகம்

ஹஸ்ரத்ஈஸா (அலை.)அவர்கள் இப்பூவுகின் கண் ஜனிப்பதற்குஇரண்டாயிரம்வருடங்களுக்கு முன் அரப்தேசத்தின் "புராத்" நதிக்கரையிலுள்ள "உவர்" என்னும் பட்டணத்தில்ஹஸ்ரத் இப்ருஹீம்(அலை.)அவர்கள் ஜனனமானார்கள். அக்காலத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த சரித்திரங்களைப் பார்ப்போமாகில், வளம் பொருந்திய அப்பட்டணமானது இராக்கியர்களாகிய கில்தானியர்களின் தலைநகரப்பட்டணமாக இருந்ததாய்த் தெரிகிறது. அக்காலை கில்தானியர்கள் பெரும் செல்வாக்கோடு உன்னத ஸ்திதியில் இராஜிய பரிபாலனஞ் செய்து கொண்டிருந்தார்களாதலின் அவர்கள் தங்கள் தலைநகரை அழகு பொருந்திய பலவாறுன மாடமாளிகைகளைக் கொண்டு வனப்புப்படுத்திவைத்திருந்தார்கள். அந்த வம்சத்தில்தோன்றியுள்ள அரசர்கள் தங்கள் மார்க்க நிர்ணயங்களையும் இராஜிய பரிபாலன சட்டதிட்டங்களையும் கல்லில் வெட்டி வைத்திருந்தார்கள். பிற்காலத்தில்

அக்கல்லைப் பார்ப்பதுகொண்டு கில்தானி வகுப்பினர் ஹஸ்ரத் ஹூத் (அலை.) அவர்களின் மார்க்கத்தைப் பற்றியவர்களென்பதும், அவர்களை தங்களது நபி எனக்கருதியிருந்தார்களென்பதும் நன்கு புலனாகின்றது. ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் ஹஸ்ரத் ஹூத் (அலை.) அவர்களது இரண்டாவது குமாரரான 'பலஜ்' அவர்களின் ஐந்தாவது சந்ததியில் தோன்றியவர்களாகும். ஹஸ்ரத் அவர்களது தந்தையின் பெயர் யாதாகுமென்பதில் உலமாக்களிடையே பலத்த அபிப்பிராய பேதமேற்பட்டிருக்கிறது. எனவே இமாம் பக்ருத்தின் ராஜீ (ரஹ்.) அவர்கள், இப்ருஹீம் (அலை.) அவர்களது தந்தையின் பெயர் "ஆதர்" என்று கூறியிருக்கிறார்கள். அல்லாமா ஆலூஸீ (ரஹ்) அவர்கள், அவர்களது பெயர் "தாரிக்" என்பதாகும் என வரைந்திருக்கின்றார்கள்.

ஸூரயேமர்யமில் ஹஸ்ரத் அவர்கள் விஷயமாய்க் கூறப்பட்டிருப்பவைகளைக் கொண்டு, தாங்கள் ஆரம்பமாக "ஆதர்" அவர்களை நேர்வழியின் பக்கல் அழைப்பதற்கு முயற்சித்து பெரும் மரியாதையோடும் பிரயோசனமளிக்கும் தோரணையிலும் விக்கிரஹ வணக்கங்களின் கெடுதிகளை எடுத்துகூறி வன்மையோடு அதனைக்கண்டித்து வந்தார்கள் என்பதை நன்கு தெரிந்துக்கொள்ளுகிறோம். எனவே 'ஆதர்' அவர்களுக்குப் பலவாறாகக் கூறி விக்ரஹ வணக்கங்கள் செய்யாது ஆண்டவனுக்கு வணக்கம் புரிவதைத் தெரிந்து கொள்ளும்படி எடுத்தறிவித்தார்கள். இதற்கு 'ஆதர்' பலவாறாய் வீணாகக் கோபிக்க ஆரம்பித்து "ஏ இப்ருஹீமே! நீர் இதுசமயம் நடத்திக் கொண்டிருக்கும் காரியத்தை விட்டு விடாது எங்களையும், நாங்கள் விக்ரஹங்களை பூஜித்துக் கொண்டிருப்பதையும் கெடுதிசொல்லிக் கொண்டிருப்பீராகில் கல்லெறிந்து உம்மைக்கொன்றுவிடுவோம். இதுவன்றி நீர்சுகஜீவியாக வாழவேண்டுமாயின் நாங்கள் வணங்குபவைகளைக் கெடுதி சொல்வதையும் அவைகள் பொய்யானகடவுள்களென்று கூறுவதையும் விட்டுவிட்டு, இவ்வூரை விட்டு, எங்காகிலும் ஓடிவிடும்" எனக்கூறினர். பயத்தை உண்டுபண்ணும்படியானவும் கடினமானவுமாகிய இவ் வார்த்தைகளுக்கு மறுமொழியாக ஹஸ்ரத் அவர்கள் "ஆண்டவனது கிருபை உம்மீது உண்டாவதாக" அல்லாஹ் தஆலா பலவாறான கஷ்ட சங்கடத்திலிருந்து காப்பாற்றிவைக்க வேண்டும்! நீர் எதற்காக எம்முடன் இவ்வாறு நடந்து கொள்கின்றீர்? என வெகு தயாள சிந்தையோடு கேட்டார்கள். இச்சம்பவத்தால், உபதேசம்புரிய முற்படுவோர் எவ்வளவு சாந்தத் தன்மையை அனுஷ்டிக்க வேண்டுமென்பதை நன்கு தெரிந்து கொள்கிறோம்.

ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை) அவர்களும் நெருப்பும்

அதற்குப்பின் ஹஸ்ரத் அவர்கள், யாராகிலும் தங்கள் உபதேசங்களைக்கேட்டு ஒருக்கால் நேர்வழிக்கு வரக்கூடும் என்னும் நல் கருத்துக்கொண்டு ஜனங்களைநோக்கி, மண்ணால் செய்யப்பட்ட உயிரற்ற விக்ரஹங்களை வணக்கம் புரிவதற்கு உங்களுக்கு என்ன கேடு ஏற்பட்டுப் போயிருக்கிறது? உலகமடங்கலையும் படைத்து ரக்ஷித்துக் காப்பாற்றிவருகிறது யார் என்பதைக்கூற உங்களால் முடியுமா? எனவினவினார்கள். தவிர அன்னாரிலனேகர் நக்ஷத்திரங்களை வணங்குபவர்களாகவும், உலகின்கண் நடைபெறுபவைகளெல்லாம் நக்ஷத்திரங்களால்தான் நடைபெறுகிறதென்று கருதுபவர்களாகவுமிருந்ததால், அவைகள் யாதொன்றையும் படைக்க சக்தியற்றனவாக யிருக்கும் விஷயத்தை நல்ல முறையில் எடுத்து எல்லோருக்கும் விளக்கிக் காண்பித்தார்கள். இதனைக் கண்டு அக்காலத்தில் அதிகாரியாயிருந்த 'நம்ரூத்' என்பவன் தர்க்கஞ்செய்ய முன்வந்தான். உடனே ஹஸ்ரத் அவர்கள் நம்ரூதைநோக்கி, 'ஏ நம்ரூதே! ஒருவனை மரணமாக்கி விடுவதற்கும் ஒருவனுக்கு உயிர் கொடுப்பதற்குமுள்ள சக்தி யார்கையிலிருக்கிறதென்பது உமக்குத் தெரியுமா?' எனக் கேட்டார்கள். நம்ரூத் என்பான் தானே ஆண்டவனென்று கூறிக்கொண்டிருந்ததால் இந்த சக்தி தன்னைத்தவிர வேறுயாருக்குமில்லை என்பதை தெரிவிக்கும் நோக்கத்தோடு ஹஸ்ரத் அவர்கள் கேழ்க்கும் விஷயத்தின் சூக்ஷியையுங்கூட நன்கு தெரிந்து கொள்ளாது, குற்றமற்ற ஒருவனை தூக்கிலிடும்படி செய்தும் கொலைக்குற்றம் புரிந்ததற்காக தூக்கிலிடப்படுவதற்கு தொண்டைக் குழியில் வளையம் மாட்டப்பெற்றிருந்த ஒருவனை விடுதலைசெய்து விடும்படி செய்தும் தான் புரிந்

துள்ள அநீதியான செயலைத் தமது வாதத்திற்கு ஆதாரமாகக் காட்டினான். ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் ஆழ்ந்த யோசனையுடையவர்களாதலின் தங்கள்போக்கை வேறுவழியில் திருப்பி, ஏ நம்ரூதே! நீர் ஆண்டவனென்று கூறிக்கொண்டிருக்கும் நிலைமையில், நீரும் உம்மைச் சேர்ந்தவர்களும் எதற்காக நக்ஷத்திரங்களை வணங்கிக்கொண்டிருக்கிறீர்கள்? நீர் ஆண்டவனாகயிருக்கும் பக்ஷத்தில், நக்ஷத்திரங்கள் யாவற்றும் உம்மால் படைக்கப் பட்டதாகவும் உம்முடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். எனவே நீர் உண்மையான ஆண்டவனாக யிருக்கும் நிலைமையில், கீழ்த்திசையிலிருந்து வெளியாகும் சூரியனை மேற்குத்திசையிலிருந்து உதயமாகும்படி கட்டளைப் பிறப்பியும் பார்ப்போம் எனக் கூறினார்கள். தனது அபாரசக்திக்கு பங்கம் விளைவிக்கும் இவ்வார்த்தையைக் கேட்ட நம்ரூதாகிறவன் தட்டுத் தடுமாறிப் போய்விட்டான். இச்சம்பாஷணையினால், உண்மைக்கு ஜெயமும் பொய்க்குத் தோல்வியும் ஏற்பட்டு விட்டதைக் கண்ணுற்ற காபிர்கள், ஆச்சரியமடைந்து திகைத்துப் போய்விட்டனர். மேலும் இச்சம்பவத்தின்பயனாய், இளவாலிபராகிய இப்ருஹீமிடத்தில் தர்க்கத்தின் மைதானத்தில் யாரும் வெற்றிபெற முடியவில்லை என்னும் செய்தி பல இடங்களிலும் பரவிப்போயிற்று. அதற்குப்பின் காபிர்கள் பலவாறான சதி ஆலோசனை புரிந்து பார்த்தும் ஒன்றுமியலாது முடிவாக ஒருபெரும் அடுப்புத் தயார்செய்து அதில் நெருப்புமூட்டி கங்கிகள் சுடர்விட்டெறியுங்கால் ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை) அவர்களை அதில் எறிந்து விடவேண்டுமென்னும் முடிவுக்கு வந்தார்கள். அதுபோல் நெருப்புத் தயாரித்து ஒரு ஆயுதத்தின் உதவியால் ஹஸ்ரத் அவர்கள்நெருப்பில் விழும்படி செய்து விட்டார்கள். இந்த நேரத்தில் அல்லாஹ்தஆலா தன்னுடைய அபாரக் கிருபையை வெளியாக்கி வைத்தான். எனவே நெருப்பில் உஷ்ணத்தையும் கறித்துப் பொசுக்கும் சக்தியையும் ஏற்படுத்திவைத்த நாயன், அந்த நெருப்பைப் பூங்காவனமாக ஆய்விடும்படி கட்டளையிட்டான். அந்த கட்டளைக்கேற்ப அது பூங்காவனமாக ஆய்விட்டது. ஆகவே ஏ நெருப்பே! இப்ருஹீமின் பேரில் குளிர்ச்சியாக ஆய்விடு எனக் கட்டளை பிறப்பித்தான். நம்ரூதாகிறவன் இச் சம்பவத்தைப் பார்த்து ஆச்சரியமடைந்து விரலைவாயில் வைத்துக் கடித்துக்கொண்டு, சுடர்விட்டெறியும்படியான நெருப்பாகிறது இப்ருஹீமுடைய விஷயத்தில் பூங்காவனமாக மாறிவிட்டதென கூறிக்கொண்டிருந்தான். இச் சம்பவத்திற்குப்பின் ஹஸ்ரத் அவர்கள் தங்கள் கூட்டத்தார்களின் வழிகேடுகளையும் அவர்கள் தங்கள் பிடிவாதத்தின் மீது ஸ்திரமாக இருப்பதையும், அவர்கள் தர்க்கத்தில் தோல்வியடைந்து ஆண்டவனது கிருபைபொருந்திய அபார சக்தியினைக் கண்டபிறகும் தங்கள் துர்யோசனைகளை விடாதிருப்பதையும் கண்டு அளவற்ற வருத்தமடைந்து அல்லாஹ்தஆலாவின் கட்டளைக்கேற்ப ஊரைவிட்டு வெளியிற் புறப்பட்டுச் செல்வதற்குள்ள நிர்ப்பந்தத்திற்கு ஆளாய்விட்டார்கள்.

பீபிஹாஜராவும், இஸ்மாயீல் (அலை)யும்

ஹஸ்ரத் அவர்கள், தங்களுடைய விருத்தாபியத்தில் சற்புத்திரரை அளிக்கும்படி ஆண்டவனிடம் பிரார்த்தனை புரிந்தார்கள். மாபெரும் சக்தியினையுடைய காருண்யக் கடலாகிய அல்லாஹ் தஆலா அவர்களது பிரார்த்தனையை ஒப்புக்கொண்டு மிஸ்ரின் ராஜகுடும்பத்திலுதித்த ஹஸ்ரத் ஹாஜரா அவர்கள் வயற்றிலிருந்து ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களை வெளிப்படுத்தினான். இதற்குச் சிலகாலத்திற்குப்பின்பு இப்ருஹீம் (அலை.) அவர்களின் முந்திய பெண்ஜாதியாகிய ஹஸ்ரத் ஸாரா அவர்கள் வயற்றிலிருந்து ஹஸ்ரத் இஸ்ஹாக் (அலை.) ஜனனமானார்கள். பிறகு ஆண்டவனது கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் தங்களருமைப் புதல்வராகிய ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களையும் பீபி ஹாஜரா அவர்களையும் தங்களுடன் அழைத்துக்கொண்டு ஹிஜாஸின் பக்கல் சென்றார்கள். ஹஸ்ரத் அவர்கள் அங்கு சென்று தங்கள் ஈரல் துண்டாகிய புத்திரரையும் அருமை மனைவியையும், தண்ணீர் ஆகாரம் முதலிய யாதொன்றுமில்லாத பாலைவனத்தில் விட்டுவந்தார்கள். அந்த இடந்தான் இது காலைமக்காவென்னும் திருப்பெயருடன் சிறப்புற்று விளங்குகிறது! அந்த இடந்தான் இக்காலை தேயத்தின் நானாபாகங்களிலுமிருந்து

இலக்ஷக்கணக்கான பக்தர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் வந்துகூடும் புண்ணியஸ்தலமாகத் திகழ்கின்றது!! ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் சில பேரீச்சம்பழங்களையும் ஒரு பாத்திரத்தில் ஜலத்தையும் ஹஸ்ரத் பீபிஹாஜராவிடம் கொடுத்துவிட்டு விடைபெற்றுக் கொள்ளுங்கால் "தங்கள் அபிப்பிராயத்திற்குத்தான் எங்களை இங்கு விட்டுப் போகிறீர்களா? அல்லது இவ்வாறு செய்யும்படி ஆண்டவன் கட்டளை பிறப்பித்திருக்கிறுனு? வென ஹஸ்ரத் ஹாஜரா அவர்கள் வினவியமைக்கு, தங்களது நாயனின் கட்டளைப் பிரகாரமேவிட்டுச் செல்வதாக ஹஸ்ரத் அவர்கள் கூறினர்கள். இதனைச் செவியுற்ற ஹஸ்ரத் ஹாஜரா அவர்கள், ஆண்டவன் எங்களைக் காப்பாற்றக்கூடியவனுகையிருப்பதால் யாதொரு கெடுதியும் நேரிடாமல் பாதுகாத்துக்கொள்வான் என மிகதைரியத்தோடு கூறவே ஹஸ்ரத் அவர்கள் பிரயாணமாய் விட்டார்கள். தணல் வீசும்படியான கானகத்தில், ஊண்குடிப்பு முதலிய யாதொன்று மில்லாத வரண்ட மைதானத்தில் தங்கள் பால்குடி சிசுவையும், அருமை மனைவியையும் விட்டுச் செல்வது ஆண்டவனது கட்டளையைச் சிரமேற்றுங்கி நடக்கும் நல்லடியார்களின் செயலாகும் என்பதையும், தங்களைக் கானகத்தில் விட்டுச் செல்வதைப் பொருமையோடு சகித்துக் கொண்டு நாவில் எவ்வித தூஷணையான வார்த்தையும் உபயோகிக்காதிருந்தது சிரேஷ்ட உத்தப மாதுக்களின் செயலாகுமென்பதையும் நன்கு தெரிந்துகொள்கின்றோம்.

ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டுச் செல்லுங்கால் 'அரபாத்' மலைபோய்ச்சேர்ந்தவுடன் பின்னல் திரும்பி மிக்க வருத்தம் நிறம்பிய பார்வையுடையவர்களாய் உள்ளச்சத்தோடு "எங்களை எல்லாம் ரக்ஷித்துக் காப்பாற்றி வரும் நாயனே! வெள்ளாமை செய்வதற்குத் தகுதியற்ற வரண்ட கானகத்தின்கண் எனது சந்ததிகளை விட்டுவந்திருக்கிறேன்; ஜனங்களின் மனதை அந்தப்பக்கல் திருப்பி அங்குவந்து குடி ஏறும்படி செய்வதுடன் அவர்களுக்கு இதரதேசங்களின் விளைபொருளைக்கொண்டு இரணமளித்து உதவிபுரிவாயாகவென பிரார்த்தனை புரிந்தார்கள். ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் நின்று இவ்வாறு பிரார்த்தனை புரிந்த மலையில்தான் துல்ஹஜ்ஜு மாதத்தின் ஒன்பதாம் திகதியில் உலகின் நானுபாகங்களிலும் வதியும் பல லக்ஷக்கணக்கான மாந்தர்கள் ஒன்றுசேர்கின்றார்கள். உலகின்கண் காணப்படும் வேறு எந்தக் கூட்டமும் இதற்கு நிகராக இருக்க முடியாதென்பது திண்ணம்.

சமத்துவம்

அக்காலை, தைப்பது ஒன்றேடொன்று சேர்ப்பது என்னும் பழக்கமில்லாததால் ஒரு துணியை இடுப்பில் உடுத்திக்கொள்வதும் ஒன்றைத் தோள்மீது போட்டுக்கொள்வதும் பொதுஜனங்களின் பழக்கத்திலிருந்து வந்தது. எனவே ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களுங்கூட ஒரு துப்பட்டியைக்கொண்டு தோள் புஜத்திலிருந்து கிரண்டை கால்வரை மறைத்திருந்தார்கள். இக்காலை ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டிக்கொள்ளும் முஸ்லிம்களும் அதே உடையில்தான் தோன்றுகிறார்கள். அதாவது ஹஜ்ஜுக்குச் செல்வோர் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றவுடன் தையல் சம்மந்தப்படாத ஒரு துணியை இடுப்பில் கட்டிக்கொண்டு ஒன்றை திரேகத்தில் போர்த்திக்கொண்டும் தலையைத் திறந்துகொண்டு மிருக்கின்றார்கள். ஹஜ்ஜுடைய காலத்தில் கணக்கற்ற மகாஜனங்கள் ஒரேவிதமான உடுப்புகளை அணிந்தவர்களாகவும் ஒரேவிதமான வணக்கங்களைப் புரிந்தவர்களாகவும் விளங்குவதைப் பார்த்தால், சமத்துவத்தின் அலைகள் மோதிக்கொண்டிருப்பது நன்கு புலனுகும். அதனைக் கண்ணுல் பார்ப்பதன்றி எவ்வாறு எழுத்தில் வரைந்தபோதிலும் அதன் சம்பவங்களை நன்கெடுத்துக் காண்பிக்கமுடியாதென்பது திண்ணம். இக்காலை சமத்துவக் கொள்கை பாராட்ட முற்பட்டிருக்கும் வகுப்பார்களும், ஒரே நேரத்தில் ஒரேவிதமான உடை அணிந்திருப்பதாகக் கூறமுடியுமா? ஆகவே சமத்துவப் பாவனையின் இத்தனிச் சிறப்பு முஸ்லீம்களுக்குச் சொந்தமானதேயாகும். எனவே இஸ்லாம் மார்க்கமானது இராஜர்களையும்பரதேசிகளையும் ஒரே வரிசையில் நின்று ஒரே விதமான உடுப்பில் தோன்றும்படி செய்திருக்கிறது.

குர்பானீ

ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் ஆண்டவனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து

நடந்ததையும், அவர்கள் மேற்கொண்டுள்ள பொருமையின் தேர்ச்சியையும்கீழ் குறிப்பிடப்படும் அபூர்வ நிகழ்ச்சிகளிலிருந்து நன்கு தெரிந்துகொள்கிறேம். அதாவது, ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் மிக்க வன்மையோடு பிரார்த்தனை புரிந்து ஈன்றெடுத்த புத்திரராகிய ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் நடந்து செல்வதற்குள்ள காலம் ஏற்படவே, தங்களருமைக் குமாரராகிய அப்புதல்வரை அறுத்துக்கொண்டிருப்பதாகச் சொர்ப்பனங்கண்டு அச்செய்தியை தங்கள் ஈரல் துண்டாகிய புதல்வரிடம் தெரிவித்து அவருடைய அபிப்பிராயம் எவ்வாறிருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ள விருப்பினர்கள். சிங்கக்குட்டிக்கு சிங்கத்திற்குள்ள பலத்திலும் தைரியத்திலும் பாதியாகிலுமிருக்குமென்று சொல்வர். அத்தன்மைபோல் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை.) தந்தையின் தியாக குணத்தையும், ஆண்டவனுக்கு வழிப்பட்டு நடக்கும் தன்மையையும்வெளிப்படுத்தி எனதருமைத் தந்தை அவர்களே! தாங்கள் கண்ட சொர்ப்பனத்தினல் என்னை அறுத்துவிடுவதற்கு ஏவப்பட்டிருக்கிறீர்களென்று தெரிகிறது. ஆகவே சற்றும் யோசியாமல் ஆண்டவனல் உங்களுக்கு இடப்பெற்றுள்ள கட்டளையை நிறைவேற்றி விடுங்கள். அதுபொழுது என்னை ஒரு பொருமையுள்ள சற்புத்திரனைக் காண்பீர்கள் எனக் கூறினர்கள். தந்தை அவர்களும் இதற்குச் சம்மதித்து இருவரும் வெளியிற் புறப்பட்டுச் சென்று ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களை பூமியில் படுக்கச் செய்துவிட்டு, புத்திரவாஞ்சையின் மேலீட்டால் ஒருக்கால் ஆண்டவனது கட்டளையை நிறைவேற்றுவதற்கு இயலாது போய்விடுமோ வென்னும் அச்சத்தால் தங்கள் கண்களைத் துணியால் கட்டிக்கொண்டு ஆண்டவனது கட்டளையை நிறைவேற்றுவதற்காகப் புதல்வரின் கழுத்தில் கத்தியை ஓட்டினர்கள். அப்புதல்வரின் வழியாக உலகரக்ஷகர், அன்பியாக்களின் தலைவர் முஹம்மது முஸ்தபா ரசூலுல்லாஹி (ஸல்.) அவர்களை இப்பூவுலகின்கண் அனுப்பவேண்டியிருந்ததால், ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களை அக்கத்தி யாதொன்றும் செய்துவிடாதபடியும் அவர்களுக்குப் பகரமாக ஒரு ஆட்டை அறுத்துவிடும்படியும் செய்து, தான் மானிடர்களை அறுப்பதை விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துவிட்டான். முற்காலங்களில் இந்தியா, ஈரான், ஷாம், அரப், மிஸ்ர், இராக், யூனன், சைன, ஜப்பான், இட்டாலி, அமெரிக்கா, ஐரோப்பாமுதலிய இடங்களிலெல்லாம் பலவாறன தேவதைகளின் திருப்திக்காக மானிடர்கள் பலியிடப்பட்டுவந்தார்கள். இத்துர்ச்செய்கையை மானிடர்களின் மனதைவிட்டுஅகற்றுவதற்கு ஹேதுவில்லாதிருந்தது. இத் தேவதைகளென்ன இவைகளுக்கெல்லாம் எஜமானகிய அல்லாஹ்த ஆலாவுக்காக மானிடர்களை அறுப்பது அவனுக்குப் பொருத்தமில்லாதிருக்கும் நிலைமையில் இத் தேவதைகளுக்காகப் பலியிடப்படுவதைப் பற்றிக் கேள்க்கவும்வேண்டுமோ? இச்சிறந்த படிப்பினையைக்கொண்டு இக் காலை உலகின்கண் மானிட பலியின் கொடுமை மறைந்தொழிந்து போய்விட்டதென தைரியமாய்க் கூறலாம்.

கஃபத்துல்லாஹ் ஷரீப்

பிறகு மக்கமா நகரில் ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் தங்களது புத்திரரின் உதவிக்கொண்டு நச்சதுரமானதோர் கட்டடத்தைக் கட்டினர்கள். பரிசுத்தம் பொருந்திய அக் கட்டடம்தான் “கஃபத்துல்லா ஷரீப்” என்னும் திருப்பெயருடன் விளங்கி வருகிறது. அது ஸபாமர்வா மலைக்குச் சமீபத்திலிருக்கிறது. அதுதான் உலகின்கண் ஆண்டவனை வணங்குவதற்காக முதல் முதல்கட்டப்பட்ட புண்ணியஸ்தலமாகும். சங்கைக்குறிய அந்த ஸ்தலம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னிருந்தே சிறந்து விளங்கிக்கொண்டிருக்கிறது. கோடிக்கணக்கான மாந்தரின்மனங்களெல்லாம் அதன் பக்கல் சார்ந்து நின்று கொண்டிருக்கிறது.

ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களின் மார்க்கம்

ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் எஹூதி வர்க்கத்தைச் சார்ந்தவர்களென்று எஹூதிகளும்,கிறிஸ்தவவர்க்கத்தைச் சார்ந்தவர்களென்று நஸாராக்களும் கூறிக்கொண்டிருந்தார்கள். ஆனல் குர்ஆன் ஷரீபானது அவர்களின் இக்கூற்றுக்களை மறுத்து “இப்ருஹீம் எஹூதி வர்க்கத்தைச் சார்ந்தவருமல்ல; கிறிஸ்தவவகுப்பைச்சேர்ந்தவருமல்ல; அவர் நேர்மையான முஸ்லிமாக யிருந்தா

றென்று அறிவிக்கிறது. இக்காலை இப்பூ உலகின்கண் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்களைப் பின்பற்றி குர்பானீசெய்யும் வர்கத்தினரும் முஸ்லிம்களாகவே இருக்கின்றார்கள். ஆகவே முஸ்லிம்களாகிய நாம்,குர்பானீ செய்யும் கடமையை நிறைவேற்றுவது கொண்டு இஸ்லாத்தின் உன்னத லக்ஷியத்தைப் பூர்த்தி செய்யக் கடவோமாக. ஹஸ்ரத் இஸ்மாயில் (அலை.) அவர்களை குர்பானீ செய்ய ஏற்பட்டதின் சம்பவம் சதா[illegible]ம் நம் ஞாபகத்தி லிருக்கும்படி செய்தற்குள்ள பெருமை நமது உலகரட்சகர் காத்தமுந்நபிய்யீன்(ஸல்.) அவர்கள் பொருட்டால் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே முஸ்லிம் சோதர சோதரிகள் யாவரும் இஸ்லாத்தின் ஆரம்ப சரித்திரத்தின் ஞாபகார்த்தமாகவுள்ள குர்பானீக் கடமையை நிறைவேற்றுவதற்கு முற்பட்டுவருவார்களாக.

கஃபத்துல்லாஹ் ஷரீப்.

பைத்துல்லாஹ் ஷரீபின் மகத்துவமும் கீர்த்தியும், குர்ஆன் ஷரீப் நாயக வாக்கியம் சரித்திரகிரந்தம் ஆகிய இவைகள் மூலம் நன்கு புலனாகும். பைத்துல்லாஷரீபாகிய கஃபத்துல்லாவை சைய்யிதுனா ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை.), ஹஸ்ரத் இஸ்மாயில் (அலை.) ஆகிய இருவர்களும் தங்களது திருக்கரங்களினாலேயே கட்டிமுடித்தார்கள். தூய்மை வாய்ந்த பரிசுத்த மகான்களால் பரிசுத்தத் தன்மையுடைய ஆண்டவனுடைய வணக்கத்திற்காகக் கட்டப்பட்ட ஸ்தலத்தின் நிலைமை எவ்வளவு மகிமை வாய்ந்ததாக யிருக்குமென்று எண்ணுகின்றீர்கள்? அவ்விருமகான்களும் அவ்வுத்தம சேவையிலீடுபட்டிருக்குங்கால், முழுமனதோடு தங்களால் கட்டப்படும் வணக்கஸ்தலம் ஆண்டவனால் ஒப்புக் கொள்ளப் பட்டதாய் ஆய்விடுவதற்கும், தங்கள் சந்ததிகள் நேர்வழி பெறுவதற்காக வேண்டியும் “எங்களுடைய றப்பே! இவ்வாலயத்தை எங்களிலிருந்து ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீ எங்களுடைய பிரார்த்தனையைக் கேட்பவனாகவும் அறிபவனாகவுமிருக்கின்றாய்; எங்களுடைய நாயனே! எங்களை உனக்கு வழிப்பட்ட முஸ்லிமாக ஆக்கிவிடுவாயாக; எங்களின் சந்ததிகளிலிருந்து உனக்கு வழிப்பட்டு நடக்கக்கூடிய ஒரு கூட்டத்தாரை உண்டாக்கிவிடுவாயாக” எனப் பிரார்த்தனை புரிந்தார்கள். அவ்விருமகான்களின் பிரார்த்தனைகள் ஒப்புக்கொள்ளப் பட்டுப்போய் அப்பிரார்த்தனைக்கேற்ப நமது உலக ரக்ஷகர் காத்தமுந்நபிய்யீன் (ஸல்.) அவர்கள், ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களின் சந்ததியில் வெளியாகி கஃபத்துல்லா ஷரீபில் வணக்கம் புரிந்தார்கள். அம்மகான்கள் பிரார்த்தனை புரிந்தநேரம் எவ்வாறான அருமைபொருந்திய நேரமாயிருந்ததென்பதையும், பிரார்த்தனை புரிந்தவர்களின் தன்மை எவ்வாறாக யிருந்த தென்பதையும், எவ்வாறான பிரார்த்தனையாகயிருந்த தென்பதையும் பார்த்தீர்களா? ஆகவே இது ஆண்டவனை வணங்குவதற்காக வென்று பூமியின்கண் முதல் முதலாக கட்டப்பட்ட சிறப்புப் பொருந்திய வீடாய் அமைந்திருக்கிறது? அவ்வீட்டில் யாராகிலும் நுழைந்து விடுவானாகில் அவன் அச்சந்தீர்ந்தவனாகி ஆய்விடுகிறான் என ஆண்டவனே அறிவிக்கின்றான். அம்மகான்களால் கட்டப்பெற்ற வணக்கஸ்தலம் ஆண்டவனிடம் ஒப்புக்கொள்ளப் பட்டதாக ஆகி, அதற்குப்பின் தேசத்தின் நானாபாகங்களிலுமிருந்து மானிடர்கள் கால் நடையாகவும் ஒட்டங்கள் மீது ஆரோகணித்தும் வருவதற்கு முற்பட்டார்கள். பிரார்த்தனையில் குறிப்பிட்டிருந்ததற் கேற்ப இப்றாஹீம் (அலை.) அவர்களின் இளையபுதல்வரின் சந்ததியில் பனூ இஸ்ராயீல் வம்சத்தில் பெரும் பெரும் கீர்த்திவாய்ந்த நபிமார்கள் தோன்றினார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் கடைசிகாலத்தில் எம்பெருமானார் காத்தமுந்நபிய்யீன் (ஸல்.) அவர்கள் இப்பூ உலகின்கண் தோன்றுவார்களென்னும் சுபச் செய்தியை அறிவித்தே சென்றிருக்கின்றார்கள். இதுவன்றி வானுலகிருந்து வந்த

வேதங்கள் யாவற்றிலும் இச்சுபச்செய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கஃபத்துல்லா ஷரீப் விஷயமாய் அல்லாஹ்த ஆலா "அதில் வெளிரங்கமான திருஷ்டாந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன; இப்ருஹீம் (அலை.) அவர்களின் ஸ்தானமிருக்கிறதெனக் கூறுகின்றான். அதாவது, அதில் பற்பலவாறான பஹிரங்க அத்தாக்ஷிகளேற்பட்டிருக்கின்றன. அதில் முக்கியமாய் 'மக்காம இப்ருஹீம்' என்பது குறிப்பிடத்தக்க அடையாளமாக யிருக்கிறது. அதனை மகா ஜனங்கள் தொழுமிடமாக ஆக்கிக்கொண்டு அங்கு தொழுகை நிறைவேற்றி வருகின்றார்கள். மேலும் மக்காம இப்ருஹீம் என்னும் பெயருடைய கல்லில் ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களின்கால் அடையாளம்காணப்பட்டது. அது சிலகாலம்வரை கஃபத்துல்லாவின் சுவற்றுடன் இணைக்கப்பட்டிருந்தது. நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அதனை அந்த இடத்தைவிட்டெடுத்து 'முதாப்' என்னுமிடத்தின் ஒரு மூலையில் வைக்கும்படி செய்துவிட்டார்கள். பிறகு அந்த இடத்தில் அழகுபொருந்திய பலமான ஒரு குப்பாக் கட்டி அந்தக்கல்லைப் பத்திரப்படுத்தினார்கள். ஆகவே தூய்மைபொருந்திய அக்கல்லானது முதாபுக் கருகாமையில் அந்த குப்பாவில் பத்திரமாய் வைக்கப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை.) ஆகிய இருவர்களும் சேர்ந்து பைத்துல்லாவைக்கட்டி முடித்ததானது, ஒரு சச்சதுரமான இடத்தில் சுவர்கள் உயர்ந்ததாகயிருந்தது. ஆனால் மேலே எவ்வித முகடு மிருக்கவில்லை. சுவற்றின் கிழக்குப்புறத்தில் வாசற்வைக்கப்பட் டிருந்தது. ஆனால் யாதொரு நிலைகதமில்லாதிருந்தது. அதற்குப்பின் அக்கட்டடத்தைப் பழுதுபார்த்ததும், புதிதாகக் கட்டிய வரலாறுகளும் இஸ்லாமிய சரித்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. சுருங்கக்கூறின் பனூஜர்ஹம், அமாலிக்கா, குஸைய்யுப்னு கிலாப் ஆகிய இன்னோர் பல நூற்றாண்டுகளுக் கொருமுறை ஒருவர்பின் ஒருவராய் பழைய கட்டடத்தின்மீது புதிதாக வேலை செய்துவந்தார்கள். நான்காவது முறையாக எம்பெருமானார் (ஸல்.) அவர்களது 35-ம் பிராயத்தில் குரைஷிகள் பைத்துல்லா ஷரீபைப்புதுப்பிக்க ஆரம்பித்தார்கள். அதுபொழுது ஹஜருல் அஸ்வதை எடுத்து வைக்கும் விஷயமாய் அக்கூட்டத்தார்களுக்கிடையே பெரும் தர்க்க மேற்பட்டு முடிவாக நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது யோசனைப் பிரகாரம் ஹஜருல் அஸ்வதை ஒரு துப்பட்டியில் வைத்து குரைஷிக் கூட்டத்தாரின் தலைவர்களால் எடுத்துவரப்பட்டு எம்பெருமானார் (ஸல்.) அவர்களது திருக்கரத்தால் அதற்குரிய இடத்தில் வைக்கப்பட்டது. குரைஷிகள் கஃபத்துல்லாவின்மீது முகடு போட்டு கீழ்சுவற்றில் ஒரு ஆள் உயரத்திற்கு மேல் வாசற்படி ஏற்படுத்தி நிலைகதவு வைத்துவிட முயற்சித்து அதற்காக ஒரு பழைய கப்பலை விலைக்கு வாங்கி அதன் மரங்களைக் கொண்டு சகல வேலைகளையும் பூர்த்தி செய்துவிட்டார்கள். அதுபொழுது மரம் போதாமையால் நீளத்தில் கீழ்புறமாக 6, 7 அடியை குறைத்துவிடும்படி நேர்ந்ததனால் அங்கு புதிய சுவர் எழுப்பும்படி ஏற்பட்டது. பிறகு சிலகாலஞ்சென்று மக்கமா நகர் பிடிபட்ட பிறகு எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கஃபத்துல்லா ஷரீபைப் புதுப்பிக்க முயற்சித்து இப்ருஹீம் (அலை.) அவர்களிட்ட அஸ்திவாரத்தின்மீது கட்டடம் கட்ட முற்பட்டார்கள். அதாவது, கீழ்புறத்துச் சுவற்றை பழைய இடத்தில் அமைக்கவேண்டுமென்றும், ஹாஜிகளின் சவுகரியத்திற்காக இரு வாசற்படிகளை அமைக்க வேண்டுமென்றும் நாடினார்கள். ஆனால் குரைஷியர்கள் தாங்கள் கட்டிய கட்டடத்தை இடிப்பதற்கு மனமில்லாதவர்களாயிருந்தால் யாதொரு மாறுதலும் செய்வதற்கு முடியாதுபோயிற்று. ஆனால் ஹஸ்ரத் அப்துல்லாஹ்பின் ஜுபைர் (ரலி.) அவர்கள் ஹிஜ்ரீ 64-வது ஆண்டில் மக்காவாசிகளின் ஏகோபித்த அபிப்பிராயத்தின் மீது அமீராகத் தெந்தெடுக்கப் பட்டபோது, அவர்கள் குரைஷியர்களால் கட்டப்பட்டதை இடித்துவிட்டு பைத்துல்லாவைப் புதுப்பிக்க முயற்சித்து ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களது அஸ்திவாரத்தின்மீதே அதனைப் புதுப்பித்து பூமிமட்டத்திற்கு இரு வாசற்படிகளையும் ஏற்படுத்தி வைத்தார்கள். எனவே எம்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களது விருப்பம் இவர்களாலேயே பூர்த்தியாயிற்றுபோலும். இதற்குச் சிலகாலம் சென்றபின் ஹஸ்ரத் அப்துல்லாபின் ஜுபைர் (ரலி.) அவர்கள் குடும்ப

விவகாரங்களிலேற்பட்ட கலகத்தின் காரணமாய் ஷஹீதாய்விடவே, ஹஜ்ஜாஜ்மக்காவின் அதிகாரியாக நியமிக்கப்பட்டார், அவர் அப்துல்லாஹ் பின்ஜுபைர் (ரலி.) அவர்களின் பெயர் கஃபத்துல்லா ஷரீப்புடன் சம்பந்தப்பட்டிருக்கக்கூடாதென்னும் பொறாமையினால் கீழ்ப்புறமுள்ள சுவற்றை இடித்துவிட்டு ஏற்கனவே குரைஷியர்களால் கட்டப்பட்டிருந்ததின்மீதே கட்டடத்தைப் புதிப்பித்து வைத்ததுடன் மேல்புறமிருந்த தலைவாசலையும் அடைத்துவிட்டுக் கீழ்புறவாசற்படியையும் ஏற்கனவேயிருந்ததுபோல் உயரத்தில் வைத்து விட்டார். ஆகவே அக்கட்டடம் ஏற்கனவே குரைஷியர்களால் ஏற்படுத்தப் பட்டிருந்தது போலாய்விட்டது. அதற்குப்பின் 11-வது நூற்றாண்டிலேற்பட்ட பெரும் வெள்ளத்தின் காரணமாக, அக்கட்டடத்திற்கும் சேதமேற்பட்டுப்போயிற்று. அதுபொழுது சுல்த்தான் முராத்கான் அவர்கள், ஹிஜ்ரீ 1040-ம் ஆண்டில் பைத்துல்லா ஷரீபைப் புதுப்பித்தார்கள். அதே கட்டடந்தான் இக்காலை வரை இருந்து வருகிறது. அதிலும் கீழ்சுவர் குரைஷியர்கள் போட்ட அஸ்திவாரத்தின் மீதே இருந்து கஃபாவின் சிலபாகம் ஹுத்தைமில் சேர்ந்திருக்கிறது. ஹுத்தைமிலுள்ள பழைய அஸ்திவாரத்திற்குச் சூழால் மர்மர் கல்லைக்கொண்டு நாற்புறமும் சுவரெழுப்பப்பட்டிருக்கிறது. பைத்துல்லா ஷரீபின் கீழ்புறசுவற்றில் ஹுத்தைமைச் சேர்ந்தாப்போல் கிழக்கிலும் மேற்கிலும் இரு வாசற்படிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தற்சமயம் பைத்துல்லாஷரீப் இருக்குமிடமாகிறது நச்சதுரமானதாக இருக்கிறது. ஹுத்தைமின் நான்கு சுவர்களும் தென்புறத்தில் முட்டைவடிவமாக இருக்கிறது. கீழ்புறசுவற்றின் 6 அடி உயரத்தில் விசாலமானவாசற்படி அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் நிலை கதவுகளில் முலாம் பூசப்பட்டிருக்கிறது. அதற்குமேல் மிகவும் விலையுயர்ந்த வாசனை பொருந்திய திரை தொங்கவிடப்பட்டிருக்கிறது. அத் திரையின்மீது குர்ஆன் ஆயத்துகள் நிறப்பப்பட்டடிருக்கின்றன. குறிப்பிட்ட நேரத்தில் மரஏணி வைக்கப்படும்போது பைத்துல்லா ஷரீபுக்குள் ஜனங்கள் நுழைகின்றார்கள். கட்டடத்தின் உள்பாகமும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருப்பதுடன் மிகவும் விலையுயர்ந்த சந்தனமரத்தில் செதுக்கப்பட்ட அழகிய 3 தூண்கள் நடுவில் நிற்பாட்டப் பட்டிருக்கின்றன. வாசற்படிக்கு நேராக மேற்குத் திசையில் ஒரு மிஹ்ராப் அமைக்கப்பட்டிருக்கிறது. மக்கமா நகர் ஜெயமான அன்று எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கஃபத்துல்லா ஷரீபினுள் புகுந்து அந்த இடத்தில் நின்றுதான் இரண்டு ரக்கஅத்து தொழுகை நிறைவேற்றினார்கள். இதுபொழுதும் உள்ளால் செல்வோர் அந்த இடத்தில் நபில் தொழும் வழக்கமிருந்து வருகிறது. அதன் தென்கிழக்கு மூலையில் ஒரு சிறிய வாசற்படியிருக்கின்றது. அதற்கு தௌபாவின் வாசற்படி எனக் கூறுகின்றனர். அந்த இடத்திலும் பிரார்த்தனை புரிகின்றார்கள்.

பூர்வீககாலந்தொட்டு பைத்துல்லா ஷரீபின்மீது போர்வை போடும் வழக்கமிருந்து வருகிறது. வெகுகாலமாக அதனை அளிக்கும் பாக்கியம் மிஸ்ரின் கதீவுக்குக் கிடைத்து ஒவ்வோராண்டிலும் சிறப்புத்தங்கிய போர்வையானது மிஸ்ரிலுள்ள கைதேர்ந்த நெசவுக்காரர்களைக் கொண்டு கருப்பு வர்ணத்தில் அழுத்தமாக நெய்யப்பட்டு அதன்மீது எண்ணற்ற கலிமாக்களைக்கொண்டு அழகுபடுத்தப்பட்டு நான்குபுறமும் குர்ஆன் ஆயத்துகளைக் கொண்டு. சிங்காரிக்கப்பட்டனவாய் பார்ப்பவர்களின் கண்களில் பிரகாசமேற்பட்டு மனசந்தோஷத்தை அளிக்கும்விதமாய் அற்புதமான நெகிரற்ற முறையில் தயாரித்துக் கொண்டுவந்து போர்த்தப்பட்டு வந்தது. ஆனால் சிலகாலமாக மிஸ்ரிலிருந்து வருவது நின்றுபோய் சுல்த்தான் இப்னுஸஊதினால்அப் போர்வை தயாரிக்கப்பட்டுவருகிறது.

கஃபத்துல்லா ஷரீபின் திறவுகோலானது ஆதிகாலந்தொடுத்து ஹஸ்ரத் உதுமானிப்னுதல்ஹா (ரலி.) அவர்களிடமிருந்து வந்தது. மக்காவை ஜெயித்த பிறகும் திறவுகோல் அவர்களிடமே கொடுக்கப்பட்டது. இதுகாலைவரையிலும் அவர்களின் சந்ததியார்களிடமே அத்திரவுகோல் இருந்து வருகிறது. பைத்துல்லா ஷரீபின்மீது போர்த்தப்படும் போர்வையும் அவர்களிடமேதானிருக்கிறது.

கஃபத்துல்லா ஷரீபுக்கு நான்கு மூலைகளிருக்கின்றன. ஹுத்தைமின் பக்கலுள்ள

தென்கிழக்கு மூலைக்கும் தென்மேற்கு மூலைக்கும் முறையே ‘ருக்னஇராக்கீ’ என்றும் ‘ருக்னஷாமீ’ என்றும் சொல்லுகின்றனர். அந்த இரண்டு ருகுன்களும் பூர்வீக இடத்தை விட்டகன்று குரைஷியர்களால் ஏற்படுத்தப் பட்டவிதமே இருக்கிறது. வடமேற்கு மூலைக்கு ‘ருக்ன எமானீ’ என்னும் பெயர் பிரபல்யமாகயில்லை. தவிர வடகிழக்கு மூலையில்பூமிக்கு சுமார் 5 அடி உயரத்தில் ‘ஹஜருல் அஸ்வத்’ வைக்கப்பட்டிருக்கிறது. அது உருண்டையான கல்லாகவும் உள்ளால் ஒன்றுமில்லாததாகவும் மேலே வெள்ளியால் பலமான வளையம் போடப்பட்டதாகவும் ஒரு அடி பருமனுள்ளதாகவுமிருக்கிறது. அதனை ருக்ன அஸ்வதெனக் கூறப்படுவதில்லை. அந்த ஹஜருல் அஸ்வதுக்கும் வாசற்படிக்குமுள்ள இடத்தில் சுவரிருக்கும் பாகத்திற்கு ‘முல்தஜிம்’ என்று கூறுகின்றனர். அது சற்றேறக் குறைய 10, 12 அடி நீளமிருக்கும்.

ஹரம் ஷரீபுக்குச் சமீபமாய் கிழக்குபுறத்தில் சபாமர்வா என்னுமிடங்களிருக்கின்றன. அந்த இடங்களில் மனிதர்களின் சந்தடி அதிகமாக ஏற்படுவதால், அஃதோர் ஞாபகார்த்தமானஇடமாய் விளங்குகின்றது. அவைகளுக்கிடையில் அழகான கடைத் தெருவொன்றிருக்கிறது. அதன் இருபுறங்களிலும் கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஹாஜிகள் அந்த இடத்தில்தான் ஓடுகின்றார்கள். இக்காக்ஷி பார்க்கத்தக்கனவாகும். அஃது ஹஸ்ரத் பீபி ஹாஜரா அவர்களின் ஞாபகார்த்தமாயுள்ளதாகும். அம்மாது தங்களது அருமைக் குழவியான ஹஸ்ரத் இஸ்மாயீல்(அலை.) அவர்களுக்காகத் தண்ணீர் தேடி அங்குமிங்கும் ஓடிய இடமாகும்.

இதுவரை கஃபத்துல்லா ஷரீப் சம்பந்தமான விஷயங்களைப்பற்றிக் கூறி வந்தோம். இனி ஹஜ்ஜுக்குச் சம்மந்தப்பட்டவைகளிற் சிலவற்றைக் குறிப்பிட்டு இவ்வியாசத்தை முடிப்போம். அதாவது, ஹஜ்ஜுடைய காலத்தில் மக்காமு அல்லமாவிலிருந்து அரபாத் வரை செல்வதற்கு தக்க வசதிகளிருக்கின்றன. இதற்கிடையில் சில குறிப்பிட்ட சரித்திர சம்பந்தமான இடங்களுமிருக்கின்றன. மக்காவிலிருந்து புறப்பட்டவுடன் முஹஸ்ஸப்’என்னுமிடமிருக்கிறது அங்குஓர் பள்ளிவாசலும் விசாலமான மைதானமுமிருக்கிறது. அங்கிருந்து நான்காவது மைலில் ‘மினா’இருக்கிறது. அங்கோர்பெரிய மைதானமிருக்கிறது. அங்கு பெரும் கட்டடங்களும் மதில்சுவர் போடப்பெற்ற இடமுமிருக்கிறது. வருடமுழுவதிற்கும், ஹஜ்ஜுடைய காலத்தில் ஒரு வாரத்திற்குத்தான் அங்கு ஜனக்கூட்டம் காணப்படும். இலக்ஷக்கணக்கான ஹாஜிகள் வந்து அங்கு தங்குகின்றார்கள். அங்கு ‘மஸ்ஜிதகீப்’ அல்லது ‘மஸ்ஜித ஆதம்’ என்னும் பெயருள்ள பெரிய பள்ளிவாசலொன்றிருக்கிறது. அங்கிருந்து ஒவ்வொரு பர்லாங்கு தூரத்திற்கு மூன்றிடங்களிருக்கின்றன. அவ்விடங்களில் சிறிய சிறிய தூண்கள் நிப்பாட்டப்பட்டிருக்கின்றன. அதற்கு ‘ஜிமார்’என்று சொல்கின்றனர். மக்காவிலிருந்து செல்லும் வழியில் மினாவில் இம்மூன்றும் ஒன்றுக்குப் பின் ஒன்றாக இருக்கின்றன. முந்தியதற்கு ‘ஜம்ரத்துல் குப்ரா’ அல்லது ‘ஜம்ரத்துல் உக்பா, வென்றும் இரண்டாவதற்கு ‘ஜம்ரத்துல் உஸ்த்தா’ வென்றும் கடைசியானதற்கு ‘ஜம்ரத்துஸ்ஸுக்ரா’ அல்லது ‘ஜம்ரத்துல் ஊலா’ வென்றும் பெயர். மினாவென்னும் இடந்தான் ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை.) அவர்கள் தங்களது அருமைப் புதல்வராகிய இஸ்மாயீல்(அலை.) அவர்களை குர்பானீ செய்வதற்காக அழைத்துச்சென்ற இடமாகும். ‘ஜமரா’ என்பது ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை.) செல்லுங்கால் இப்லீஸ்தோன்றி ஏமாற்றமுற்பட்ட மூன்றுஇடங்களாகும். அதற்காக ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை.) அங்கு கல்லெறிந்தார்களாதலின் இன்றுவரை ஹாஜிகள் அங்கு கல்லெறிந்து வருகின்றார்கள். மினாவிலிருந்து இரண்டுமைல் தூரத்தில் ‘முஸ்தலிபா’ என்னுமிடமிருக்கிறது. அதற்கு ‘மஷ்அரஹராம்’ என்று கூடச் சொல்கின்றனர். அங்கு ஒரு பள்ளிவாசலிருக்கின்றது. மினா, முஸ்தலிபா இவ்விரண்டிற் கிடையில் ஒரு பெரும் மைதானமிருக்கிறது. அதற்கு ‘வாதிய முஹஸ்ஸர்’ அல்லது ‘பத்ன முஹஸ்ஸர்’ என்று கூறுகின்றனர். அந்த இடத்தில் ‘அஸ்ஹாபபீல்’ கூட்டத்தார்மீது வேதனை இறங்கிற்று. இன்றும் அதுவழி செல்வோர் சீக்கிரமாகச் சென்று விடுகின்றனர். முஜ்தலிபாவிலிருந்து 3-4 மைலுக்கப்பால் ‘அரபாத்’ மைதானமிருக்கிறது. அங்கு துல்ஹஜ்ஜு மாதம் 9-ம் தேதி ஹாஜிகள் யாவரும்

ஒன்று சேர்கின்றார்கள். அம்மைதானத்தின் மூன்றுபுறமும் உயர்ந்த மலைத்தொடர்க ளிருக்கின்றன. அம்மைதானத்தின் ஒரு புறத்தில் சிறியமலை ஒன்றிருக்கிறது. அதற்கு 'ஜபலுற்றஹ்மத்' என்று சொல்கின்ற னர். அதன்மீது நின்றுகொண்டுதான் கதீப் குத்பா ஓதுகின்றார். அம்மைதானத் தின் துவர்க்கத்தில் ஒரு பள்ளிவாசலிருக் கின்றது. அதற்கு 'மஸ்ஜிதநமிரா' அல்லது 'மஸ்ஜித இப்ராஹீம்' அல்லது 'மஸ்ஜித அரபா' என்று சொல்கின்றனர். அப்பள்ளி வாசலைச் சார்ந்தாப்போல் மேற்குத்திசை யில் சிறிய மைதானமொன்றிருக்கிறது. அதற்கு 'பத்தன அரபா' என்று கூறப்படு கின்றது. அது அரபாத்தை விட்டுப் புறம் பானதாகும். அரபாத்திலிருந்து திரும்புங் கால் 'முஸ்தலிபா' வழியாக 'மினா' வருகின் றார்கள். அது அரபாத்திற்கும் முஸ்தலிபா வுக்கு மிடையில் உயரமான இருமலைகளுக் கிடையிலுள்ள வழியாகும். அப்பாதைக்கு 'மாஜிமைன்' என்று சொல்கின்றனர். ஹாஜி களின் போக்குவரத்திற்கு அவ்விரண்டு பாதைகளும் சுன்னத்தான பாதைகளாகும்.

கலீபா ஹாரூன் ரஷீத் அவர்களின் அரு மைப் பத்தினியாகிய ஜுபைதா காத்தூன் அவர்களினது முயற்சியால் மக்காமு அல்ல மாவுக்குச் சூழால் ஒருகால்வாய் கட்டப்பட் டிருக்கிறது. அது 'ஜுபைதாக் கால்வாய்' என்னும் திருப்பெயருடன் பிரபல்யமாய் விளங்கி வருகிறது. அது தக்க கைதேர்ந்த இஞ்னீர்களைக்கொண்டு மிக்க பலமுள்ளதாக அமைக்கப்பட்டிருக்கிறது. அது 'ஹுனைன்' புறத்திலிருந்து ஆரம்பமாகி அரபாத், மினா மக்கா முஅல்லமா இம் மூன்றிடங்களுக்கும் போதிய தண்ணீர் வசதி அளிக்கின்றது. சிலகால் அது தூர்ந்துபோய்த் தண்ணீர்கம்மி யாக வருகிறது. பிறகு அதனை ஒழுங்குபடுத் தப்படுகிறது. இடையிடையே பழுதும் பார்க் கப்பட்டுவருகிறது. அந்த இடங்களில் கிணறு கள் அரிதாயிருப்பதால் அந்தக் கால்வாய் ஜலம்தான் சகல காரியாதிகளுக்கும் உப யோகப்படுத்தப்பட்டு வருகிறது. பல நூற் றாண்டுகளாய் இலக்ஷக்கணக்கான ஹாஜிகள் அந்தத் தண்ணீரை அருந்திச் செல்கின்றார் கள். இம்மாபெரும் புண்ணியந் தரத்தக்க நற்காரியத்தின் பயனாய் ஜுபைதா காத் தூன் அவர்களுக்கு எவ்வளவு மட்டில்லாப் புண்ணியம் கிடைக்குமென்பதை மட்டுப்படு த்திக் கூறமுடியுமா?

மக்காவின் நான்கு திசைகளிலும் சிற்சில மைல் தூரத்தில் எல்லையைக் குறிப்பிடும் சில தூண்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதற் குள்ளாலிருக்கும் இடம் முழுதிற்கும் 'ஹரம்' என்று சொல்லப்படும். அத்தூண்கள் முழு தும் மக்காவின் எல்லையைக் குறிப்பிடும் அடையாளங்களாயிருக்கின்றன. இதுவன்றி மக்கமா நகரின் நான்கு திசையிலும் சில மைல்தூரத்திற்கப்பால் குறிப்பிடப்பட்ட சில இடங்களிலிருக்கின்றன அதற்கு 'மீக்காத்' என்று கூறுகின்றனர். தேசத்தின் பல பா கங்களிலுமிருந்து வருபவர்கள் தங்கள் தங் களுக்காகக் குறிப்பிடப்பட்டுள்ள இடங் களில் 'இஹ்ராம்' கட்டிக்கொள்கின்றார்கள். இன்னும் இது சம்மந்தமான அநேக விஷயங் களுள. விரிவஞ்சி விடுத்தனம். அல்லாஹ் தஆலா நம்மெல்லோருக்கும் மேலான இப் புண்ணிய ஸ்தலங்களைத் தெரிசிக்கும் பாக் கியத்தைத் தந்தருள்புரிவானாகவும்.

அனுதாபம்

நமது சங்கத்தின் வைஸ்பிரஸிடெண்டும், சென்னை மாஜீஷரீபும், கொடை வள்ளலுமாகிய ஆலீஜனாப் சௌக்கார் வீ. அப்துல்ஹகீம் சாஹிப் பஹதூர் அவர்களின் சிரேஷ்ட குமாரருகிய ஜனாப்வீ. ஏ. அப்துஸ்ஸுப்ஹான் சாஹிப் அவர்கள் ஒருவாரமாக கபவாதஜுரத்தால் பீடிக்கப்பட்டிருந்து 26-3-33 ஞாயிற்றுக்கிழமை காலை 6-மணிக்கு சென்னையில் இப்பூ உலக வாழ்க்கையைத் திறந்து விட்டார்கள். (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹிருஜிஊன்) பகல் 10-மணிக்கு ஜனாஸா மோட்டாரில் விஷாரத்திற்குக் கொண்டு போகப்பட்டது. அல்லாஹ்தஆலா மௌத்தாவுக்கு மக்பிரத்துச்செய்து நம் யாவர்களுக்கும் அழகான ஸப்ரைக் கொடுப்பானாகவும். தமருமை குமாரரின் பிரிவால் மனசஞ்சலத்தி லாழ்ந்திருக்கும் கனம் ஹகீம் அவர்களுக்கு எங்களின் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓர் ஆச்சரிய நிகட்சி.

சரித்திர சம்பந்தமான ஓர் சம்பவம்.

எம்பெருமானார் (ஸல்.) அவர்கள்மீது பிரீதிகொண்ட ஒருவர் 600 வருடத்திற்குமேல் ஜீவித்திருந்தார்!

தெஹ்லிக்குச் சமீபத்திலுள்ள திர்மதி என்னுமூரில் வசித்துவந்த ஓர் இந்துவானவர், எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களைச் சந்தித்து இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார். அவர் நீண்ட ஆயுளுடையவராய் இருக்கவேண்டுமென தயாளசீலர் (ஸல்.) அவர்கள் பிரார்த்தனை புரிந்த தன்பயனாய், 632 வயதுவரை அவர் சுகஜீவியாக இருந்திருக்கின்றார் என்னும் விஷயம் சரித்திரவாய்லாய்த் தெரிந்துகொள்கிறோம். இவ்விஷயத்தை முஸ்லிம் சரித்திராசிரியர்கள் நன்கு விளக்கிக் கூறியிருக்கின்றார்கள். தவிர அல்லாமா இப்னுஹஜர் அஸ்கலானீ அவர்கள் சஹாபாக்களின் வரலாறுகளைக் குறிப்பிடுங்கால் பாபார்தனின் விஷயங்களையும் சவிஸ்தாரமாய் எழுதியிருக்கின்றார்கள். அதனால் பாபார்தன் தமது 632-ம் வயதில் மரணமடைந்திருக்கிறாரெனத் தெரியவருகிறது. ஹிஜ்ரீ 675-ம் ஆண்டில் பாபார்தன்னின் குமாரரான மஹ்மூத் என்பவர் தமது தந்தையின் வரலாறுகளைக் குறிப்பிடுங்கால், அவர் சந்திரன் பிளந்த அற்புத நிகட்சியைக்கண்டு இந்தியாவிலிருந்து அரப்தேசஞ் சென்று இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டு சிறப்புற்று விளங்கிய விபரத்தை தக்க முறையில் எடுத்துக் கூறியிருக்கின்றார்.

ஹஸனிப்னு முஹம்மது கூறுகின்றார்கள் அதாவது, என் பதினேழாவது பிராயத்தில் யான், என் தந்தை சிறியதந்தை முதலானோருடன் வியாபாரத்திற்காக குராஸானிலிருந்து இந்தியாவுக்குச் சென்றேன். அதுகாலை எங்கள் கூட்டம் தங்கியிருந்த இடத்தில் பெரியதோர் கட்டடம் தென்பட்டது. உடனே அங்கு திடீரென எங்கள் கூட்டத்தில் பெரிய அமளியானசப்தம் ஏற்பட்டது. அதனை யான் விசாரித்ததில் அக் கட்டடமானது பாபார் தன் உடையதெனத் தெரியவந்தது. அந்த இடத்தில் பெரியதோர் விருக்ஷமிருந்தது. அதன் நிழலில் அநேகர் தங்குவதற்கு வசதியாகயிருக்குமென்று கருதி சமீபத்தில்போய்ப்பார்த்தவுடன் அநேகர் அம் மரத்திற்குத் தாளால் கூடியிருப்பதைக்கண்டு நாங்களும் அக்கூட்டத்தில் சேர்ந்து கொண்டோம். எங்களின் வருகையைக்கண்டு அங்குள்ளோர் இடவசதி அளித்தனர். நாங்கள் அம்மரத்திற்குக் கீழால் சென்றவுடன் உயரத்தில் மரக்கிளையில் ஒரு தொட்டி தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து அதன் விஷயமென்னவாகும் என விசாரிக்கவே, அத்தொட்டியானது எம்பெருமானார் (ஸல்.) அவர்களைச் சந்தித்து அவர்களால் ஆசீர்வாதம் பெற்றுள்ள பாபார்தன் உடையதாகயிருக்குமெனத் தெரியவந்தது. நாங்கள் அதனைத்கேட்டு பெரும் ஆச்சரியமடைந்து, தொட்டியைக் கீழே இறக்கினால் அவரைச் சந்தித்து அவரிடமிருந்து சில விஷயங்களைத் தெரிந்து கொள்ள நாடுகிறோமென அங்கிருந்தோர்களிடம் கேட்டுக் கொண்டோம். உடனே அங்கிருந்தோரில் விர்த்தாப்பியமுடைய ஒருவர், அத்தொட்டியை மெள்ளக் கீழே இறக்கினார். அத் தொட்டியானது பஞ்சைக் கொண்டு நிறப்பப்பட்டிருந்தது. அத் தொட்டியைத் திறந்தவுடன் பாபார்தன் தென்பட்டார். அதுபொழுது அவர், பறவைக் குஞ்சுகள் பஞ்சுப்பொதியிலிருந்து வெளியில் வருவதுபோல் காணப்பட்டார். பிறகு அவ்விர்த்தாபியர் பாபார் தன்னின் முகத்தைத் திறந்து அவருடைய காதில் தம்முகத்தை வைத்து பாட்டனாரே! இந்த ஜனங்கள் குராஸானிலிருந்து வந்திருக்கின்றார்கள்; இவர்களிலனேகர் உலக ரட்சகர் (ஸல்.) அவர்களின் சந்ததியி லுள்ளவர்களும் கீர்த்திவாய்ந்த மகான்களுமாக யிருக்கும். ஆகவே தாங்கள் எவ்வாறு நபிகள் திலகம் (ஸல்.) அவர்களைச்

கண்டீர்களென்பதையும், அவர்கள் தங்களிடம் யாது கூறினார்களென்பதையும் விபரமாகத் தங்களிடமிருந்து தெரிந்துகொள்ளக் கருதுகின்றார்களெனத் தெரிவித்துக்கொண்டார். அதனை 'பாபார்தன்' கேட்டு சிறிய மூச்சுவிட்டு பார்சி பாஷையில் பேச ஆரம்பித்தார் அவைகளை விபரமாக யாங்கள் தெரிந்துகொண்டோம்அது வருமாறு:

யான் வியாபாரத்திற்காக சிலசாமான்களை எடுத்துக்கொண்டு என்தந்தையுடன் ஹிஜாஸுக்குச் சென்றிருந்தேன். அது சமயம் யான்வாலிபனாகயிருந்தேன். நாங்கள்மக்கமா நகருக்குச் சமீபம் சென்று பார்க்குங்கால் மழையின் மிகுதியால் அங்குள்ள மலைஅடிவாரங்களில் தண்ணீர் நிரம்பிப் போயிருந்தது. அதுபொழுது அங்கு ஒட்டகம் மேய்த்துக் கொண்டிருந்த அழகு பொருந்திய இளவாலிபரொருவர், அவ்வெள்ளத்தைக்கடந்து ஒட்டகம் நிற்குமிடத்திற்கு எவ்வாறுபோய்ச் சேர்வதென்னும் கவலையில் நிற்பதைக் கண்டேன். உடனே என் மனதில் இரக்கமேற்பட்டு அவ் விளவாலிபரை என் முதுகில் தூக்கி வெள்ளத்தைக் கடத்தி ஒட்டகம் இருக்குமிடத்திற்கு கொண்டுபோய்ச் சேர்த்து விட்டேன். உடனே அவ்விளவாலிபர் கிருபையுடைய பார்வையோடு என்னை நோக்கி "ஆண்டவன் உமது வயதை நீளமாக்கி வைப்பானாக" என்று மூன்றுமுறை கூறினார். பிறகு அவரை அங்குவிட்டு, என் சாமான்களை விற்பனைசெய்யும் வேலையி லீடுபட்டு அக்காரியாதிகளை முடித்துக்கொண்டு ஊர்திரும்பி வந்துவிட்டேன்.

அதற்குச் சில காலத்திற்குப்பின் இச்சம்பவம் என் ஞாபகத்தை விட்டு மறைந்துவிட்டது. இந்நிலைமையில் ஒருநாளிரவு என்வீட்டு முற்றத்தில் உட்கார்ந்திருந்தேன். அதுபொழுது வானத்தில் தன் முழுஒளியையும் வீசிப் பிரகாசித்துக் கொண்டிருந்த 14-ம் இரவின் சந்திரனானது திடுகூறாக இரண்டு துண்டாகப் பிளந்து கிழக்கில் ஒருபாகமும் மேற்குத்திசையில் ஒருபாகமும்சென்று மறைந்துவிட்டதால் பெரும் இருள் தோன்றிற்று. பிறகு சற்றுநேரத்திற்கெல்லாம் அவ்விரண்டுதுண்டுகளும்ஒன்றுசேர்ந்துமுழுச் சந்திரனாகத்தோன்றி பிரகாசிக்க ஆரம்பித்தது. இதனைக்கண்டு யான் பெரும் ஆச்சரியமடைந்துஅதன் இரகசியம் இன்னதெனப் புலப்படாதிருந்துவந்தேன். இந்நிலைமையில் அரப் தேசத்திலிருந்து வியாபாரத்திற்காக ஒரு கூட்டம் வந்தது. அக்கூட்டத்தார், 'மக்காவில் ஹாஷிம்வர்க்கத்தாரில் ஒருவர்தோன்றி, தாம் ஆண்டவன் புறத்திலிருந்து உலகமடங்கலுக்கும் நபியாக அனுப்பப்பட்டிருப்பதாக அறிவித்தார். மக்காவாசிகள் அவருடைய இவ் வார்த்தையை ஒப்புக்கொள்வதற்காக, மற்ற நபிமார்கள் அற்புத நிகழ்ச்சிகளை வெளியாக்கியதுபோல் அவரிடமிருந்தும் அற்புத நிகழ்ச்சி வெளியாகவேண்டுமென வற்புறுத்தி வானத்தில் தோன்றியுள்ள சந்திரன் இருபாகமாகப் பிளந்து ஒரு பாகம் மேற்குத் திசையிலும் மற்றொருபாகம் கிழக்குத் திசையிலும் சென்று மறைந்து பிறகு மறுபடியும் அவ்விரண்டு துண்டும் முன்னிருந்ததுபோல் ஒன்றுசேர்ந்து போகும்படி செய்து காட்ட வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அவர், ஆண்டவனின் கிருபையால் அவ்வாறே செய்து காட்டினார் எனக் கூறினார்கள். அதுமுதல் அரப்தேசம் சென்று அவர்களைச் சந்திக்கவேண்டுமென்னும் கவலை என் மனதை வாட்டிக்கொண்டிருந்தது. பிறகு யான் அரப் தேச யாத்திரைக்காகவுள்ள சில சாமான்களையும் வியாபாரச் சரக்குகளையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்று மக்கமாநகர்வந்து அவர்களைப்பற்றிவிசாரித்தேன். அங்குள்ளோர்அவர்களுடைய அடையாளம் இருப்பிடம் முதலியயாவற்றையுந் தெரிவித்தார்கள். அதுபோல் அவர்களிருப்பிடஞ் சென்று அனுமதிபெற்று உள்ளால்நுழைந்து பார்க்கும்போது, பெரும் திரளான மகா ஜனங்களுக்கிடையே அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள்; அவர்களுடைய முகம் ஒளியினால் இலங்கிக்கொண்டிருக்கிறது; ஏற்கனவே மலை அடிவாரத்தில் வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்தக்கால் நான் தூக்கிவந்தவரென்று எனக்கு சற்றும் புலனாகவில்லை. நான் முன்சென்று லலாம்செய்தேன். என்பக்கல் அவர்கள் திரும்பிப் பார்த்து குஞ்சிறிப்புச்சிறித்தவர்களாய்யான் இன்னாரென்று தெரிந்துகொண்டார்கள். அதுபொழுது அவர்களிடம் ஒரு தட்டத்தில் பேரீச்சம்பழம் வைக்கப்பட்டிருந்தது ஒரு பெரும் கூட்டத்தினர் அவர்களுக்குச் சூழால் உட்கார்ந்துகொண்டு பெரும் சங்கை

மரியாதை செய்துகொண்டிருந்தார்கள், இதனைக்கண்டவுடன் என்மனதில் ஓர் திடுக்க மேற்பட்டு என்னை முன்செல்லவிடாது தடை செய்து விட்டது. அங்கிருந்தோர் என்னிலைமையைக் கண்டு சமீபத்தில் வரும்படி அழைத்தார்கள். அவர்கள்சாப்பிடுவதோடு சேர்ந்து கொள்வது மானிடத்தன்மைக் குறிய காரியமென்று அவர்கள் கூறியதால் நான் முன்சென்று அவர்களுடன் உட்கார்ந்து, பேரீச்சம்பழம் சாப்பிடுவதில் அவர்களுடன் கூட்டாய்க் கொண்டேன். அதுபொழுது தங்களது சங்கை பொருந்திய திருக்கரத்தால் அவைகளை எனக்கெடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே நான் எடுத்துச் சாப்பிட்டது போக அவர்களது திருக்கரத்தால் 6 பேரீச்சம்பழத்தை எனக் கெடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப்பின் என்னை நோக்கிப்பார்த்துச் சிரித்துவிட்டு இன்னும் தாங்கள் என்னை இன்னாரென்று தெரிந்து கொள்ளவில்லையா? எனக் கேட்டார்கள். அதற்கு யான் உண்மையாகவே தங்களைத் தெரிந்துகொள்ள முடியவில்லை எனக் கூறினேன். அதற்கு அவர்கள், தாங்கள் பெரும் வெள்ளத்தில் என்னை முதுகில் சுமந்து ஒட்டகம் மேயுமிடத்திற்கு கொண்டுவந்துவிட்டது ஞாபகமில்லையா? வெனக் கேட்டார்கள். அதற்குப்பின் அவர்களை யான் இன்னாரென்று தெரிந்து கொண்டு அழகிய வதனத்தையுடைய வாலிபரே! தாங்கள் சொல்வது சரிதான் எனக் கூறினேன். உடனே அவர்கள் கையைநீட்டினார்கள். நானும் என் கையை நீட்டினேன். அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதற் றசூலுல்லாஹி, எனக் கூறும்படி சொன்னார்கள். அதனை முழுமனதோடு ஏற்று நிறைவேற்றினேன். அதனால் உலகதயாளர் சற்குணசீலர் (ஸல்.) அவர்கள் அதிக சந்தோஷமடைந்தார்கள். பிறகு யான் அங்கிருந்து புறப்படுங்கால் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் "அல்லாஹ்தஆலா உம்முடைய வயதில் பரக்கத்துச் செய்வானாக" வென ஆசீர்வாதம் புரிந்தார்கள். அவ்வாசீர்வாதத்தைப் பெற்று சந்தோஷமாகத் திரும்பிவந்தேன். நான் எம்பெருமானார் (ஸல்) அவர்களிடஞ் சென்று இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டு சிறப்பிக்கப்பட்டுப்போனதானது எனக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்துக்கொண்டிருந்தது. உலகதயாளர் காத்த முன் நபிய்யின் (ஸல்.) அவர்களின் பிரார்த்தனை ஆண்டவனிடம் ஒப்புக்கொள்ளப்பட்டுப்போயிற்று போலும். ஆகவே இதுகாலை எனக்கு 600 வயதிற்குச் சற்று அதிகமாக யிருக்கிறது. இவ்வூரிலிருப்பவர்களெல்லாம் என் சந்ததிகளும் சந்ததிகளின் சந்ததிகளுமாகும் என்பதே. இது விஷயங்களை சரித்திராசிரிய நிபுணர்களாகிய ஸலாஹுத்தீன், அல்லாமா ஷம்ஸுத்தீன் முதலானோர் தங்கள் கிரந்தங்களில் எழுதியிருக்கின்றார்கள்.

ஞானதூதனின் விஷமத்துக்குக் கசையடி.

இஸ்லாம் மதம் தெய்வீகக் கொள்கையையும், சமாதானத்தையும் போதிக்கிறது. எம்பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தீர்க்கதரிசிகளின் கிரீடமாகும்.

"நிச்சயமாக நாம் உம்மை உலகத்தாருக்கு (ரஹ்மத்) கிருபையாக அனுப்பினோம்" (திரு குர் ஆன்.) "நற்குணங்களை உலக மக்களிடை பூரணமாக்குவதற்கு நான் அனுப்பப்பட்டேன்." (திருநபி வாக்கியம்) இப்ராஹீம் (அலை) அவர்களின் (துஆ) பிரார்த்தனையாகவும், ஈஸா (அலை) அவர்களின் நன்மாராயமாகவும் இவ்வுலகத்தின் கண் அவதரித்தவர்கள் நமது உலக ரக்ஷகர் முஹம்மது நபி (ஸல்) அவர்களேயாகும். உலக மக்களிடை சமத்துவத்தையும், தெய்வீகக் கொள்கையையும் பூர்த்தியாக்கியவர்

களும், அட்டூழியச் செய்கைகளையும் அநாகரீகக் கொள்கைகளையும் இருந்த விடந்தெரியாது துறத்தியவர்களும் அம்மகானவர்களே யாகுமென்று கசடறக்கற்ற இதர மதஸ்தர்களும் தங்கள் நூற்களிலும் சொற்பொழிவுகளிலும் வெளியிட்டிருப்பதை ஞானதூதனின் விஷமக் கட்டுரைக் காரர் அறியாதிருப்பது பெரும் விந்தையல்லவா? இற்றைவரை அந்நபி அவர்களின் மான்மியத்தை நாகரீகத்தில் முதிர்ந்த ஐரோப்பியர்களும் மெச்சிக் கூறியிருக்கின்றனர். எனவே ஆங்கிலப் பிரபு வாய லார்ட் ஹேட்லி போன்ற கிறிஸ்துவத் தலைவர்கள் அந்நபி அவர்களின் உன்னதக் குணங்களையும் சத்தியக் கொள்கைகளையும் தெளிவாக அறிந்ததே அன்னவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவக்காரணமாக யிருந்ததென அவர்களது சொற்களினால் வெள்ளிடையாகின்றது. ஆனால் ஞான தூதனின் கட்டுரைக்காரர் இவ்விஷயங்களை எல்லாம் அறியாதிருப்பது அவரது மன வைராக்கியத்தின் கொடுமையென்றே கருத நேரிடுகிறது. மேலும் அவர், எம்பிரான் நபிகள்திலகம் (ஸல்) அவர்களின் உண்மையான ஜீவியசரிதையைப்படித்தறியாது அவர்களின் விரோதிகளால் வரையப்பட்டுள்ள ஒரு சில புழுகுமூட்டைகளைமட்டும் படித்துவிட்டு அவைகளிலுள்ள தீயமொழிகளை ஓர் கட்டுரையாகப் பிரசுரித்ததானது, கத்தோலிக் நண்பர்களிடம் மேம்பட்டம்பெற நாடிச் செய்தவைபோலும். ஞானதூதன்போன்ற ஆயிரம் குட்டி ஞான தூதன்களும், அஞ்ஞான தூதன்களும் ஒன்றுக்கூடினாலும் நமதுபெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் கௌரவத்தை ஒரு சிறிதுங்குறைக்க முடியாதென்பது இம்மியும் சந்தேகமற்றனவாம். விஷமக் கட்டுரைக்காரரே! உம்முடைய கட்டுரையிலிருக்கும் பிதற்றலுக்கு எம்மிடம் தக்க விடைகளிருக்கிறதென்பதை நீர் உணர்வீராக. அதனால் உம்முடைய முணுமுணு மந்திரம் இருந்தவிடந்தெரியாது ஓடிப்போம் என்பது திண்ணம். மேலும் "சத்தியம் வந்துவிட்டது, அசத்தியம் அழிந்து போய்விட்டது, நிச்சயமாக அசத்தியமானது அழிந்துபோகிறதாயிருக்கும்."

(திரு குர் ஆன்).

ஈஸா (அலை) அவர்களின் முன்னறிக்கை

"மேலும் மரியமுடைய மகனான ஈஸா அலை) அவர்கள் (இஸ்ரவேல் கோத்திரத்தை நோக்கி) இஸ்ராயீலின் சந்ததிகளே! நிச்சயமாக நான் என் முன்னிருக்கிற தௌராத்தை உண்மைப்படுத்துகிறவனும் எனக்குப் பின்னால் வரக்கூடிய (றசூல்) தீர்க்கதரிசியைக் கொண்டு நன்மாராயங் கூறுபவனாகவும் இருக்கிற நிலைமையில் உங்களிடம் அல்லாஹ்வின் தூதனாக வந்திருக்கிறேன்; அந்த (றசூல்) தீர்க்கதரிசியின் நாமம் அஹ்மது என்று கூறியபோது" (திரு குர்ஆன்). குர்ஆனின் இத்திவ்விய அத்தியாயத்தில், ஈஸா (அலை) அவர்களால் நமது பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வருகை விஷயமாய் முன்னறிக்கை செய்யப்பட்டிருப்பது நன்கு புலனாகிறது.

இதனை ஞானதூதனின் கட்டுரைக்காரர் போன்ற சுயநலங்கருதிகள் அங்கீகரிக்கத் தயங்குவார்களாயின் அன்னவர்களின் கையிலிருக்கும் இஞ்ஜீல் வேதமெனும் புதிய ஏற்பாட்டை சற்று நோக்குவார்களாக:— "நான் பிதாவை வேண்டிக்கொள்வேன்; அப்பொழுது அவர் என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படியான சத்திய ஆவியாகிய (பாரகலீத்) வேறொரு தேற்றரவாளரை உங்களுக்குத் தந்தருளுவார்." (யோ 14 அ 16 வ) "நான் உங்களுக்கு உண்மையைக் கூறுகின்றேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால் தேற்றரவாளர் உங்களிடத்தில் வரார்; நான்போவேனாகில், அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்; அவர் வந்து பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்துணர்த்துவார்; இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியவனாயுள்ளேன் அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்; சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாகப் பேசாமல் தாம் கேள்விப்பட்ட யாவையுங் கூறிவிட்டு, வரப்போகிற காரியங்களையும் உங்களுக்கறிவிப்பார்; அவர் என்னுடைய விஷயங்களை எடுத்து உங்களுக்கு அறிவிப்பது கொண்டு என்னை மகிமைப்படுத்துவார்." (இ-16-8) இஞ்ஜீலினுள்ள இவ்வாக்கியங்களிலிருந்து, பின்னர் வரப்போகிற ஓர் நபியைப் பற்றி ஈஸா (அலை) அவர்கள் முன்னதாகவே

அறிவுறுத்தி யிருக்கிறார்களென்பது வெளிப்படையாகிறது. எனவே ஈஸா (அலை) அவர்களின் முன்னறிக்கைப்படிவந்தவர்கள் நமது நாயகம் முஹம்மது நபி (ஸல்) அவர்களே யாகுமென்பது (பாரகலீத்) என்ற ஹிப்ரு பதத்தைக்கொண்டே ஸ்திரப்படுகிறது. பாரகலீத் என்ற ஹிப்ரு பதத்தை அரபியில் மொழிபெயர்த்தால் அஹ்மது அல்லது முஹம்மது எனப் பொருள்படும். இதுவே, நமது நாயகம் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் வருகையைக் குறித்து இஞ்ஜீலில் வரையப்பட்டுள்ள ஈஸா (அலை) அவர்களின் முன்னறிக்கையென ஞானதூதன் ஆசிரியர் போன்ற கத்தோலிக் நண்பர்களுக்குப் பன்முறை ஞாபகமூட்டிக்கொள்ளுகிறோம். கத்தோலிக் நண்பர்களே! உங்கள் கையிலிருக்கும் இஞ்ஜீல் வேதமென்ற புதிய யேர்ப்பாட்டை சமாதானத்துடன் சற்று உற்று நோக்குவீர்களேயாயின், ஈஸா (அலை) அவர்களால் முன்னறிக்கை யிடப்பட்டவர்கள், எங்கள் நாயகம் முஹம்மது நபி (ஸல்) அவர்களேயென்று நன்கு தெரிந்துகொள்வீர்கள். "குருடனும், பார்வையுள்ளவனும் சமமாவானோ? இல்லை" (திரு குர்ஆன்.)

இஸ்லாத்தில் பலாத்காரமில்லை.

"மார்க்கத்தில் பலாத்காரமில்லை, நேர் வழியானது வெளிப்படையாகிவிட்டது." (திரு குர்ஆன்) "முஹம்மதே! உம்முடைய றப்பின் பாதையளவில் பூராயத்தைக்கொண்டும் அழகான உபதேசத்தைக்கொண்டும் (மனிதர்களை) கூப்பிடும்" (திரு குர்ஆன்) ஞானதூதனின் விஷமக் கட்டுரையில் அந்நகரை (மதீனாவைத்) தனது தலைமைப் பட்டணமாகக் கொண்டுக் குரூர வழியாகவும், தீய வழியாகவும் சுற்றுப் பாகங்களிலுள்ள ஜனங்களைத் தன் மதத்தில் சேர வலுவந்தப் படுத்தி வாளாலும், நெருப்பாலும் தன் வேலையை உக்கிரமாய் நடாத்தினான் என்று தன் மனம் போன்று வரைந்திருப்பதுதான் அக்கட்டுரை கர்த்தா படித்த நூலிருக்கிறது போலும்! அல்லது, அவர் இரவில் அவ்வாறு கனவு கண்டார்போலும். இதென்ன புதுமை! இந்நாகரீக உலகத்தில் விஷமக் கட்டுரைக்காரர் சத்திய இஸ்லாத்தின் சமாதானக்கொள்கைகளை அறியாதிருப்பது அவரது மடமைத்தனமென்றே கூறவேண்டும். ஏனதன்பரே! இஸ்லாம் மார்க்கத்தின் அழகிய கொள்கையும் எம்பிரான் (ஸல்) அவர்களின் தயாள சிந்தையுமே இஸ்லாம் மதம் இத்துணை தூரம் வலுவடையக் காரணமென்பதை நீர் நன்குணர்வீராக. அதற்குத்தக்க அத்தாட்சிகளிருக்கின்றன; அவைகளை அறிய வேண்டுமானால் கிறிஸ்தவப்பாதிரிகளும் கிறிஸ்தவமார்க்க வல்லவர்களுமான (Gibbon) கிப்பன், (Dozy) டோஸி, (Isac Taylor) இஸ்ஸக் டய்லர், (Rowssean) ரோவ்ஸன், (Washington Irving) வோஸிங்டன் இர்விங், (David Herkohart) டேவிட் ஹெற்கோஹார்த், (Gustow-lebon) கோஸ்தாலிபன் போன்றவர்களுடைய நூற்களையும், ஷெய்குல் இஸ்லாம் அப்துல்லா குவிலியம் அவர்களுடைய நூற்களையும் திரட்டிப் பார்ப்பீராயின் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தோற்றும். இதுவே உம்மைபோன்ற மத வைராக்கியம் படைத்தவர்களால் இஸ்லாத்தின்மீது சுமத்தாட்டும் பழிகளாகும். புத்திக்கு ஏற்ற மதம் இஸ்லாம் ஒன்றே "அல்லாஹ்வினால் அங்கீகரிக்கப்பட்ட மதம் இஸ்லாம் ஒன்றே" (திரு குர்ஆன்). தவிர ஞானதூதனின் கட்டுரையில் நாகரீகமற்ற பாமர கல்வி இல்லா ஜனங்கள் இதற்குட்பட்டார்களேயன்றி, மற்றப்படியல்ல. என்று கூறுகிறார். இதுவும் அவரின் புலம்பலில் ஒன்றேயாம். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அவதரித்த புண்ணிய பூமியாகிய திருமக்கமா நகரானது, இஸ்லாம் தோன்றுமுன்பே கல்வியிலும் வியாபாரத்திலும் பிரக்யாதிபெற்ற பூமியாக விளங்கிற்றென்று சரித்திர ஆசிரியர்கள் அறிவுறுத்துகிறார்கள். அபூபக்ர் (ரலி) அவர்களும், நாயகி கதீஜா (ரலி) அவர்களும், அஞ்ஞானிகளாகவோ அல்லது கல்வியில்லா பாமரர்களாகவோ யிருக்கும் நிலைமையில் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினார்களென்று உண்மை சரித்திரங்களில் காணுதிருப்பது அவருடைய கூற்றை மறுப்பதாக யிருக்கிறதல்லவா?

அப்துல்லாஹிபுனுஸலாம், கஃறுபுல் அஹ்பார் போன்ற பாதிரிகளும், ஷெய்குல் இஸ்லாம் அப்துல்லா குவிலியம், லார்டு ஹெட்லி போன்ற பழுத்த கிறிஸ்தவர்களும் தங்கள் அஞ்ஞானத்தினாலும் மடமையினாலுமா இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினார்கள்? அல்லது தங்கள் சிற்றின்பங்களைச் சம்பூர்ணமாகச் செய்து கொள்ளவா இஸ்லாம் மார்க்கத்

தைத் தழுவினர்கள்? இதுவன்றி இற்றைய நாள்வரை ஐரோப்பாவிலும், இந்தியாவிலுமுள்ள அநேகக் கிறிஸ்தவர்களும் மற்ற மதஸ்தர்களும் கூட்டங் கூட்டமாக இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி வருவதை புதினப் பத்திரிகைகளின் வாயிலாய் அவர் தெரிந்துகொள்ளாது போனதேனோ? அறிஞர் ஜார்ஜ் பர்னார்ட்ஷா அவர்கள், 'ஐரோப்பாவில் இஸ்லாத்தின் சூரியன் உதித்துவிட்டது' என்று கூறியிருப்பது இவருக்குத் தெரியாது போலும்.

தவிர இஸ்லாம் மதமானது, புத்திக்கும் யுக்திக்கும் நேரான மதமென்று கல்வியிற் சிறந்த கிறிஸ்துவப் பாதிரிமார்களும், கிறிஸ்தவ வல்லவர்களும் தங்கள் புத்தகங்களில் வரைந்திருக்கின்றனர். அவர்களிலொருவரான கிப்பன் என்பவர் கூறுவதாவது:—"இஸ்லாம் மார்க்கமானது ஏழைகள் முதல் சக்ரவர்த்திகளுள்பட எல்லா மனிதர்களேயும் தன்னுடைய சட்டங்களில் சேர்த்துக் கொண்டது; அம்மதமானது நியாயமானவும் நாகரீகமானவுமாகிய சட்டங்கள் அமைந்ததாக யிருக்கிறது; அதுபோன்ற சட்ட திட்டங்கள் உலகில் காணப்படுவதே கிடையா" என்பதே.

இஸ்லாம் மதத்தில் பூரணக்கல்வியுண்டு. ஷெ கட்டுரையில் புத்திக்குக் கஷ்டமான படிப்பினே யொன்றும் இஸ்லாம் மதத்திலில்லை. சுபாவக் குணங்களுக்குத் தகுந்ததும், இச்சைக்கு யேற்றதுமானமதம் இது. என்று வரையப்பட்டிருக்கிறது. இக்கதையை நோட்டமிடுங்கால், இது காக்காய் வலிப்புப்போன்ற பிணியினுல் உளருவாய்ப்பட்டுப் பிதற்றுவோனின் புலம்பலுக்கு ஒப்பாய் இருக்கிறது. அப்புலம்பலுக்கு மிஸ்டர் (Dozy) டோஸி அவர்களால் வரையப்பட்ட ஔடதம் தான் தக்கனவாகும். அது பின்வருமாறு:—ஐரோப்பியர் ஒரு ஊசித்துவாரமளவாவது கல்வியின் ஒளியைக் காணுது அறியாமை என்னும் இருளில் தயங்கிக்கொண்டிருக்கும் தருவாயில் முஸ்லிம்களின் பக்கத்திலிருந்து கல்விகள், மரியாதைகள், தத்துவ சாஸ்திரங்கள், கைத்தொழில்கள் முதலிய எல்லாக் கல்விச் சுடர்களும் உதயமானது என்பதே. அக்காலத்தில் (Egypt) ஈஜிப்ட், பக்தாத், பஸரா, சமர்கந்த், டெமஸ்கஸ், கோடோவ்வா, பாரசீகம், கர்ஞடா, கைர்வான் ஆகிய பட்டணங்களே கல்வியின் வித்தியா மண்டலங்களாயிருந்தன; அவைகளிலிருந்தே மற்றைய சமுகங்களும் ஐரோப்பியர்களும் கல்விகளைக் கற்றுக் கொண்டனர் என்பதே. இது நமது நண்பருக்குப் போதுமான ஔடதமல்லவா?

திரு குர் ஆன் மனித வாக்கியமல்ல.

"நாம் நமது அடியார் முகம்மது (ஸல்) அவர்கள்மீது இறக்கிவைத்த (திரு குர் ஆனினுள்ள அத்தியாயங்களில்) நீங்கள் சந்தேகங் கொள்வீர்களாயின் அதுபோன்ற (வாக்கலங்காரமும் அழகிய ஒழுக்கமுமுள்ள) ஒரு (சூரத்) அத்தியாயத்தைக்கொண்டு வாருங்கள். மேலும் (அதற்குதவியாக) அல்லாஹ்வைத் தவிர உள்ள உங்கள் தேவன்மார்களேயும் அழைத்துக் கொள்ளுங்கள். (குர்ஆனை முஹம்மது (ஸல்) அவர்கள் தங்கள் மனயுக்திப்படி சொன்னுரென்ற வார்த்தையை) நீங்கள் உறுதிப் படுத்துவீர்களாயின் கொண்டுவாருங்கள். அவ்விதம் (ஒரு அத்தியாயத்தை) நீங்கள் கொண்டுவர முடியாவிட்டால் ஒருபோதும் செய்யவே மாட்டீர்கள். (திரு குர்ஆன்)

இறைவனின் இத்திவ்விய மொழியினுல் புலப்படுவது யாதெனில், அரபிக் கலேகளில் சிறந்த தேர்ச்சிபெற்ற அரபிகளிடம் திருகுர் ஆனிலுள்ள அத்தியாயங்கள் போன்ற ஒரு அத்தியாயத்தைக்கொண்டு வரும்படி (challenge) அழைக்கப்பட்டும் அவர்களால் கொண்டுவரமுடியாமல் மௌனம் சாதித்தார்கள். அதாவது முஹம்மது (ஸல்) அவர்கள் தங்கள் மனயுக்திப்படி செய்தார்களென்று அவ்வரேபியர்கள் சந்தேகங் கொண்டிருந்தார்களாதலின், அச்சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு இறைவனுல் அவர்களே அழைக்கப்பட்டது. இதனுல் ஞான தூதனின் விஷமக் கட்டுரைக்காரர் தன் கட்டுரையில் வரைந்த முஹம்மது உயிருள்ளமட்டும் அவன் சொன்னதுதான் சட்டமாயிருந்தது என்ற புலம்பல் தவறென தெளிவாகத் தெரியவருகிறது. ஆனுல் குர்ஆனிலுள்ள அத்தியாயங்கள் போன்ற ஒரு அத்தியாயத்தைக் கட்டுரைக்காரர் தன் துணைவர்களின் உதவி கொண்டு வரைந்து விடுவாராயின் அவர் சொன்னது சத்தியமெனச் சொல்லலாம். அது ஒருக்காலும் அவரால் முடியாது. கட்

டுரையாளரே இது விஷயத்தைச் செய்து முடிக்க உம்மாலும் உமது உதவியார்களாலும் முடியாதென்பது உலகமறிந்த விஷயம். மேலும், திவ்விய குர்ஆன் ஷரீபாது முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனால் அனுப்பப்பட்ட கால முதல் இதுவரை கூட்டப்பட்டதாகவோ, குறைக்கப்பட்டதாகவோ அல்லது புதிய ஏற்பாடு பழைய ஏற்பாடென மாற்றப்பட்டதாகவோ யிருப்பதாய் சரித்திரங்களில் காணப்படவில்லை. இதனாலும் குர்ஆன் ஷரீபானது மனிதரால் வரையப்பட்டதல்ல; இறைவனால்கொடுக்கப்பட்டதென்று வெளிப்படையாகின்றது. ஆதலால், குர்ஆனைக் குறித்து கிறிஸ்துவப் பெரியார்கள் கூறியிருக்கும் அபிப்பிராயங்களை இதன்கீழ் விளக்குவாம்:—ஸர்வில்லியம் மூயூர் "திருகுர்ஆனானது ஏக தெய்வக்கொள்கையை நிலைநிறுத்துவதற்கு இணையற்ற ஆதாரங்களுடன் மிளிர்கின்றது; சென்ற பன்னிரு நூற்றாண்டுகளாக எத்தகைய மாற்றமும், திருத்தமும் செய்யப்படாமல் திருகுர்ஆன் இருப்பது போன்று வேறெந்த வேதமும் கிடையாதென்பதாகக் கூறுவேன்" (2) கிப்பன் :—"ஏக தெய்வக்கொள்கையை ருஜூபிப்பதற்கு திரு குர்ஆன் இணையற்ற அத்தாட்சியாக இருக்கின்றது" (3) கோயத்தே "திரு குர்ஆனானது மானிட வர்க்கத்தினரனைவர்களையும் நேர்வழியில் நடத்திச்செல்ல இணையற்ற வேதமாயிருக்கின்றது". (4) வாஷிங்டன் இர்விங் "திரு குர்ஆன் உயர்ந்த உன்னதபோதனைகள் நிறைந்ததாக இருக்கிறது." ஏ விஷமக் கட்டுரைக்காரரே! இவர்களைப் பார்க்கிலும் நீர் ரொம்பக் கற்ற பண்டிதரோ?

இஸ்லாம் பெண்களுக்குச் சம உரிமை யளிக்கிறது.

தவிர அஞ்ஞானக் கட்டுரையில், அவன் வேதத்தில் கோரான் பிரகாரம் பெண்கள் அடிமைகளுக்கு சரிசமானமென்று குருட்டுத்தனமாக வரையப்பட்டிருக்கிறது. இதுவும் ....ஞானதூதனின் புலம்பலில் ஒன்றாகும். எம்பிரான் முஹம்மது (ஸல்.) அவர்கள் அவதரிப்பதற்கு முன் மக்காவில் பெண்கள் அடிமைகளைப் பார்க்கிலும் கேவலமான முறையில் நடத்தப்பட்டு வந்தார்கள். அவர்களை உயர் நிலைக்குக் கொண்டு வந்தவர்களும் கேவலக் கொள்கைகளையெல்லாம் தகனஞ் செய்தவர்களும் எங்கள் பிரான் முஹம்மது (ஸல்) அவர்களேயாகுமென பெரியார்களின் சரித்திர நூல்கள் உறுதிப்படுத்துகின்றன. மேலும் வியாச கர்த்தாவே! பெண்களுக்கு எம்பிரான் (ஸல்) அவர்கள் எத்தகைய சமத்துவத்தை அளித்திருக்கிறார்களென்பதை அவர்களது திருமொழிகளினின்றுமே உமக்கு உணரத்தருகிறோம்:—1-வது விசுவாசிகளில் மிக்க பூர்ண விசுவாசிகளாகிறவர்கள், அவர்களின் குணத்தால் மிக்க அழகானவர்களாயும் அவர்களின் குடும்பத்தின்மீது (மனைவியர்மீது) மிக்க அன்புள்ளவர்களாயுமிருப்பவர்களேயாம். 2-வது கல்வி கற்பது முஸ்லிமான ஆண்பெண் இருபாலர்பேரிலும் முக்கிய விதியாகும். 3-வது பலஹீனமான இருவர் விஷயமாய் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். (அவ்விருவர்கள்) பெண்ணும், அடிமையுமாம். 4-வது மேன்மையானவன் பெண்களை சங்கைப்படுத்துவான் கேவலமானவன் அவர்களை அவமானப்படுத்துவான். என்பதே திரு நபி (ஸல்) அவர்களின் இவ்வாக்கியங்களினால் இஸ்லாம்மதத்தில் பெண்களுக்குச் சமவுரிமை அளிக்கப்பட்டிருக்கிறதென்பதை எளிதில் அறிந்துக்கொள்ளலாம். நமது........ நண்பர் இதை அங்கீகரிக்க மறுப்பாராயின் நம் இஸ்லாம்மதத்தில் பெண்களுக்கு அளித்திருக்கும் சம உரிமையைக் குறித்து அவரது தோழர்களான கிறிஸ்தவ வல்லவர்களால் கூறப்பட்டிருக்கும் உண்மை மொழிகளைப்படித்துணர்வாராக. அவைகள் பின்வருமாறு:—ஜார்ஜ் ஸேல் தமது ஆங்கில குர்ஆன் மொழிபெயர்ப்பின் முகவுரையில் கூறுகிறார் அதாவது, "இஸ்லாம் மதத்தில் பெண்களை உயரிய வஸ்துவாகக் கவனிக்கப்படுவது கிடையாதென சில ஆசிரியர்கள் பொய்யாகப் பழிசுமத்தாட்டியது சரியல்ல." போல்தீர்குர்ஆனைக் குறித்துக் கூறுமிடத்தில் அவர் கூறுவதாவது:—"பலஹீனமான அநேகக்குற்றங்களை குர்ஆனின்மீது நாங்கள் சுமத்தாட்டினோம்; ஆனால் குர்ஆன் அவைகளைவிட்டும் பரிசுத்தமானது. மேலும் எங்களிலுள்ள ஆசிரியர்களிற் சிலர் எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய எத்தனையோ விஷயங்களை மிக்கசிக்கலாக வரைந்துவிட்டார்கள். அதாவது முஹம்மது (ஸல்) அவர்கள் பெண்களை புத்தியுள்ள மிருகங்களாகப் பாவித்தார்களென்றும்,

இஸ்லாம் மதத்தில் பெண்களை அடிமைகளுக்குச் சமமாய்க் கருதப்படுகிறதென்றும், இம்மையிலும் மறுமையிலும் அவர்களுக்கு ஒரு வித மோக்ஷமுங் கிடையாதென்று இஸ்லாம் கூறுகிறதென்றும் அவ்வாசிரியர்கள் வரைந்துள்ள சொற்கள் மிக்க பலஹீனமாயிருந்தும் அவைகளை சில பாமரர்கள் அங்கீகரித்து வருகின்றனர். ஆனால் இஸ்லாம் மார்க்கத்தில் பெண்களுக்கு அளிக்கப்பட்டிருக்குஞ் சுதந்திரங்களைப்போல் வேறு எந்த மதத்திலும் அளிக்கப்படவில்லை யென்பது போலீஸ்தா, மூதாவிஸை நோக்கிக் கூறிய சொல்லினால் தெரியவருகிறது. ஏ,....கட்டுரையாளரே! இஸ்லாத்தில் எத்தகைய சுதந்திரம் பெண்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறதென்பதை இப்பொழுதாகிலும் அறிந்துகொண்டீரல்லவா?

ஒருவர் நான்கு பெண்கள் கோள்வது கேவலமா?

ஷை அஞ்ஞானக் கட்டுரையில் ஒவ்வொருவனும் நான்கு பெண்சாதிகளை வைத்துக் கோள்ளலாம் என்று கேலியான முறையில் வரையப் பட்டிருக்கிறது. .... நண்பரே! இஃதோர் கேவலக் கொள்கையென்று கருதுகிறீரோ? எங்கள் சத்திய இஸ்லாம் மார்க்கத்தில் யார் நான்குப் பெண்களைக்கொள்ளலாமென்று கூறப்பட்டிருக்கிறது? அது யாருக்குக் கூடுமென்பதை நீர் அறிவீரா? நான்கு பெண்களை மணந்து கொள்வது, விவாஹஞ் செய்துக்கொள்ளாத ஒரு மனிதன் பல பெண்களை விபசாரஞ் செய்வதைப் பார்க்கிலுங் கேவலமோ? நீர் உமது சாமியார்களிடம் பாவமன்னிப்புத் தேடிவந்த ஆண், பெண்களின் கூற்றுகளைக் கேட்டுணர்வீராயின் ஒவ்வொருவரும் எத்தனைப் பெண்களை விபசாரஞ் செய்திருப்பார்களென்பதைத்தெளிவாக அறிந்துகொள்வீர். 5-2-33உ-ல் வெளிவந்த குடியரசு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள செனிக்கியூ பாதிரியார் எழுதிய "பாதிரிகளும், பெண்களும், பாவமன்னிப்பும்" என்னும் கட்டுரையின் மொழிபெயர்ப்பைச் சற்று படித்துணர்வீராயின் இஸ்லாம் மதச் சட்டங்களின் கண்ணியத்தை அறிந்துகொள்ள உம்மால் முடியுமல்லவா? இஸ்லாம் மதத்தில் நான்கு பெண்களைக் கொள்ளலாமென்ற சட்டம் யாருக்கெனில், ஒழுங்கான முறையில் அப்பெண்களை நடத்துவதற்குப் போதிய சக்தி யுள்ளவனுக்கேயன்றி ஏனையோர்க்கல்ல. நான்குப் பெண்களைக் கொள்வதால் எத்தகை நன்மைகளுண் டென்பதைச் சிந்திப்போர்களுக்கு அவை எளிதில் புலனாகும். தவிர கிறிஸ்து மதமானது ஓர் பெண்ணுக்கதிகமாக விவாகஞ் செய்யக்கூடாதென்று துலக்கவில்லை; இஞ்ஜீலிலும் கூறப்படவில்லை. ஆனால் ஓர்பெண்ணுக்கதிகமாக வைத்துக்கொள்ளக் கூடாதென்ற சட்டம் முன்னுள்ள கிறிஸ்தவத் தலைவர்களால் ஏற்படுத்தப்பட்டதே யன்றி இஞ்ஜீல் வேதத்தில் அச்சட்டம் கிடையாது. இதற்குத்தக்க ஆதாரம் பின்வருமாறு:—மிஸ்ரிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "அல்ஹிலால்" என்றப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்த ஜார்ஜீ ஸெயிடான் என்பவர் கூறியிருக்கின்றார். "மனிதர்கள் ஒற்றுமையாகச் செய்துவரும் சில நாகரீகக் கொள்கையானது மதச் சட்டங்களிற் சிலதிற்கு முரணாகக் காணப்படுகிறது; அவர்கள் செய்துவரும் அந்நாகரீகக் கொள்கைகளுக்கு அவர்கள் ஒற்றுமையாயிருப்பதுவே பலத்த ஆதாரமெனக் கருதுகின்றனர். மேலும் அதற்காக வேதவாக்கியங்களைத் தம் இஷ்டம்போல் மொழி பெயர்த்திருக்கின்றனர். உதாரணமாக, கிறிஸ்து மதத்தில் ஓர் பெண்ணுக்கதிகமாக விவாகஞ்செய்து கொள்வது கூடாதென கூறப்படாததால் ஒரு மனிதன் எத்தனைப் பெண்களையும் வைத்துக் கொள்ளலாம் ஆனால் முன்னுள்ள கிறிஸ்தவத் தலைவர்கள் சில விஷயங்களைக் கருதி ஒரு பெண்ணுக் கதிகமாகக் கொள்ளக்கூடாதெனச் சட்டமிட்டனர். என்பதைக் கூறலாம்.

முஹம்மது நபி (ஸல்.) அவர்களின் உன்னத குணங்கள்.

"நிச்சயமாக தாங்கள் மிக்க மகத்தான குணமுடையவர்களா யிருக்கின்றீர்கள்" (திருகுர்ஆன்) முஹம்மதுநபி (ஸல்.) அவர்களின் சரித்திரங்களைக் கற்றறிந்த மேதாவியைப் போல் மிக்கக் கெம்பீரமாய் **'அக்கிரம மகம்மதுக்கும் அவன் கொள்கைகளுக்கும் அவனும் அவனுக்குப்பின் வந்தவர்களும் தங்கள் மதத்தைப் பரவச்செய்த விதத்துக்கும் எத்தனைப் பார தூரவித்தியாசம்!** என தன்மத நிலைமை இன்னதென அறியாத கட்டுரைக் கர்த்தா வரைந்து எம்பிரான் முஹம்மது(ஸல்.) அவர்கள்மீது இத்தகைய வசைமொழிகளைச் சுமத்

தாட்ட முயல்வது அவரது பிறவிக்குணமென்றே கருதுகிறோம். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்.) அவர்கள் அக்கிரமக் குணங்களை வெறுத்தவர்களென்பது பின்வரும் அவர்களது உன்னதக் குணத்தால் வெளிப்படையாகின்றது. அதாவது, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஒரு முறை ஹஜ்ரத் 'காலித்' அவர்களை "பனூஜூதாமா" வர்க்கத்தாரிடையே இஸ்லாமியப் பிரசாரஞ் செய்வதற்காக அனுப்பிவைத்தார்கள். ஹஜ்ரத் காலித் (ரலி.) ஆங்கு பணியாற்றுங்கால் வாட்பிரயோகஞ் செய்துவிட்டார்கள். எம்பெருமானார் முஹம்மது (ஸல்.) அவர்களுக்கு இவ்விபரீத விஷயந்தெரியவே, மிகவும் மனம்வருந்தித் தங்களது இருகரங்களையும் வானின் பக்கல் உயர்த்தி, "ஏ! ஆண்டவனே, காலிதின் இச்செயலினின்றும் யான் நிரபராதியா யிருக்கின்றேன்" எனப் பரிந்து பிரலாபித்து உடனே ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்களை ஆங்கு அனுப்பி வைத்தார்கள். எனவே அலீ (ரலி.) அவர்கள் அவ்விடத்தில் கொல்லப்பட்டுப்போன ஒவ்வொருவருக்காகவும் நஷ்டயீடு செலுத்தினர்கள். அக்கூட்டத்தாரின் இறந்த நாய்க்காகவும் நஷ்டயீடு கொடுக்கப்பட்டது.

முஹம்மது நபி (ஸல்) தீர்க்கதரிசிகளில் சிறந்தவர்கள்.

"தீர்க்கதரிசிகளில் சிற்சிலரை சிலர்களைக் காண சிறந்தவர்களாக ஆக்கிவைத்தோம்." (திரு குர்ஆன்). நமது வள்ளலிரசூல் (ஸல்) அவர்கள் எல்லாத் தீர்க்கதரிசிகளிலும் சிறந்தவர்களென்பது திண்ணம். ஏனெனில், அவர்கள் தீர்க்கதரிசியாக வந்த காலமுதல் இதுவரை அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட குர்ஆனில் கூடுதல் குறைவு ஏற்படாமலிருப்பதும், அவர்களின் நன்னெறிகளும் அழகிய சட்டதிட்டங்களும் அழியாப்பொருளாய்த் துலங்கிவருவதும் அதற்குப்போதிய சான்றுகும். மேலும் அவர்களை எல்லா மனிதர்களுக்கும் தீர்க்கத்தரிசியாக அனுப்பப்பட்டிருப்பதும், அவர்களின் வருகையைக் குறித்து "மூஸா" "ஈஸா" (அலை)போலொத்த நபிமார்கள் முன்னறிக்கைசெய்திருப்பதும் அவர்கள் மற்ற தீர்க்கத்தரிசிகளைவிட சிறந்தவர்களென்பதற்கு மற்றொரு காரணமாகும்.

(கொளும்பு அல்மத் ரஸத்துல் அலிய்யா மாணவர் சங்கம்).

காசநோயைத் தடுப்ப தெவ்விதம்?

இந்த வியாதியானது எல்லா தேசங்களிலும், எல்லா மதஸ்தர்களிலும், எல்லா வகுப்பினர்களிலும் வியாபித்திருக்கும்படியான வியாதியாக இருப்பதால், இதற்கு மூலக்காரணமாக யிருக்கும் கிருமிகளால் தொத்து உண்டாகாமல் தடுப்பது அசாத்தியம். ஆனல், ஆரம்பத்திலேயே இது சுலுவில் தடுக்கக்கூடிய வியாதி. மற்ற தொத்து வியாதிகளைப்போலன்றி, இந்த வியாதி ஏற்படுவதற்கு அநேக மாதங்கள் அல்லது அநேக வருடங்களும்செல்லும். ஆனதுபற்றி, அதை வரவொட்டாமல் தடுப்பதற்குள்ள வழிகள் அநேகம் நம்மிடம் உண்டு.

காசநோயின் தொத்து சம்பந்தம், சிசுவாயிருக்கும்போதும், குழந்தைப் பருவத்திலும் உண்டாகக்கூடியது. ஆனதுபற்றி, சிசுக்களையும், வளரும் குழந்தைகளையும் சரியாய்க் கவனித்து, அவைகளுக்குச் சரியான ஆகாரம் ஊட்டி வந்தால், இந்த வியாதி முதுமைப் பருவத்தில் அதிகம் பேர்களுக்கு வருவதில்லை. காசநோயைத் தடுப்பதற்கு தாய் சிசு பரிபாலன ஸ்தாபனங்கள் தான் முக்கியம். அங்கே தாயையும் குழந்தையையும் செவ்வையாய்ப் பரீக்ஷித்துப் பார்த்து, தகுந்த புத்திமதிகள் புகட்டவேண்டும். நவீன தேசங்களில் எங்கெங்கே தாய் சிசு பரிபாலன ஸ்தாபனங்கள் முக்கியமாய்க் கவனிக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம் காசநோய் குறைந்துகொண்டுவருகிறது.

காசநோயைத் தடுப்பதற்குள்ள முக்கியமான மற்றொரு பரிகாரம் யாதெனில், அந்த வியாதியை ஆரம்பத்திலேயே கண்டு பிடித்

தலேயாம். போஷணைக் குறைவினாலும், மலேரியாக்கொக்கிப்புழு வியாதி முதலிய வியாதிகளினாலும், வியாதியை எதிர்க்கும் சக்தி அவர்களிடம் குறைந்து போவதால், அநேகக் குழந்தைகளிடமும், வயதானவர்களிடமும் ஏற்கனவேயுள்ள காசநோய் விஷக்கிருமியானது தலை தூக்கிக்கொண்டு வெளிப்படையாக காசநோய்க் குணங்களைக்காட்டி விடுகிறது. களைப்பு, பசியின்மை, சோர்வு, பலஹீனம், அற்பஜுரம், அது சாயங்கால வேளையில் கண்டு, கண்கள், கால் கைகள் இவைகளில் எரிச்சல் உண்டாதல், ஜலதோஷம் அடிக்கடி உண்டாதல், இருமல் இவைகள் யாவும் அதற்கு முன்னால் காணப்படும் குறிகளாகும். இந்தத் தருணத்தில் அந்த வியாதியைக் கண்டு பிடித்து, சரியான ஆகாரம், திறந்த வெளிக்காற்று, ஓய்வு முதலியன கொடுக்கும்பக்ஷத்தில், நோயாளிகள் அதை விட்டு மீண்டு விடலாம்; அவர்களுக்குள்ள பழைய ஆரோக்கியமும் கிடைக்கும். காசநோய் ஆஸ்பத்திரியானது இந்த சமயத்தில் அதிக உதவியாயிருக்கும். சாதாரணமாய் பலஹீனமுள்ள குழந்தைகளை இந்த ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்க் காட்டினால், அங்குள்ள வைத்தியர்கள் இந்த வியாதி உண்டா இல்லையா வென்று கண்டுபிடித்து, அப்படி இருப்பதாயின், அது தலையெடுக்க வொட்டாமல் தகுந்த சிகிச்சை செய்வார்கள்.

கண்டவிடத்தில் எச்சில் துப்புவதானது, இந்தவியாதி பரவுவதற்கு ஒரு முக்கிய காரணமாகும். காசநோய் வியாதியஸ்தனின்கோழையில் கோடிக்கணக்கான கிருமிகள் உயிருடன் இருக்கின்றன. இவை வீட்டைப் பெருக்கும் போது எழும்பும் தூசு மூலமாயும், மோட்டார் முதலிய வண்டிகளால் எழும்பும் தூசு மூலமாயும் ஆகாயத்தில் கொண்டு போகப்பட்டு, ஆரோக்கியமுள்ள ஜனங்களால் உறிஞ்சவாவது அல்லது விழுங்காவது நேரிடுகிறது. மேனாடுகளில் கண்டபடி எச்சில் துப்புதல் சட்ட விரோதம். பொதுவிடங்களிலாவது, பொதுவண்டிகளிலாவது எச்சில் துப்பினால் அபராதம் விதிக்கப்படும். ஜனங்கள் காசநோயால் பீடிக்கப்பட்டவர்களா யிருந்தாலும் இல்லாவிட்டாலும் கண்ட விடத்தில் துப்பக்கூடாது. அவர்கள் துப்பும் பாத்திரங்களை உபயோகிக்கவேண்டும். எல்லாப் பொதுவிடங்களிலும் ஆபீசுகளிலும் இவை வைக்கப்படவேண்டும்; இதிலுள்ள எச்சிலை கொளுத்தியோ அல்லது விஷங்கொல்லி மருந்தைப் போட்டோ அழிக்க வேண்டும். இதனால் மற்றவர்களுக்கு தொத்து வராது. வீடுகளுக்காக வேலைக்காரிகளைத் தெரிந்தெடுக்குங்கால் அவர்களிடம் இந்த வியாதி இருக்கிறதாவென செவ்வையாய்ப் பரீக்ஷித்துப்பார்த்து, அப்பேர்க்கொத்தவர்களை ஒதுக்கிவைக்கவேண்டும். கிழவர்களிடம் இந்த வியாதிக் கிருமிகள் இருந்து கொண்டிருக்கும். அவர்கள் எப்போதும் இருமிக்கொண்டிருப்பார்கள். இதை சாதாரண இருமல் என்றுகினைத்து ஏமார்ந்து போவதுண்டு. இதுநீடித்த காசநோயாயிருக்கலாம்.

ஈக்களால் காசநோய் முக்கியமாய்ப் பரவுகிறது. இவை துப்பும் கோழையைத் தின்று பிறகு நமது ஆகாரத்தின்மேல் உட்கார்ந்து அதைத்தின்று அசுத்தப்படுகின்றது. ஆனது பற்றி, ஈக்கள் உபத்திரவத்தை ஒழிக்கத்தக்க முயற்சி தேடவேண்டும். வீட்டையும் வீட்டைச் சுற்றியுமுள்ள இடங்களையும் சுத்தம் செய்வதற்கு வேண்டிய எச்சரிக்கைகளைச் செய்யவேண்டும். படுக்கும் அறைகள் காற்றோட்டமுள்ளதாய் இருப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். உஷ்ணப்பிரதேசமாகிய நமது இந்தியாவில் வெளிக்காற்று வீசும்படியான தாழ்வாரங்களிலாவது ஜன்னல்களைத் திறந்துவைத்துக் காற்று சதா புகும்படியான அறைகளிலாவது படுத்துறங்குவது அவசியம். தூங்கும்போது முகத்தை கம்பளத்தாலாவது போர்வையைக் கொண்டாவது மூடிக் கொள்ளக்கூடாது. படுக்கை அறையில் ஜனநெருக்கம் கூடாது. தேக சுகாதாரம் முக்கியமாய் வாய் சுகாதாரம், பற்கள் சுகாதாரம் இவைகளைக் கவனிக்க வேண்டும். பற்கள் விஷயமாய் கவனிக்கவேண்டியது அத்தியாவசியம். ஈறுகளைக் கெடுக்காதபடி சரியாய்ப் பற்களைச் சுத்தம் செய்ய பல்ப்ரஷை (மிஸ்வாக்கை) உபயோகிக்க வேண்டும்.

காசநோயைத் தடைசெய்வதற்குக் கையாளப்படும் முறைகளில் அதிக முக்கியமானது ஆகாரம். காச நோயானது முக்கியமாய்ப் போஷணைக் குறைவினால் ஏற்படும் வியாதி. போதுமான ஆகாரம் இராத்ததினாலும் ஆகாரசத்து சரிசமானமான எடையில்

இராத்ததாலும், இந்தவியாதி உண்டாகிறது. இயந்திரத்தில் குத்தி தீட்டப்பட்ட அரிசியானது மிகுந்த குறைவான ஆகாரசத்துடையதாகும். ஆகாரத்தில் சரியான அளவு ப்ரோடீன் இருக்கவேண்டும். அதாவது, முட்டை, பால், மாமிசம், மீன் முதலியன. அரிசி, கோதுமை, வெண்ணெய், நெய், எண்ணெய் முதலியவற்றிலுள்ள கார்போ ஹைட்ரேட்டும், கொழுப்பும், காய்கறிகள், பழங்கள், பருப்பு தினுசுகள், பால், வெண்ணெய் முதலியவற்றிலுள்ள ஜீவஸத்துப் பொருள்களும் ஆகாரத்திற்கு அவசியம் தேவை. வடஇந்தியாவில் இருப்பவர்களைக் காட்டிலும் தென்னிந்தியாவிலுள்ளவர்களின் ஆகாரம் குறைவானது. முக்கியமாய் அரிசி தவிர வேறொரு ஆகாரமும் தென்னிந்தியர்களுக்குக் கிடையாது. கோதுமையும், கேழ்வரகும் அரிசியைக் காட்டிலும் அதிக போஷணகுணமுள்ள ஆகாரப் பதார்த்தங்களாகும். இவை அநேக இடங்களில் மலிவாய்க் கிடைக்கும். அரிசிக்குப் பதிலாக கோதுமையையும் கேழ்வரகையும் உபயோகித்து பருப்பு, மாமிசம், முட்டை, மீன், பால் இவைகளையும் சேர்த்து, அப்போது பறித்த காய் கறிகளையும், பழங்களையும் தினசரி ஆகாரத்தில் கலந்து கொண்டுவந்தால், தேகத்திற்கு போஷணை சரியாக இருக்கும். அதனால் காசநோயைத் தடுக்கலாம். தென்னிந்தியாவிலுள்ளவர்கள் தாங்கள் உண்ணும் அரிசி ஆகாரத்தை மாற்றி, கோதுமை, கேழ்வரகு, கொட்டைகள், பழங்கள், காய்கறிகள் முதலியன சேர்த்துக்கொள்ளும் பக்ஷத்தில் அவர்களுடைய ஆரோக்கியமும் தேகபலமும் விருத்தியாகும்.

நுரையீரல் காசநோய்க்கு முக்கிய இடமாகும். வாயானது நோய்க்கிருமிகள் நுழைவதற்குள்ள முக்கிய வாயலாகும். ஆனது பற்றி அதை எப்போதும் சுத்தமாயும் மூடியும் வைத்துக்கொண்டிருக்க வேண்டும்.

அறிவிழந்த ஐரோப்பாவே ! இஸ்லாத்திடத்திலிருந்து படிப்பினை கற்றுக்கொள்வாயாக !

ஏ ஐரோப்பாவிலுள்ள இரத்த வெறி கொண்ட மனிதனே ! இக்காலை உன் புதிய ஆராய்ச்சிகளின் முன்னேற்றமானது மானிடர்களின் மரணத்தை விளைவிப்பதிலும் அவர்களை அழித்து நாசமாக்கி விடுவதற்காகவுள்ள சாமான்களையுச் சேகரஞ்செய்வதிலுமீடுபட்டிருக்கிறது. நீ தயாரித்துவரும் நாசகாரிச் சாதனங்களைக் கண்டு ஐவாய் மிருகங்கள் கூட வெட்கித்துப்போய் விடுகின்றது. ஆகாயத்திலிருந்து கப்பல் மூலம் நெருப்புக் கங்கிகளைச் சரமாரியாப் பொழியச்செய்யும் மனிதனே ! பூமியை நெருப்பு மயமாகச் செய்யும் மனிதனே ! கடலில் யுத்தக் கப்பலின் மூலம் நெருப்பைப் பரத்தும் மனிதனே ! நீ உலகின்கண் ஒருக்காலும் சமாதானத்தை உண்டுபண்ண முடியாது. ஆகவே நீ அதிகாரஞ் செய்வதற்கு தகுதியற்றவனாகயிருப்பதால் அதிகாரஞ் செய்வதைவிட்டு விலகிக்கொள். எவன் உலகத்தில் சமாதானத்தையும் பிரஜைகளின் கார்மானத்தையும் நாடுகின்றானோ அவன் தான் உலகத்தை ஆக்ஷி புரியத் தகுதியுடையவனாகயிருக்குமென்று மவ்லீஹ் (அலை) அவர்கள் கூறியிருப்பது உனக்குத் தெரியாதா? எவர்கள் உலகத்தில் இரத்த வெறிகொண்டு மானிடவேட்டை புரிகின்றார்களோ அவர்களுக்கு ஆண்டவனது கிருபை என்னும் வாயற் அடைக்கப்பட்டுப் போய்விடுகிறதென மவ்லீஹ் (அலை) அவர்கள் ஒரு பெரும் திரளாக மகாஜனங்களை நோக்கிக்கூறியது உன் ஞாபகத்திற்கு வரவில்லையா? நீ ஒரு ஆட்டு மந்தையை தக்க முறையில் பேணுதலுடன் காத்துவரமுடியாது போனால், உலகத்தை ஆக்ஷிபுரிவதைவிட்டு ஒதுங்கிவிடு என மவ்லீஹ் (அலை) கூறியது உன் ஞாபகத்திலில்லையா ?

ஏ இரத்த வெறிபிடித்த மானிடனே ! நீ

இவை யாவற்றையும் மறந்துவிட்டாய். ஆனல் இக்காலேயும் ஹஜ்ரத் மஸீஹ் (அலே) அவர்களின் போதனைகளெல்லாம் என் ஞாபகத்திலிருந்துகொண்டிருக்கிறது. நீ மஸீஹ் (அலே) அவர்களின் போதனைகளை மறந்துவிடக் கூடும் ஆனல் எந்த போதனைக்குள் உலகின் சமாதானம் சுகவாழ்வு இருப்பதாக எனக்குப் புலனகின்றதோ அப்போதனைகளை நான் ஒருக்காலும் மறந்துவிட முடியாது. மானிடர்களுக்குப் புரிந்துவரும் அதிக்கிரமச் செயலானது இன்று உன் இராஜிய பரிபாலனத்தில் அதிகரித்து மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

தவிர யுத்த முஸ்த்தீப்புகளைக் குறைத்துவிட யோசனை செய்வதற்காக ஜினிவாவில் கூட்டப் பெற்ற மகா நாட்டில் நீ என்ன தந்திரத்தைக் கையாண்டாய் என்பதை இப்பொழுது நீ கூறமுடியுமா? மேலும் லண்டனில் யுத்த சாமான்களைக் குறைத்து விடவேண்டுமென்னும் பிரச்சினை எழுந்தக்கால் எவ்வாருன மானிடத் தன்மையை அங்கு காட்டினுய் என்பதை எனக்கு இதுசமயம் நீ அறிவிக்க முடியுமா? அதிகார மமதையானது உன் மூளையில் உறைந்து போயிருக்கிறது. ஆகவே நூதனமான புதிய புதிய ஆராய்ச்சிகளைக் கொண்டு மானிடர்களைச் சிறையிலிட முயற்சிக்கின்ருய்.

ஏ ஐரோப்பாவே! நீ ஆக்ஷிபுரிவதற்குத் தகுதியற்றதாக ஆய்விட்டாய் ஆகவே உலகத்தைக் கட்டி ஆள்வதைவிட்டு விலகிவிடு. தேசங்களை அபகரித்துக் கொள்ள வேண்டுமென்னும் ஆசையில் உனது ஆராய்ச்சியின் முதிர்ச்சியானது நெருப்புமாறி பொழிந்து கொண்டிருக்கும்பொழுது ஹஸ்ரத் மஸீஹ் (அலே.) அவர்களது ஆட்டுமந்தையில் யாது ஏற்பட்டதென்பது உன் ஞாபகத்திற்கு வருமா? யுத்த களத்தில் உமது பீரங்கிகளிலிருந்து நெருப்புமாறி பொழிந்து கொண்டிருக்கும் நிலைமையில் அந்நெருப்புகளின் பொசுக்குதலினல் மரணமடையும் நிரபராதிகள் மீது எப்போதாகிலும் உனக்கு இறக்கமேற்பட்டிருக்கிறதா? நீ சமுத்திரத்தில் பீரங்கிப் பிரயோகஞ் செய்யுங்கால் உன்னுடைய ஒரு சயிக்கினையினல் லக்ஷக்கணக்கான நிரபராதிகள் மரணத்தை அனுபவிக்க நேரிடுகிறதே என்னும் கவலை உன் உள்ளத்தில் ஏற்படுகிறதா? அதிகாரஞ் செலுத்த வேண்டுமென்னும் இச்சையானது இவைகளை எல்லாம் நோட்டமிடுவதை விட்டு உம்மைக் குருடனக ஆக்கிவைத்திருக்கிறது. ஆகவே இவைகளை எல்லாம் உற்றுணர்ந்து பாராது இராஜீய பரிபாலனஞ் செய்வதற்கு நீதான் தகுதியுள்ளவனென்று கூறுவாயாகில் உன்னுடைய கவசம்தரித்த பீரங்களை யெல்லாம் கடலில் எறிந்துவிடு. ஆகாயத்திலிருந்து நெருப்பு மழையை வருஷிக்கச்செய்து கொண்டிருக்கும் ஷைத்தானை பூமியில் புதைத்துவிடு. யுத்தக் கப்பல்களை எல்லாம் உடைத்தெரிந்துவிடு. மானிடர்களின் இரத்தத்தின்மீது வெறியைஉண்டுபண்ணும் புதிய ஆராய்ச்சிகளை எல்லாம் ஒழித்துவிடு. ஆராய்ச்சி சாதனங்களைக்கொண்டு அரசாக்ஷி புரிவதென்னும் எண்ணத்தை மனதைவிட்டு நீக்கிவிட்டு அதற்குப் பகரமாய் மானிடத் தன்மை, சற்குணம் முதலியவைகளைகொண்டு அதிகாரஞ்செய்து காண்பி. சக்தி அற்றவர்களை உன்படை பலத்தைக்கொண்டு அழித்து விடாது உனது சற்குணத்தைக்கொண்டு அவர்களது ஹிருதயங்களை வசப்படுத்திக் கொண்டு அதன் மூலம் ஆக்ஷிபுரிவதற்கு முயற்சிசெய். அவ்வாறு செய்ய இயலாது போனல் நீ ஆக்ஷிபுரிவதற்குத் தகுதியற்றவனுக ஆய்விடுகின்ருய். ஆகவே உலகத்தைக் கட்டி ஆள்வதை விட்டு ஒதுங்கி விடுவாயாக.

மேல்நாட்டின்கண் வதியும் அனியாயக்காரனே! நீ ஹஸ்ரத் மஸீஹ் (அலே.) அவர்களின் போதனையை மறந்து விட்டாயாதலின் இற்றைக்கு உனக்கு எம்பெருமானர் உலகதயாளர் (ஸல்.) அவர்களின் போதனையைக் கற்பித்துக்கொடுக்க நாடுகின்றேன் அதிலிருந்து நீ ஈடேற்றம் பெறும்வழியைத் தேடிக்கொள்வாயாக. அதில் உலக சமாதானம்,மனிதத் தன்மைக்குள்ள மார்க்கம் முதலியசகலவற்றையுந் தெரிந்துகொள். விரல்விட்டு எண்ணத்தக்க ஏகத்துவக் கொள்கையுடைய ஒருசிலர் இரத்தஞ்சிந்தாது உலகடங்கலேயும் ஜெயித்து எவ்வாறு ஆக்ஷிபுரிந்து வந்தார்களென்பதைச் சற்றுக் கண் விழித்துப் பார். எம்பெருமானர் (ஸல்.) அவர்களது பிரகாசத்தில் தங்களது இன்னுயிர்களைத் தியாகஞ்செய்த விளக்குப்பூச்சிகளிடமிருந்து படிப்பினைகற்றுக் கொள். அன்னேர் தங்களது சற்குணங்களால் இவ்வுலகடங்கலேயும்

ஒரு காலத்தில் ஆக்ஷி புரிந்து கொண்டிருந் தார்களென்பதை ஞாபகத்திற்குக் கொண்டு வருவாயாக. இதுகாலை நீ அவர்களின் முன் மாதிரியைக்கொண்டுங் கூட பிரயோசன மடைய இஷ்டப்படாதிருப்பாயாகில், ஒரு துளி இரத்தத்தையுங் கூட சிந்தாது உலகினை ஆக்ஷிபுரிவதற்குத் தகுதியுள்ளவர்களிடம் ஆக்ஷியை ஒப்புவித்துவிட்டு உலகின் கண் அதிகாரஞ் செய்வதைவிட்டு விலகிவிடுவா யாக. அவ்வாறு செய்யாதிருப்பாயாகில் ஒரு காலத்தில் அனியாயம் அதிக்கிரமம் என்னும் பெரும்புயற்காற்றில் உன் ராஜாங்கம் அகப் பட்டு அழிந்து நாசமாகப்போய்விடும். அது காலை நீ உலகராஜிய பரிபாலனஞ் செய்வ தற்குத் தகுதியற்றவனென்பதை நன்கு தெரிந்து கொள்வாய்.

நஞ்சிருர்கட்கு.

சுல்த்தான் மஹ்மூத் கஜ்னவீ

சுபுக்தஙின் என்பவர் ஒரு கூட்டத்தாரின் தலைவராகயிருந்தார். அவர் பெரும் கிரு பையாளராக யிருந்ததின் காரணத்தால் பெரும் சக்ரவர்த்தியாகத் திகழ்ந்தார். அவர் குடிகளின்மீது மிக்க தயாள சிந்தையுடையவ ராகவும், சகலருடனும் சற்குணத்தோடு முகா லோபனஞ் செய்பவராகவு மிருந்ததால் அவ ருக்கு அப்கன் அரச குடும்பத்தின் இள நங் கையை விவாகஞ்செய்து கொடுக்கப்பட்டது. அம்மங்கை வயிற்றிலிருந்து மஹ்மூத் வெளி யானர். மஹ்மூத் சிறுபிராய முடையவராக யிருக்குங்கால் தன் தந்தையின் தேசத்தி லிருந்து வியாபார வர்க்கத்தினர் வருவதைக் கண்டு இன்னோர் எங்கிருந்து வருகின்றன ரெனக் கேழ்ப்பார். அதுபொழுது ‘இவர்க ளெல்லாம் இந்தியாவிலிருந்து வருகின்ருர் கள்; இந்தியாவானது வளம்பொருந்திய ஐசு வரியத்தையுடைய தேசமாக யிருக்குமென்று கூறுவார்கள். அதனைக் கேட்ட சுல்த்தான் மஹ்மூத், தாம் வாலிபப்பருவத்தை அடைந் தவுடன் இந்தியாவின்மீது படை எடுத்து அங்குள்ள ஐசுவரியங்களை எல்லாம் கைப் பற்றி கஜ்னிக்குக் கொண்டுவர உத்தேசித் திருப்பதாகக் கூறுவார். அதற்குச் சில காலத்திற்குப்பின் சுபுக்தஙின் மரணமடை ந்து சுல்த்தான் மஹ்மூத் சிம்மாசனத்தை அடையும் பொழுது அவர் 30 பிராயத் தையுடையவராகவும் வீரபராக்கிரமசாலியாக வும் இந்தியாவின் ஐசுவரியங்கள் மீது பேரா சை பூண்டவராகவுமிருந்து வந்தார். எனவே அவர் ஆரம்பமாகத் தமது தந்தைக்கு வரிக் கட்டாதிருந்த ராஜா நந்துபால் மீது படை எடுத்துச் சென்று அவரைத்தோல்வி யடை யும்படி செய்துவிட்டு கஜ்னிக்குத் திரும்ப வந்துவிட்டார். அதற்குப்பின் அவர் இந் தியாவின்மீது ஆரம்பித்த படை எடுப்புகளி லெல்லாம் ஜெயம்பெற்று எதிரிகளைத் தோ ல்வி அடையும்படியே செய்துவந்தார். இவ் வாறு ஜெயமேற்பட்டதற்குக் காரணம், சுல்த் தான்மஹ்மூத் அவர்களின் சிபாய்கள் சுத்த வீரிய பராக்கிரமமுள்ள காபுல் வாசிகளாக இருந்ததேயாகும். அவர்கள் குளிர் தேசத்தில் வசிப்பவர்களாதலின், பெரும் பிரயாசை, கஷ் டம் முதலியவைகளோடு வேலை செய் பவர்களாக யிருந்தார்கள். இந்தியர்களோ காலமாறுதல்களின் போக்கை அனுசரி த்து அந்தந்தக் காலங்களுக்கேற்ப நடந் துகொள்பவர்கள்; இவர்களுக்குப் பலவகை யான சாமான்களும் இலாசாகக் கிடைத்து விடுவதால் எவ்விஷயத்திலும் அதிகப் பிர யாசை எடுத்துக்கொள்ளாதவர்களாயிருந் தார்கள். ஆகவே அப்கனியர்கள் இன்னோ ரை எதிர்க்குங்கால் இன்னோர் தோல்வியே அடைந்துவிடுவது சகஜமாயிருந்துவந்தது. மேலும் இந்தியர்களிடமிருந்து கைப்பற்றும் ஐசுவரியங்கள் முழுவதையும் சுல்த்தான் அவர்கள், கஜ்னிக்குக் கொண்டுபோய் அப் படையினர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து அவர்கள் மென்மேலும் ஊக்கத்தோடு அவ் வேலைகளிலீடுபடும்படி செய்துவந்தார்.

தவிர சுல்த்தான் அவர்களின் தர்பாரில் ‘பிர்தவ்ஸீ’ என்னும் பெயருடைய புலவ ரொருவரிருந்தார். சுல்த்தான் அவர்கள் அப் புலவரை நோக்கி ‘பார்ஸிக் கவிகள் எழு தும்படியும், ஒவ்வொரு கவிக்கும் ஒவ்வொரு

தங்க நாணயம் இனாமளிப்பதாகவும் கூறினார். இதனைக்கேட்ட பிர்தவ்ஸீ என்னும் புலவர் மூன்று ஆண்டிற்குள் ‘ஷாஹ் நாமா’ என்னும் பெயருள்ள ஒரு கிரந்தத்தை இயற்றினார். அதன் பின் மஹ்மூத் என்பவர் குடிகளுக்கு ஹிம்சைசெய்ய முற்படவே தேசங்களில் வெருட்சி தோன்றி குடிகள் யாவரும் அத்தேசத்தை வெறுத்து வெளியில் கிளம்பிவிட எத்தனித்தார்கள். அதுகாலை மந்திரியாகயிருந்தவர், கிருபையுடைய மனத்தினராயிருந்ததால் மஹ்மூதின் இச்செய்கையைக் கண்டு மனஞ்சகியாதவராய் எவ்வகையிலும் சுல்த்தான் அவர்களுக்குக் குடிகள்மீது கிருபை ஏற்படும்படி செய்யவேண்டுமென்று பலவாறாக சிந்தனை செய்துகொண்டிருந்தார். மந்திரி பக்ஷிகளின்பாஷைகளை நன்கு தெரிந்தவராகயிருந்தார். இந்நிலைமையில் அரசர் காட்டில் வேட்டையாடிக்கொண்டிருக்கும்போது இரு ஆந்தைகள் பேசிக்கொண்டிருப்பதைக்கண்டு மந்திரியை நோக்கி உமக்குப் பக்ஷிகளின் பாஷை தெரியுமாதலின் இந்தப் பக்ஷிகள் என்ன கூறிக்கொண்டிருக்கிறதென்பதை தெரிவியும் என்று கூறினார்.

மந்திரியானவர் சற்று யோசனை செய்து பார்த்து எனதன்புக்குரிய அரசரே! தாங்கள் மன்னிக்கவேண்டும். என்னால் கூற முடியாதெனத் தெரிவித்துக்கொண்டார். உடனே அரசரானவர், மந்திரியைநோக்கி அந்தப்பக்ஷிகள் என்ன கூறியதென்பதை அவசியம் தெரிவிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். அதற்கு மந்திரி, எஜமானவர்களே! அந்த ஆந்தையிலொன்றுக்கு ஆணும் ஒன்றுக்குப் பெண்ணுமிருக்கிறதாம் அவ்விரண்டிற்கிடையில் விவாக சம்பந்தமான பேச்சுகள் நடைபெறுகிறது. எனவே ஆண் ஆந்தையின் தந்தையானது பெண் ஆந்தையின் தந்தையை நோக்கி விவாகம் நடைபெறுவதாயின் உன் புத்திரியின் சீதனத்திற்காக 50 பாளடைந்த ஊர்களைக் கொடுக்க வேண்டுமெனக் கோறிக்கொண்டது. இதனை அறிந்த பெண் ஆந்தையின் தந்தையானது பேஷ் ஆண்டவன் கிருபையால் நமது அரசர் சுல்த்தான் மஹ்மூத் அவர்கள் எதுவரை அரசுபுரிந்துகொண்டிருக்கின்றார்களோ அதுவரையாதொரு குறைவுமில்லை 50க்குப் பகரமாக 500 பாழடைந்த ஊர்களைத் தருகிறேன் என்று பேசிக்கொண்டிருப்பதாக கூறினார்.

இவ்வார்த்தையைக் கேட்டவுடன் மஹ்மூத் பெரும் வெட்கமடைந்து அது முதல் குடிகள்மீது அநீதி புரிவதை விட்டுவிட்டார். அதன் பின் வெளியூர் சென்றிருந்த குடிபதிகளெல்லாம் தங்கள் தங்கள் சுயபதிக்குத் திரும்பிவர முற்பட்டார்கள். இதனைக்கண்ட புத்திசாலியான மந்திரியானவர் மனதிற்குள் பெரும் சந்தோஷமடைந்தார். அவருடைய தந்திரமான இச்செயலால் அரசர், குடிஜனங்கள் முதலிய யாவருக்கும் பெரும் நன்மை ஏற்பட்டுப் போயிற்று. அதற்குப் பின் நம் சுல்தான் மஹ்மூத் அவர்கள் ஞாயத்தையே விரும்பும் சிரேஷ்ட புருஷனாய் விளங்கினார்கள். இந்நிலைமையில் ஒரு நாளன்று ஓர் விர்த்தாப்பிய மாதானவள் சல்தான் அவர்களிடஞ் சென்று தமது குமாரனைத் திருடர்கள் பிடித்து வைத்திருப்பதாக முறையிட்டுக்கொண்டாள். மஹ்மூத் அதனைக் கேட்டு திருடர்களின் வாசஸ்தலம் வெகுதூரமிருப்பதால் தான் யாதொன்றும் செய்ய முடியாதெனத் தெரிவித்துவிட்டார். இதைக் கேட்ட விர்த்தாபிய மாதானவள் அரசரே! அந்தத் திருடர்களின் செய்கையைத் தெறிந்து என் குமாரனைக் கண்டு பிடிக்க முடியாதிருக்கும் நிலைமையில், நீர் பெரும் சக்ரவர்த்தி எனக் கூறிக் கொண்டிருப்பதில் யாது பிரயோசனம் என தைரியமாய்க் கூறினாள். சுல்த்தான் அவர்கள் இதனைக் கேட்டு வெட்கித்தவர்களாய் பலவாறான முயற்சி செய்து அந்தவிர்த்தாபிய மாதின் குமாரனை திருடர்களிடமிருந்து மீட்டி அவளிடம் ஒப்புவித்து விட்டார்கள்.

அருமைச்சிறார்காள்! சுல்த்தான் மஹ்மூத் அவர்கள் எவ்வாறு தங்களது சிறு பிராயத்திலேயே தேசத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று தைரியங்கொண்டார்களோ, அவ்வாறே நீங்களும் ஒவ்வொரு காரியங்களிலும் தைரியத்தோடு முன் வரவேண்டும். தவிர ஏதாகிலும் ஒரு பிரச்சினை ஏற்பட்டுவிடுமாகில் சமயத்திற்குத் தக்கவாறு யோசனைபுரிந்து மந்திரி கையாண்டதுபோல் புதியதந்திரமான முறையைக் கையாண்டு சிறப்புற்று விளங்கவேண்டும். நியாயம் புரிய முற்பட்டிருக்குங்கால் யாரும் உண்மையை உறைத்தால் அதனைக் கண்டு கோபமடையாது ஞாயத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்என்பதை முழு மனதோடு ஆதரித்து சிறந்து விளங்குவீர்களாக.

மேனாட்டு நாகரீகத்தின் உண்மை.

நாமோ முஸ்லிம்கள். நமது இஸ்லாம் மார்க்கமோ தனிப்பட்ட சீர்திருத்தம் அமையப்பெற்றதாக யிருக்கின்றது. அதில் சிற்சில விஷயங்களில் கால தேச வர்த்தமானத்திற்கேற்ப மாறுதல் செய்துகொள்வதற்குள்ள ஹேதுவுமேற்பட்டிருக்கிறது. ஆனால் மேனாட்டுச் சீர்திருத்தத்தி லனேகம் நம் இஸ்லாமிய சீர்திருத்தத்திற்கு முரண்பாடுடையதாய்க் காணப்படுகிறது. ஆகவே நாம் ஒரு முஸ்லிமென்னும் ஹோதாவில் மேனாட்டு சீர்திருத்தங்களிலனேகம் நம் முஸ்லிம் சமூகத்திற்குக் கேடு விளைவிப்பனவாக யிருக்கிறதெனக் கருதுகின்றோம். இவ்வாறு கருதுவது நமது மார்க்கக் கடமைகளில் பிரதானமாகையால் அதனை நாம் ஒருக்காலும் கைவிடமுடியாத நிலைமையி லிருக்கின்றோம். தவிர, நாம் கீழ்நாட்டுப் பிரதேசங்களில் வசிப்பவர்களாகவும் இந்தியர்களாகவு மிருப்பதால் நமக்கேற்பட்டுள்ள நடை, உடை, பாவனை முதலிய சகலனவும் வேறுவிதமாகயிருக்கின்றன ஆகவே, எவை நமது தேசிய சமூகப் பழக்க வழக்கங்களுக்கு முரண்பாடுடையனவாக யிருக்கின்றனவோ அவைகளை அகற்றிவிடுவதற்கும், அவைகளைத் துயர்வதென்னும் ஆணிவேரைக் களைந்தெறிந்து விடுவதற்கும் கட்டாயப்படுத்தப்பட் டிருக்கிறோம். மேலும் இந்தியர்களாகிய நாம், மேனாட்டு நாகரீகத்தைச் சிலாக்கியமான ஒரு வஸ்த்துவாகக் கருதவில்லை என்பதும், இஸ்லாமிய-கீழ்நாட்டு நாகரீகத்திலில்லாத முன்னேற்ற மடைவதற்குப் பிரயோசனம் தரத்தக்க விஷயமெதுவும் மேனாட்டு நாகரீகத்தில் காணப்படுவதில்லை என்பதும் நமது வாதமாகையால், மேனாட்டு நாகரீகத்தை வெறுப்பது தகமையல்லவென்று யாராலும் கூறமுடியுமா ?

மேனாட்டு நாகரீகமானது, நமக்கு மானக்கேட்டை உண்டுபண்ணும் விஷயம், நிர்வாண உடை அணிவது, கெட்ட காரியாதிகளிலீடுபடுவது, தன்மதிப்புக்கொள்வது, வீண் டாம்பீகச் செலவு செய்வது, நமது ஹிருதயங்களிலிருந்து மார்க்கப்பற்று எடுபட்டுப்போவது, நாஸ்தீக கொள்கையைக் கற்பித்துக்கொடுப்பது போலொற்றவைகளைத் தவிர வேறு எதையாகிலும் கற்பித்துக்கொடுக்கிறதாவென்பதை நியாயவாதிகள் சற்றுக் கண்ணைத் திறந்து பார்த்துக் கூறமுடியுமா? அந்த நாகரீகமானது நமது மார்க்க சமூக உணர்ச்சிகளை அழித்து நாசமாக்கிவிட்டதுடன் நம் சுயேச்சையையும் வீரியத்தையும் அபகரித்துக்கொண்டு நம்மை நிர்வாணிகளாகவும் பசியில் அவஸ்த்தைப் படுபவர்களாகவும் செய்துவிடவில்லையா ? நாம் இவ்விஷயங்களையெல்லாம் உண்மைக்கு மாற்றமாகக் கூறுவதாய்க் கருதுவீர்களாகில், நமது வாலிபர்களிற் சிலரின் மனதில் தோன்றியிருக்கும் மார்க்க பக்திக் குறைவும், நமது பெண்மணிகளிடம் காணப்படும் அரை உடை நிர்வாணம், நாணமின்மை முதலியவைகளும் எங்கிருந்தேற்பட்டிருக்கிறதென்பதையும் நமது தேசத்தை உரோஷமற்றதாக ஆக்கி அடிமை என்னும் சங்கலியைக் கழுத்தில் அணிந்ததாய் எந்த வஸ்த்து செய்துவைத்திருக்கிற தென்பதையும் உங்களால் கூறமுடியுமா ? இவைகளெல்லாம் இஸ்லாமிய போதனை, கீழ் தேச நாகரீகம் இவைகளினாலேற்பட்ட தென்று கூறுகின்றீர்களா ? இல்லை இல்லை. ஒருக்காலுமில்லை ? நாம் கீழ்நாட்டு நாகரீகத்தின் நிழலிலிருந்து கொண்டு எத்தனையோ ஆண்டுகள் கெம்பீரமாகவும் சுயேச்சையுடனும் வாழ்ந்து கொண்டிருந்தோம் ; பல நூற்றாண்டுகள் வரை சிம்மாசனத்திற்கு அதிபதிகளாகவு யிருந்து வந்தோம். நாம் கீழ் தேசத்தவர்களாயிருப்பதன் காரணமாக எத்துணையோ முறை நமது கல்வி, குணம் முதலியவைகளின் மேன்மைகளை மேனாட்டாருக் கெடுத்துக் காண்பித்து பெருமை பாராட்டியிருக்கிறோம். இவைகளெல்லாம் சொற்பநாள் நாம் மேனாட்டாருடன் கலந்துறவாடி வந்ததனால் நமக்கேற்பட்டு விட்டதெனக் கருதுகின்றீர்களா ?

ஒருக்கால் தாங்கள் முன்வந்து, நல்ல வஸ்து எங்கு கிடைத்தாலும் பெற்றுக் கொள்ளவேண்டும் ; அது விஷயத்தில் பிடிவாதஞ் செலுத்துவது குறுகிய யோசனையும்

மடமைத்தனமுமாகும் என்று கூறுவீர்களாகில், உங்களிடத்தில் நலவு இடர் இவைகளைப் பகுத்தறிவதற்கு, ஐரோப்பிய நாகரீகமும் அதனைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி நடப்பதும் உறை கல்லாக யிருப்பதால், எதை ஐரோப்பா நல்லதென்று கூறுகின்றதோ அது உங்களிடமும் நல்லதாகத் தோன்றும்; ஐரோப்பா எதைக் கெட்டதென்று கூறுகின்றதோ அது விஷயத்தில் நீங்கள் சற்றும் யோசியாமல் அது கெட்டதுதான் எனக் கூறத் துணிபுகொண்டு விடுகின்றீர்கள் ; நல்லது கெட்டதுகளைப் பகுத்தறிந்து நலவைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் கஷ்டத்தை நீங்கள் ஒருக்காலும் ஏற்றுக்கொண்டதே கிடையாது. இந்நிலைமையில் யார் குறுகிய யோசனையுடையவர்களென்பதையும், யார் பிடிவாதஞ் செய்கிறவர்களென்பதையும் நன்கு தெரிந்துகொள்வீர்கள். மேலும் ஐரோப்பாவின் ஒவ்வொரு மானங்கெட்ட செயலும் உங்களிடத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதாக யிருக்கின்றது; ஐரோப்பியர்களின் ஒவ்வொரு செய்கையையும் கொள்கையையும் பின்பற்றி நடப்பதானது உங்களிடத்தில் ஆண்டவனது கட்டளைக்கு வழிப்பட்டு நடப்பதைக் காட்டினும் மேலாகயிருக்கின்றது. ஆகவே அந்நாகரிகத்தின் மாய்கையில் சிக்கிக்கொண்டு அவைகளிலொவொன்றையும் நிறைவேற்றுவதி லீடுபட்டிருக்கின்றீர்கள்.

தவிர கீழ்நாட்டு நாகரீகத்திற்கு கடைசி மூச்சு ஏற்பட்டுப் போயிருக்கின்றது; இன்னும் சொற்ப காலத்திற்குள் அவை அழிந்தொழிந்து போய்விடும் என் நீங்கள் சந்தோஷமாக அறிவிக்கக் கூடுமாதலால், அதனை மறுத்துக் கூறுவதற்குள்ள யாதொரு அவசியமு மேற்பட்டிருக்கவில்லை. ஒருக்கால் கீழ்நாட்டு நாகரீகம் அழிந்துபோய் அதற்கு மரணம் சம்பவித்துவிடுமானாலும் அந்த மரணமும் ஒரு மகத்தானதாகத் தான் ஏற்படும். ஏனெனில் அந்த சீர்திருத்தமானது ஆண்டவனை வணங்க வேண்டுமென்று எத்தனையோ நூற்றுக்கணக்கான ஆண்டுகள் வரை மானிடருக்கு அறிவித்துக் கொடுத்திருக்கிறது ; அந்த நாகரீகமானது நமது மானம் மரியாதை முதலியவைகளை தக்க ஸ்திதியிலிருக்கும்படி செய்திருக்கிறது ; அந்த நாகரீகந்தான் நமது மாதுக்களைப் பத்தினித்தனமுடையவர்களாகயிருக்கும்படி செய்து வைத்திருக்கிறது. ஆகவே அந்த நாகரீகம் இவ்வுலகினில் ஜீவித்திருக்குங்கால் அவை போற்றிப் புகழப்படுவதற்குத் தக்கனவாகயிருந்தது. ஆனதுபற்றி அதன் மரணமும் அழகிய முன் மாதரியில் தான் ஏற்படும். மேலும் மேனாட்டு நாகரீகமானது சுயேச்சையை அளிக்கக் கூடியதாயிருக்கிறதென்று கூறுவீர்களாயின், அதனாலேற்படும் பிரயோசனங்களும் நம் பார்வையைவிட்டு மறைந்ததாகயிருக்கவில்லை எனக்கூறி, உங்கள் கலாசாலைகளுக்குச் சென்று அங்கு கல்விபயிலும் மாணவர்கள் எந்த ஸ்திதியிலிருக்கின்றார்களென்பதை உற்றுணர்ந்து பாருங்கள். அவர்களிடம் மார்க்க பக்தியோ, அன்றி உரோஷமோ, வீரியத்தன்மையோ சற்றேனுமிருக்கிறதாவென்பதை ஆராய்ந்து பாருங்கள் ; உங்கள் மாதர்கள் கல்வி பயிலும் கலாசாலைகளின் கதி எவ்வாரிருக்கிறதென்பதை அங்கு சென்று கவனித்து வாருங்கள்; அம்மாதுக்களிடம் கீழ்நாட்டு வெட்கம், நாணம் இவைகளின் வாடையாகிலுமிருக்கிறதாவென்பதையும், கலாசாலைக்குள் கல்வி சற்குணம் முதலிய நல்லொழுக்கங்களைப் பயிலுவிப்பதற்குப் பகரமாய் துற்குணம், தான்தோன்றித் தனம் முதலியவைகளை கற்பிக்கப்படுகிறதையும் நன்கு தெரிந்துகொள்வீர்களென விடை பகர்வோம். இது தவிர சுயேச்சையின் பேரால் திறக்கப்பட்டிருக்கும் கிளப்பு, சங்கம் இவைகள் மூலம் வழி கேட்டிற்குள்ள மார்க்கம் தக்க முறையில் கற்பிக்கப்படுகிறதென்பதும் நன்கு புலனாகும். ஆகவே மேனாட்டு (அ) நாகரீகத்தைக் கண்டு நாகரீகமென்று மதித்து மிரண்டுபோயிருக்கும் மனிதனே! உண்மை நாகரீகம் எந்த தேசத்தின் நடைபாவனைகளிலிருக்கிற தென்பதை இனியாகிலும் நன்கு தெரிந்து அதனைபற்றிக்கடை பிடித்தொழுகுவாயாக.

செய்தித்திரள்.

கம்பம்.

கம்பம் 'இஷா அத்துல் இஸ்லாம்' சங்கம் மூலம் நடைபெற்றுவரும் இஸ்லாமியப்பிர சாரத்தின் பயனாய் இதரமதஸ்த்தர்கள் முழு மனதோடு தூய்மைவாய்ந்த நமது சத்திய இஸ்லாம் மார்க்கத்தைக் கூட்டங் கூட்ட மாய்த்தழுவி வருகின்றார்கள். எனவே சமீ பத்தில் சிலயம்பட்டியிலும் 3 பேர் இஸ் லாத்தைத் தழுவியிருக்கின்றார்கள்.

இச்சங்கம் ஆற்றிவரும் அருஞ்சேவைக்குப் பொருள் தேவை அதிகமேற்படுகிறது. அது விஷயமாய் நாம் எவ்வளவுதூரம் கவனித்து ஏற்பாடு செய்கிறோமோ அதற்குத் தக்க வாறு அப்பகுதிகளில் இஸ்லாத்தின் ஜோதி பிரகாசித்துக்கொண்டு போகுமென்பது திண் ணம். ஆகவே நஞ் சோதரர்கள் தயாள சிந்தையோடு முன்வந்து அதற்குத்தக்க ஏற்பாடு செய்வார்களென்று எதிர்பார்க் கின்றோம். இச்சேவைகளை நன்கறிந்த கூத் தாநல்லூர் "முஸ்லிம் லீக் சபையார்" ரூ. 215-2-6-ம் "சன்மார்க்கத்தொண்டர் சபையார்" ரூ. 172-15-0-ம் வசூலித்தனுப்பி யிருக்கின்றார்கள். இதைப்போல் நமது தென் னாட்டில் தோன்றியுள்ள பற்பல சங்கங்களும் இஸ்லாமியப் பணியாற்ற முன்வருமாகில் இஸ்லாத்தின் ஜோதி இதைவிட பதிமடங்கு சிறப்புற்று விளங்கும். ஆகவே ஆங்காங்கு நிறுவப்பட்டுள்ள சங்கங்கள் இவ்வுத்தம சேவையிலீடுபட்டு விளங்குமென்று எதிர் பார்க்கின்றோம்.

பெருங்குளம்

(இராமநாதபுரம்ஜில்லா)

பள்ளிவாசல் திறப்புவிழா

நடந்த 1932-ம் வருடம் பொது நலப்பிரியர் ஜனாப் அ. சி. முஹையித்தீன் பகீர் ராவுத்தர் அவர்களின் சீரிய முயற்சியால், ஆரம்பிக்கப்பட்ட பள்ளிவாசலானது அன்ன வர்களின் மரணத்திற்குப்பிறகு அவர்களின் மருகர் ம. யி. அஹமது ராவுத்தர், அ. கி பக் கீர்ராவுத்தர், கொ. சி. முகையதீன் பிச்சை ராவுத்தர், ந. அ. அஹமது ராவுத்தர் ஆகிய ஊர் பிரமுகர்களின் உதவியால் 1932-ம்வருட இறுதியில் சிறப்பாக அதன் கட்டடவேலை பூர்த்தியாயிற்று. அப்பள்ளியை சகல முஸ்லிம் கட்கும் பொதுவாக்குவான்வேண்டி வக்பு செய்வதற்காக 3-3-33 வெள்ளிக்கிழமையைக் குறிப்பிட்டு பல ஊர்களுக்கும் அறிக்கை மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி அன்றையதினம் சுற்றுப் பக்கங்களி லுள்ள ஊர்களிலிருந்து பெரியோர் சிறியோர் ஆலிம் உலமாக்களுள்பட சுமார் 1000-க்கு அதிகமானபேர் வந்து குழுமியிருந்தார்கள். அத்திரளான கூட்டத்தினிடையே மதுரையம் பதியின்கண் வதியும் ஆலீஜனாப் மௌலவி முஹம்மது கனி ஆலிம் சாஹிப் அவர்கள் எழுந்து சுமார் ½ மணிநேரம் பள்ளிவாசல் வக்பு விஷயமாயும் அதனைத் தொழுகையைக் கொண்டு சிறப்பிக்கவேண்டியதன் அவசி யத்தை முன்னிட்டும் கேழ்ப்போர் மனம் உருகும்படியான தக்கதோர் சொற்பொழி வாற்றினார்கள். அதற்குப்பின் ஜனாப் பெ. சி. பகீர்ராவுத்தர் அம்பலம் அவர்களால், பள்ளிவாசல் திறக்கப் பெற்று எல்லா முஸ்லிம்களும் உட்சென்று அமர்ந்ததும் ஜனாப் மௌலவீ முகம்மதுகனி ஆலிம் சாஹிப் அவர்களால் குத்பா ஓதப் பெற்று ஜும்ஆத் தொழுகை நிறைவேற்றப் பட் டது. பின்னர் வந்திருந்த யாவருக்கும் தயாரிக்கப் பெற்றிருந்த உணவுகள் சப்ளை செய்யப்பெற்றது. அதன்பின் ஏழை மிஸ்க் கீன்கள் ஆசாரி, கொத்து வேலைக்காரர்கள் யாவர்கட்கும் சன்மானம் அளிக்கப்பெற்று அஸர் தொழுகைக்குப்பின் கூட்டம் கலைவுற் றது. மறுநாள் சனிக்கிழமை பின்நேரம் இரவு 9 மணிக்கு பள்ளிவாசலின் முன் ஜனாப் கோ. சி. மு. செய்கு தாவூது ராவுத்தர் அவர் கள் தலைமையில் இத்திஹாதெ நௌஜவான் முஸ்லிம் சங்கத்தாரால் உன்னத நிலைமையில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் ஜனாப்மௌ லவீ முஹம்மது கனி ஆலிம்சாஹிப் அவர்க ளால் சுமார் 1 30 மணிவரை மார்க்க உபந்யா சஞ்செய்யப்பட்டு தபற்றுக் வழங்கப்பெற்று துஆ ஓதியபின் கூட்டம் இனிது கலைவுற்றது.

பொன் மொழிகள்.

ஹஜ்ரத் லுக்மான் அவர்களின் உபதேசம்.

ஹஸ்ரத் லுக்மான் ஹகீம் அவர்கள் விஷயமாய் குர்ஆன் ஷரீபில், அவர்கள் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதால் சிலர் அவர்களை நபி என்றும், குர்ஆனில் கூறப்பட்டிருக்கும் அவர்களது பெயருடன் நபி அல்லது ரசூலென்று கூறப்படாமல் (ஹிக்மத்) வித்தை அறிவைக் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருப்பதால் அவர்களை ஹகீமென்றும் கூறுகின்றனர். எவ்வாறிருந்தபோதிலும் அவர்களுக்கு ஆண்டவன் நீண்ட ஆயுளைக் கொடுத்து அவர்கள் பெரும் கீர்த்திவாய்ந்த புத்திசாலியாக விளங்கினார்களென்பது திண்ணம். அவர்கள் கூறிய உபதேசமாவது :—

என்னுடைய வயதில் நான்கு லக்ஷம் வாக்கியங்களைக் கற்றுக்கொண்டேனாயினும் அவைகளிலிருந்து நான்கைத்தான் ஆய்ந்தாராய்ந்துப் பார்த்துத் தெரிந்துகொண்டேன். அவைகளில் இரண்டை ஞாபகத்தில் வைக்கவேண்டும்; இரண்டை மறந்தே விடவேண்டும். (1) அல்லாஹ்வென்னும் வல்ல நாயனை மறந்துவிடாது நினைவில் வைக்கவேண்டும். (2) மவுத்து என்னும் மரணத்தை மறந்துவிடாது ஞாபகத்தில் வைக்கவேண்டும். மறந்துவிடவேண்டிய இரண்டு காரியமாவது, (1) தான் பிறருக்குச் செய்த உபகாரத்தை மறந்துவிடவேண்டும். (2) தனக்குப் பிறர்செய்த அபகாரத்தை மறந்து விடவேண்டும்.

ஆசிரியர் குறிப்பு

ஞான தூதனின் சூட்சி :—தூத்துக்குடி ஞானதூதன் ஆசிரியர் தமது மாசிகையின் ஜனவரிமாத இதழில் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் மாட்சிக்குப் பங்கம் விளைவிக்கும் நோக்கத்தோடு ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தாரென்பதும், முஸ்லிம்கள் அதனைக் கண்டு ஆத்திரமடைந்து ஆங்காங்கு கண்டிக்க முற்பட்டார்களென்பதும், அது விஷயமாய் நமது சங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டதும் நேயர்களறிந்தவையே. நம் முஸ்லிம்கள் ஆரம்பித்த கிளர்ச்சியைக் கண்ட (அஞ்) ஞானதூதன் ஆசிரியர், சுடர்விட்டெழும்பும் கிளர்ச்சியை ஒருவாறு அடக்கிவிடலாமெனக் கருதி சமய சஞ்சிவியானமுறையொன்றைக் கையாள முற்பட்டு, தந்திரோபாயம் புரிய முற்பட்டார். எனவே தாம் மன்னிப்புக் கேட்கும் பாவனையில் நமது ஸைபுல் இஸ்லாம் பத்திரிகை மூலம் ஒருவிதமான அறிக்கை வெளியிட்டார்; பிறகு கனம் ஆலிஜனாப் கான் பஹதூர் S. K. S. ஷாஹுல் ஹமீது மரைக்காயர் மூலம் நாம் கடிதப் போக்குவரத்து நடத்தியதில் ஞானதூதனின் அடுத்த இதழில் பரிகாரஞ்செய்து விடுவதாய் ஒருவாறு தெரிவித்தார். ஆனால் இதுகாலை நாம் அந்த (அஞ்) ஞானதூதனின் மார்ச்சுமாத இதழைப் பார்க்குங்கால் அவர், முஸ்லிம்களை ஏமாற்றி அவர்களது ஆத்திரத்தைத் தணியச் செய்துவிடலாமென்று கருதுவதாகத் தெரிய வருகிறது. அது ஒருபொழுதும் முடியாதென்பதை (அஞ்) ஞானதூதன் ஆசிரியர் நன்குணர்ந்து கொள்வாராக. தாம் மனதில் தோன்றியபடி எழுதி வெளியிட்ட கட்டுரையை வாபஸ் வாங்கிக்கொண்டு முஸ்லிம்களிடம் பஹிரங்க மன்னிப்புத் தேடிக்கொள்வதை விட்டு, கட்டுரையாளர் செய்த தவறுக்குத் தாம் ஜவாப்தாரியல்லவென்றும், அவ்வியாசம் முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்து மென்பதாகத் தாம் கருதவில்லை என்றும் வரைய முற்பட்டிருப்பது பொருப்பு வாய்ந்த பத்திராசிரியர்களுக்குத் தகுதியானதல்ல வென்பதை அவ்வாசிரியர் தக்கவிதமாக உணர்ந்துகொண்டு உடனே அடுத்து வரும் மாசிகையில் தமது கட்டுரையை வாபஸ் வாங்கிக்கொண்டு தாம் அறியாத்தனத்தால் முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்தியதற்காக பஹிரங்க மன்னிப்புக் கேட்டுக்கொள்ள முற்படுவாராக.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா 3	0	0
பிஞங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு:...	,, 4	0	0
தனிப் பிரதி ...	,, 0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43 A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

இஷா அத்துல் ஹஸனத்

பீதர்ஜுமத்தில் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்

வேலூர் மத்ரஸயே பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் அராபிக் கலாசாலை யின் ஸ்தாபகரும், ஷம்ஸுல் உலமாவுமாகிய அஃலா ஹஸ்ரத் கிப்லா மர்ஹூம் வ மக்பூர் அல்ஹாஜ் ஷாஹ் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் கிப்லா, அவர்களினது கட்டளைக்கேற்ப, ஷை கலாசாலையின் ஆசிரியரும், கியாதிவாய்ந்த வாயிஜுமாகிய மௌலானா மௌலவீ அல்ஹாஜ் அப்துல் காதிர்பாதுஷா சாஹிப், மர்ஹூம் வ மக்பூர் அவர்களால் உர்துவிலியற்றப் பெற்றுள்ள "அல்பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்" என்னும் அரும் நூலின் மகிமையை இவ்வுலகு நன்கறிந்திருக்கின்றது. ஆனால் அதன் அரும்பெரும் பிரயோசனங்களை உர்து பாஷை மட்டுங் கற்றுள்ள ஒரு சாரார் மட்டும் அடைந்து வருவதைக் கண்ட, அக் கலாசாலையின் நாஜிர் மௌலானா மௌலவீ அல் ஹாஜ் ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப் கிப்லா அவர்கள், இவ்வரும் நூல் நந்தென்னாட்டில் மிகுதமாயுள்ள முஸ்லிம்களின் பழக்கத்திலுள்ள தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்படுமாயின், அளவற்ற பிரயோசன மேற்படுமெனக் கருதியதாலும், அதனைத் தமிழில் மொழி பெயர்த்து அச்சிடுமாறு பன்முறையும் பல கனவான்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்கவும் மொழி பெயர்த்து அச்சிடப் பட்டிருக்கின்றது.

இவ்வரும் நூலில் நம்மவரின் நித்திய அலுவல்களாகிய உணவு, உடை, கைத்தொழில், வர்த்தகம் முதலிய விஷயங்கள் சம்மந்தமாக நம் சன்மார்க்கம் என்ன சட்ட திட்டங்களை ஏற்படுத்தி யிருக்கிற தென்பதையும், அவைகளிலெது வஸ்த்து சன்மார்க்கத்திற்கு முரண்பட்டிருக்கிறதென்பதையும் நன்கு விளக்கப் பட்டிருக்கிறது. எனவே இஃது நம்மவர்களுக்குத் தக்கப் பிரயோசன மளிக்கவல்ல நூல் எனத் தைரியமாய்க் கூறலாம். இதில் 2000-க்கு அதிகமான "மஸ் அலாக்கள்" அடங்கியிருக்கின்றன. இதனை ஒவ்வொருவரும் வாங்கிப் பார்த்து பயனடைவார்களென மிக மிக எதிர் பார்க்கின்றோம்.

கிரயம் ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:— மானேஜர்,
மத்ரஸா பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்,
அரபிக் காலேஜ், வேலூர்.

F. M. S & S. S. ஏஜெண்டு,
மேஸர்ஸ். K. A. பகீர் முஹம்மது சாஹிப் & Co.,
27, ரம்பா ஸ்டீட், கிள்ளான்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb. Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.